வசந்தம்

சுபானு-ளு 1943, ஜூன் ஆனி-மீ

294
2-3
199786

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

தந்தி: "ராஜா" டெலிபோன் நெ. 218. A.

காணக் கோடி கண்கள் வேண்டும்!

வனப்பு மிக்க வைர மாளிகை!

பெரியகடை வீதி : : கோயமுத்தூர்.

தந்திவிலாசம்: FLOWER.   டெலிபோன் நெ. 175.

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,

அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

8-MAY 1941
MADRAS

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையறுக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங் க்ளாத், வாயில்ஸ், சிட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

சிமென்டின் ஆச்சர்யகரமான
பல வித உபயோகங்கள்:

மூன்று வருஷங்களுக்கு முன்பு வசீகரமான வீடுகளையும், அழகிய தோட்டங்களையும், சுத்தமான மேடு பள்ளங்களற்ற ரஸ்தாக்களையும், நடைபாதைகளையும், நீந்துவதற்கு குளங்களையும் உடைய அழகிய நகரங்களையும் பட்டிணங்களையும் சிமென்ட் மிகதுரிதமாக புதுப்பித்துக் கொண்டிருந்தது. கிராமங்களில் கூட சிமென்டின் உபயோகம் வளர்ந்து வந்தது.

இப்பொழுதோ, சிமென்ட் யுத்தத்திற்குதவும் யுத்த தளவாடமாக மாறிவிட்டது. அழகிய நீந்துவதற்கு வேண்டிய குளங்களிற்கு பதிலாக தளவாடங்களை தயாரிக்கும் சாலைகளையும், விமான நிலையங்களையும், முக்கிய ரஸ்தாக்களையும், ராணுவ கொட்டகைகளாகவும், ஏ. ஆர். பி. முதலிய தற்பாது காப்புகளுக்கு வேண்டிய அநேக முறைகளில் சிமென்ட் ஈடுபட்டிருக்கிறது.

யுத்தம் முடிந்தவுடன் சிமென்ட் திரும்பவும் பொது ஜன உபயோகத்திற்கு ஈடுபடும். ஆதலால் நாம் யுத்தத்தை சீக்கிரத்தில் ஜயிக்க நம்மாலான உதவி புரிவோம்.

வெளியீடு:

தி சிமென்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

மலர் 2 இதழ் 3

வசந்தம்

பொருளடக்கம்

ஙப்போல் வளை ...	... ஆர். கே. எஸ்	
விசுவரூபதரிசனம் ...	... ராஜாஜி	10
தமிழ் மணி ...	... டி. கே. சி	15
காசிக் குங்குமம் ...	... 'சுகி'	17
கலைக் கோயில் ...	... சுத்தானந்த பாரதி	22
கிலாவுத்தீன் ...	... ரா. அ. பத்மனாபன்	30
விசித்திர மாறுபாடு ...	... சி. எம் இராமச்சந்திரன்	37
பூங்கொடி ...	... கே. விஜயராகவன்	40
சிலப்பதிகாரம் ...	... சண்முகம் செட்டியார்	44
கலியாணம் ...	... 'தீபன்'	47
அமிர்தம் ...	... கா. ஸ்ரீ. ஸ்ரீ	52
ஒரு ஆசை ...	... சரத் சந்திரர்	57
கண்ணாமூச்சி ...	... க. லக்ஷ்மி	61
புத்தக ஆராய்ச்சி ...	... 'ரதி'	68
கன்னிப் பெண் ...	... திருஞானம்	69
மலர் மணம் ...	... ...	76

விலை 12 அணா

சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்!

501 சோப்பு சிறு துண்டு துக்கடாக்களையெல்லாம் சேர்த்து கொதிக்கும் ஜலத்தில் கரையவைத்து அந்த ஸோப்பு ஜலத்தை பாட்டிலில் ஊற்றிவையுங்கள். மேலும் உபயோகிக்கலாம்.



ஸோப்பை எப்பொழுதுமே ஜலம் படாதபடி ரப்பர் அல்லது ஒயர் ட்ரே மீது வைத்திருங்கள்.

அழுக்கெல்லாம் இளக துணிமணிகளை வெந்நீரில் நன்கு ஊறவையுங்கள்.



துணிகள் மீது ஸோப்பை லேசாகத் தேயுங்கள். அழுத்தமாக தேய்க்க வேண்டாம். ஸோப்பும் துணிகளும் நீடித்து நிற்கும்.

என்றையும்விட இன்று உங்கள் ஸோப்பு துண்டு துக்கடாக்களைத்தான் நீங்கள் மிகவும் கவனிக்க வேண்டியிருக்கிறது ஏனெனில் அவற்றின் உதவியால் உங்களிடமிருக்கும் ஸ்டாக்கு அதிகநாள் வரும்படி செய்யலாம். 501 ஸோப்புகள் எப்பொழுதுமே நீடித்துழைக்கும்; எனினும் உங்கள் தினசரி சலவைக் காரியத்தில் கீழ்வரைந்துள்ள நான்கு சுலபமான விஷயங்களைக் கவனித்துப் பின்பற்றி வருவீர்களானால் அவைகளை இன்னும் நீடித்து நிற்கச்செய்ய முடியும்.

501 ஸோப்புகள்.

நீளக்கட்டிகளாகவும், கியூபுகளாகவும் டாப்லெட்டுகளாகவும், சீவல்களாகவும் கிடைக்கும். கூட எல்லா மெல்லிய ஆடைகளுக்கும் உபயோகிக்க' 501 ஸ்பெஷல், வில்கு ப்ளேக்குகள் இவையும் கிருமி நாசகயான கார்போலிக்கும் கார்ட்போர்ட் பெட்டிகளிலும் விற்கப்படுகின்றன.

A TATA PRODUCT

மேலும், முக்கியமாக கவனிக்கவும்: உங்கள் தேவைக்கதிகமாக ஸோப்பு வாங்கவே வாங்காதிர்கள்.

டாம்கோ விற்பனை இலாகா:
பெரிய கடை வீதி,
பாலக்காடு.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

PSG பம்புகள்



தேவைகளுக்குத் தகுந்தபடி எல்லா அளவுகளிலும் செய்யப் படுகின்றன. இவைகள் அதிர்ச்சியில்லாமல் தொடர்ந்து வேலே செய்யக் கூடியவை.

நாங்கள் விற்பனை செய்துள்ள ஒவ்வொரு பம்பும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த தென்பதையும், அபிவிருத்தி செய்யப்பட்ட தென்பதையும், நீடித்து உழைக்கக்கூடிய தென்பதையும் நிரூபித் திருக்கிறது.

எல்லாவித வேலைகளுக்கும் தகுந்த பம்புகள் எங்களிடம் கிடைக்கும்.

விவரங்களுக்கு எழுதவும்:-

P. S. G. & சன்ஸ்

தர்மஸ்தாபன இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்

பீளமேடு. கோயமுத்தூர். தென்னிந்தியா.

எமது நிகரற்ற உத்திர வாத

நல்லெண்ணெய்

உங்களது குடும்ப உபயோகத்திற்கு மிக்க மேலானது. சமையலுக்கும் ஸ்னானத்திற்கும் அனேக கனவான்களால் 30 வருஷ உபயோகத்தில் நன் மதிப்பும் நற் சாக்ஷி பத்திரங்களும் பெற்றது. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

டிரேட்மார்க் :

A. P. ராமசாமி செட்டியார்

உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸ் (Redg.)

புதுமார்க்கட், கோயமுத்தூர்.

R. L. சுப்பிரமணிய செட்டி, நிர்வாகஸ்தர்.

ஸ்தாபகர்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—43)	...	ரூ.	27,55,229
ரிஸர்வும் மற்ற நிதிகளும் (25—5—43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

செக்ரடரி: N. கோபால அய்யர்.

நீண்டதமி ழால் உலகை
நேமியன் அளந்தான்

—கம்பர்

ஙப்போல்வளை

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

போன மாதம் நீலகிரி மலையில் கொஞ்ச நாள் தங்கியிருந்தேன். என்னுடன் சில நண்பர்களும் இருந்தார்கள். ஒரு நாள் இரவு சாப்பாடு முடிந்த பின் நாங்கள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தோம். இடையே தமிழைப் பற்றிய பேச்சும் வந்தது. தமிழ் நூல்களின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம். எங்களில் எவரும் தமிழ் இலக்கியங்களை அதிகம் படித்தவர்களல்ல. தமிழ் இலக்கண ஞானமோ பூச்சியம் தான்; இந்த லட்சணத்தில் தமிழைப்பற்றி என்ன பேசுவது!

* * *

குளிர்ந்த காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. எங்களைச் சுற்றிலும் மலைகளின் ஆழ்ந்த அமைதி. எதிரிலுள்ள கற்பூர மரச் சோலையிலிருந்து மெல்லிய மணம் காற்றில் கலந்து வீசிக் கொண்டிருப்பது சன்னல் வழியாகவும் வந்தது. இருண்ட மேகங்களுக்கிடையே நிலவின் மங்கிய வெளிச்சம் ‘பளிச், பளிச்’ சென்று அடித்துக் கொண்டிருந்தது. இயற்கை தரும் இந்த இன்பம் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டது. என்னுடைய நண்பர் வேலுசாமி நாயுடு கனவிலிருந்து விழித்தவர் போல், “ஆத்திச் சூடி ஞாபகம் இருக்கிறதா?” என்று கேட்டார். எங்கள் எல்லோருக்கும் பூர்வஜன்ம ஞாபகம் வந்தது போல் எங்களுடைய குழந்தைப் பருவத்தின் நினைவு உண்டாயிற்று.

* * *

“அறஞ்செய விரும்பு—ஆறுவது சினம்—இயல்வது கரவேல்........” பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் போல் நாங்கள் ஞாபகத்துக்கு எட்டிய வரையில் தனித்தனியாக பாடம் ஒப்புவிக்க ஆரம்பித்தோம். “ஙப்போல் வளை—” என்றார் வேலுசாமி நாயுடு.

"அதற்கு என்ன சார் அர்த்தம்?" என்று வேதாசல முதலியார் கேட்டார்.

என்னென்னவோ வேடிக்கையான வியாக்யானங்கள் எல்லாம் கிளம்பின.

* * *

நப்போல் வளை—"வளை" என்றால், "சுற்றத்தாரைத் தழுவிக் காப்பாற்று" என்று பொருள். "ந" என்னும் எழுத்தைப்போல் உன் சுற்றத்தாரைத் தழுவிக் காப்பாற்று—என்பது இந்த வாக்கின் பொருள்.

"ந" என்னும் எழுத்து எந்த விதமாகத் தன் சுற்றத்தாரைத் தழுவிக் கொண்டிருக்கிறதென்பதைப் பார்ப்போம்.

இந்த எழுத்தின் சுற்றத்தார் யார்? "நா" முதல் "நௌ" வரையிலுள்ள பதினொரு எழுத்துக்களும்தான்.

இந்தப் பதினொரு எழுத்துக்களும் வழக்கத்தில் உபயோகப்படுவதில்லை. உதாரணமாக சில வார்த்தைகளைப் பார்க்கலாம். மங்காத; வாங்கின; சங்கீதம்; பங்குனி; சங்கூத; பங்கெடுத்தேன்; எங்கே; மங்கை; சங்கொலி; பூங்கோதை; பழங் கௌரவம்:

மேலே கண்ட சொற்களில் நகர ஒலி இருந்த போதிலும், நா, நி, நீ,....முதலிய எழுத்துக்கள் உபயோகப் படுவதில்லை. ங என்னும் ஒரு எழுத்தே அதைச் சேர்ந்த மற்ற எல்லா எழுத்துக்களுக்குமாக நின்று ஒலிக்கிறது. இதுதான் 'ந' என்னும் எழுத்து தன்னுடைய சுற்றத்தாரைத் தழுவும் விதம். ஒரு மனிதன் தன்னைச் சேர்ந்தவர்களை ஆதரிக்க வேண்டும் என்பது "நப்போல் வளை" என்னும் வாக்கின் கருத்து.

* * *

என்னுடைய நண்பர் வேலுசாமி நாயுடு ரொம்ப யோசனைக்காரர். அவருடைய மூளை ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டே இருக்கும். சின்னஞ்சிறு விஷயங்களைப் பற்றிக்கூட இரவெல்லாம் படுக்கையில் படுத்துக்கொண்டு யோசனை செய்தபடி இருப்பார். அதனால் அவருக்கு இராக் காலத்தில் சரியாய்த் தூக்கம் கூடப் பிடிப்பதில்லை. இப்படி சதா யோசனை செய்வதால் தான் அவருடைய தலையும் வழுக்கைத் தலையாய் விட்டது!

அன்று இராத்திரியெல்லாம் 'நப்போல் வளை'யைப் பற்றி யோசனை செய்தார் நாயுடுகாரு. மறுநாள் காலையில் காப்பி சாப்பிட நாங்கள் எல்லோரும் உட்கார்ந்தபோது, "என்ன வேலுசாமி ராத்திரி யெல்லாம் தூக்கமே இல்லையோ?" என்று நான் கேட்டேன்.

"தூக்கமாவது ஒண்ணாவது. நப்போல் வளையைப் பற்றி ஒரு சந்தேகம்" என்றார்.

"செட்டியார்தான் பொருளை ரொம்ப விளக்கமாகச் சொன்னாரே, இன்னும் என்ன சந்தேகம்?" என்றார் வேதாசலம்.

"பொருளைப் பற்றி சந்தேகம் இல்லை. வேறு ஒரு சந்தேகம். நா முதல் நௌ வரையில்

உள்ள பதினொரு எழுத்துக்களும் வழக்கத்தில் உபயோகப் படுவதே இல்லை என்றால், அனாவசியமாக ஏன் இந்தப் பதினொரு எழுத்துக்களையும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்களை உபத்திரவப் படுத்த வேண்டும்? இந்தப் பதினொரு எழுத்துக்களையும் எழுதப் படிக்க முயற்சி செய்வதில் ஒவ்வொரு குழந்தைக்கும் எவ்வளவோ வீண் கஷ்டம். தமிழில் இந்தப் பதினொரு எழுத்துக்களும் இல்லாமலிருந்தால், எனக்குப் பள்ளிக் கூடத்தில் எத்தனை பிரம்படி குறைந்திருக்கு மென்று ராத்திரியெல்லாம் யோசனை செய்து கொண்டிருந்ததில் தூக்கமே வரவில்லை" என்று முடித்தார், வேலுசாமி நாயுடு.

என்னுடைய நண்பர் சில சமயங்களில் வேடிக்கைப் பேச்சில் தன்னை அறியாமல் பெரிய விஷயங்களைச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ங காரத்தைச் சேர்ந்த பதினொரு தமிழ் எழுத்துக்களைப் பற்றி அவர் சொன்னதில் அருமையான பொருள் இருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது. வழக்கத்தில் கொஞ்சங்கூட இல்லாத எழுத்துக்களை ஏன் நம்முடைய மொழியில் வைத்திருக்க வேண்டும்? கற்றறிந்த தமிழ்ப் பெரியார்கள் இதைப்பற்றி சிந்தனை செய்ய வேண்டும்.

* * *

அன்று சாயங்காலம் நாங்கள் உலாவப் புறப்பட்டோம். "சில புத்தகங்கள் வாங்க நான் கடைக்குப் போக வேண்டும்" என்று சொல்லி எங்களைப் பிரிந்து நாயுடு புறப்பட்டு விட்டார்.

இரவில் சாப்பாட்டிற்குப் பின் எல்லோரும் கூடியபோது "மூன்று அணாவுக்கு மூன்று பெரிய புத்தகங்கள் வாங்கி வந்தேன்" என்றார். இந்த விலைக்கு என்ன வாங்கினார் என ஆவலோடு பார்த்தோம். ஆத்திச் சூடி; கொன்றை வேந்தன்; உலக நீதி!

* * *

அன்று இரவு எனக்குத் தூக்கம் பிடிக்க வில்லை. கவிச் செல்வம் (கிளாசிக்ஸ்) என்பது என்னவென்று ஒரு ஆங்கில ஆசிரியர் என்னவோ சொல்லியிருக்கிறாரே — ஞாபகத்திற்கு வரவில்லை — இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

"கவிச் செல்வ மென்பது, நம்முடைய குழந்தைப் பருவத்தில் மகிழ்ச்சியைக் கொடுத்து, வாலிபப் பருவத்தில் உண்மை உணர்ச்சியை ஊட்டி, விருத்தாப்பிய காலத்தில் இன்பத்தைத் தரும் ஒரு அழியாத செல்வம்."

தமிழ் மக்களுக்கு இவ்விதச் செல்வம் மூன்று அணாவுக்கா கிடைக்கிறது? தமிழ் மக்களுடைய பாக்யமே பாக்கியம்!

அதோ, பொழுது விடிந்து விட்டது! "வைகறைத் துயிலெழு" என்னும் ஆத்திச்சூடி வாக்கு ஞாபகத்திற்கு வரவே படுக்கையைவிட்டு எழுந்தேன்.

விசுவரூபதரிசனம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சேஷாசாஸ்திரிகள் : வான் நூல் என்பது சூட்சும யந்திரங்களும், தொலை நோக்கிகளும், நிறச்சேதிக்குழாயும் அமைத்துக்கொண்டு நுட்பமான கணக்கும் கணித்து சோதனையும் செய்து அறிஞர்கள் ஒப்புக்கொண்ட அறிவுத் தொகை. அதில் நான் சொன்னதெல்லாம் மிகச் சிறிய பாகம். இன்னும் எவ்வளவோ பெரிய விஷயங்கள் இருக்கின்றன. தொலை நோக்கி வைத்து புகைச் சோதிகள் இருபது லட்சம் கண்டிருக்கிறார்கள். அவைகளில் மிகத் தொலையிலுள்ளவை (10^8) எட்டடுக்கு ஒளி வருஷத் தொலை. எட்டடுக்கு ஒளி வருஷங்கள் என்றால் மைல் கணக்கில் இருபது அடுக்கு எண்ணிக்கையாகும். இதற்கப்பாலுங்கூட விசுவ வெளி உண்டு, ஜோதிகளும் உண்டு. நம்முடைய தொலை நோக்கியினுடைய வரம்பு பலத்தின் அளவே. தொலையிலுள்ள புகைச் சோதியிலிருந்து ஒளிக்கிரணங்கள் நம்முடைய தொலை நோக்கியினுள் பாய்ந்து அதை நாம் காண்கிறோம். இன்று நம் கண்ணுக்குள் பிரவேசிக்கும் கிரணம் தன் தோற்றகத்திலிருந்து புறப்பட்டு 10^8 வருஷங்களாயிற்று. அதன் விசையோ நிமிஷம் ஒன்றுக்கு ஒரு கோடி மைல். அதற்கும் அதிகமேயொழிய குறைவில்லை. அந்த விசையுடன் ஒவ்வொரு விநாடியும் பறந்து வந்த பிரகாசம் எட்டடுக்கு வருஷங்களுக்குப் பின் நம்மை வந்து சேர்ந்தது. இவ்வாறு அந்த ஒளியாற்றின் ஒவ்வொரு ஒளிக்கணமும் ஒன்றை அடுத்து ஒன்று வந்து கொண்டிருக்கிறது. இன்று ஒரு சமயத்தில் நாம் தொலை நோக்கி வைத்துப் பார்க்கும் வெளிச்சமானது நட்சத்திரத்தை விட்ட காலத்தில் இந்த பூவுலகத்தில் மனித சாதியே உற்பத்தியாயிருக்கவில்லை. அதன் யாத்திரா காலத்தில் இந்த பூமண்டலத்தில் முதலிலிருந்து கடைசி வரையில் எல்லாம் நடைபெற்றது.

தீக்ஷிதர் : சாஸ்திரிவாள், என்ன சொல்லுகிறீர்கள்? மனிதசாதி எப்போது உற்பத்தியானதென்கிறீர்கள் ? அதற்கும் கணக்கு போட்டு விட்டார்களா ?

சே: ஆகா, போட்டிருக்கிறார்கள். மனிதசாதி உற்பவம் மூன்று லட்ச வருஷங்களுக்கு முன்தான் ஆனதாக ஆராய்ச்சி ஊகம். அதற்கு முன் வேறு உயிர் சாதிகள் பல கோடி ஆண்டுகளாக இருந்தன.

தீ : போகட்டும் போங்கள். நம்முடைய பெரியவாள் கணக்கு கொஞ்சம் சரியாகத்தான் போயிற்று. கிறிஸ்தவர்கள் என்னவோ இது 1943-ம் வருஷம் என்கிறார்களே, அது தப்புதானே?

சே : அவர்கள் சொல்லும் கணக்கு கிறிஸ்துநாதர் பிறந்து இத்தனை ஆண்டு என்கிறார்கள். உலக சிருஷ்டி அவர்கள் வேதத்தில் 5,000 ஆண்டுகளுக்கு முன் ஒரே காலத்தில் ஆனதாக சொல்லப் படுகிறது.

தீ : அது தவறுதானே ?

சே : ஆமாம், அதை அவர்கள் இப்போது ஒருவாறு தள்ளி விட்டார்கள்.

தீ : தங்களுடைய மதம் பொய்யாய்ப் போச்சு என்று அவர்கள் இப்போதாவது ஒப்புக்கொள்ளுகிறார்களா ?

சே : அந்த விஷயத்தில் மட்டும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் மதத்தை அதனால் விட்டு விடவில்லை.

தீ : அப்படித்தான் பிடிவாதம் செய்வார்கள். ஒன்று பொய்யானால் எல்லாம் பொய்தானே?

சே : அப்படி வாதித்தால் நம்முடைய சுருதிகளும் பொய்யாகிப் போமே.

தீ : சரி, விஷயம் சொல்லுங்கள். ஜகத்து முழுதும், உயிர்களும் நட்சத்திரங்களும் சூரிய சந்திராதிகளும் ஒரே சமயம்தானே சிருஷ்டிக்கப் பட்டன.

சே: இல்லை, இல்லை. இந்த பூமண்டலத்தில் உயிர் தோன்றியது முப்பது கோடி ஆண்டுகள் என்றும் பல தாவரங்களும் பல சாதி ஜந்துக்களும் உண்டாகி பிறகு பல கோடி வருஷங்களுக்குப் பின் மூன்று லட்ச வருஷங்களுக்கு முன்தான் மனிதசாதி தோன்றியதாகவும் தற்கால ஆராய்ச்சி ஊகம். நட்சத்திரங்கள் பூமியில் உயிர் தோன்றுவதற்கு பல்லாயிர கோடியாண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்தன.

தீ : சொல்லுங்கள்.

சே: இன்று தொலை நோக்கியின் வழியாக ஒரு புகைச் சோதியைப் பார்க்கும் போது அந்த காட்சிக்குக் காரணமான ஒளிக் கணங்கள் தம் தோற்றகத்தை விட்டு புறப்பட்ட நாளில் இந்த பூவுலகத்தில் உயிர் என்பதே கிடையாது. அதன் நெடும் யாத்திரையில் 99 பாகம் தீர்ந்து ஒரு பாகம் பாக்கி யிருந்த போதுதான் மனித சாதி உற்பவமாயிற்று. உற்பவமாகி குரங்கு வாழ்விலிருந்து மனித வாழ்க்கைக்கு தேறுவதற்கு பல ஆண்டுகள் ஆயின, பிறகு நாகரிக வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை மனிதன் அமைத்துக் கொண்டான். இன்னும் நாம் பேசிய அந்த ஒளிக் கிரணத்தின் யாத்திரை முடியவில்லை. நாகரிகம் வளர்ந்து அறிவு வளர்ந்து தொலை நோக்கிகளும் மற்ற நுண் கருவிகளும் பூவுலகில் தோன்றின. பதினாயிரக் கணக்காக மானிட தலைமுறைகள் உண்டாகி வாழ்க்கை நடத்திய பின்னர்தான் அந்தக் கிரணம் தன் யாத்திரையை முடித்து நம்முடைய தொலை நோக்கிக்குள் பிரவேசித்து நம்முடைய கண்ணை எட்டிற்று. அந்த யாத்திரையின் விசையோ நிமிஷத்திற்கு ஒரு கோடி மைல். அதன் மேல் யாத்திரையின் தொலையை கற்பனை செய்து கொள்ளுங்கள்.

தீ: சுவாமி, போதும், இனி கேட்டுக் கொண்டே போனால் பைத்தியம்தான் பிடித்து விடும்.

சே : இவ்வாறு கற்பனைக்கும் தாண்டிப் போன தொலைகளில் பிரமாண்டமான பரிமாணம் கொண்ட கோளங்கள் மகா வேகத்துடன் இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஒரு சூரியனுக்குள் லட்சக்கணக்கான பூமண்டலங்களை ஒரு பானைக்குள் உளுந்து போட்டுமூடுவது போல் அடைக்கலாம். அத்தகைய சூரியனைப்போல் பல சூரியன்களை ஒரு நட்சத்திரத்தில் போட்டு அடைக்கலாம்.

தீ : சொல்லுங்கள்.

சே: இந்த பூ மண்டலம் சூரியனுக்கு ஒன்பது கோடி மைல் தூரத்தில் இருந்து கொண்டு மணிக்கு ஆயிரம் மைல் விசையாக சுழன்று கொண்டு அதை விட எழுபது மடங்கு வேகமாக சூரியனை மையமாக வைத்து வட்டமிட்டுக் கொண்டு மிருக்கிறது. சுற்று வட்டத்தின் அளவு 60 கோடி மைல்கள். 60 கோடி மைல் பிரயாணம் ஒரு வருஷத்திற்குள் முடிகிறது. மணி ஒன்றுக்கு 72,000 மைல் விசை.

தீ: எங்களையும் தூக்கிக் கொண்டு!

சே: ஆம் எங்களையும் ஹிமோத் கிரி, கங்கா, காவேரி, நான்கு திக்கிலுள்ள மகா சமுத்திரங்கள் எல்லாவற்றையுமே தூக்கிக் கொண்டு, ரயில் வண்டியில் நம்முடைய கூசா பெட்டி, மூட்டை, மூட்டுப் பூச்சி, எறும்பு, எல்லாவற்றையும் தூக்கிப் போகுவது போல் போகிறது. தினம் ஒரு சுழல் சுழன்று கூடவே நெடும் பிரயாணமும் செய்கிறது. பூமி வட்டமிடும் இந்த 60 கோடி மைல் வட்டத்தையும் அதன் மையத்தில் நிற்கும் சூரியனையும் கிரகங்களையும் சேர்த்து ஒரு கடுகளவாக கற்பனை செய்து கொள்ளவும்.

தீ: ஏன் அப்படிச் செய்யச் சொல்லுகிறீர்கள்?

சே: ஒன்று மில்லை. சொல்லுகிறேன் கேளுங்கள். இத்தனையும் சேர்ந்து ஒரு கடுவளவாகச் சுருங்கிப் போனதாக வைத்து, அதே வீதாசாரம் நட்சத்திரப் பிரதேசம் குறுகிப் போனாலும் அது ஒரு பூ மண்டலத் தளவாக நிற்கும். இந்த பிரமாண்ட விசுவ மண்டலத்தில் ஒரு கடுகளவு போலாகும் 60 கோடி மைல் வட்டம்.

தீ: பூ மண்டலத்துக்கும் ஒரு கடுகுக்கும் உள்ள வீதாசாரம் இந்த நட்சத்திரப் பிரதேசத்திற்கும் பூ மண்டல கதி வட்டத்திற்கும் என்கிறீர்கள். ஆகா, அப்பிரமேயம் என்றால் இதுவே.

சே: சோதிக் கோளங்களின் எண்ணிக்கைக்குப் போனாலோ, அதுவும் இவ்வாறே அளவிட முடியாதவை. தூசி நிறைந்த ஒரு பெரிய நகரத்தில் ஒவ்வொன்றாக எண்ணினால் எத்தனை தூசியணுக்கள் காற்றில் பறக்குமோ அத்தனையாகும். அத்தனை தூசி மொத்தத்தில் ஒரு தூசிக் கணமாகும் சூரியனும் அதற்குள்ளடங்கிய இந்த பூ மண்டலமும் அதன் கதி வட்டமும். அந்த தூசி யணுவினுக்குள் ஒரு லட்சத்தில் ஒரு பங்கு கூட இல்லை இந்த சாகரமும் மலையும் நதிகளும் நிறைந்த பூகோளத்தின் பரிமாணம். விசுவ மண்டலத்திலுள்ள ஜோதி கோளங்களின் மொத்த எண்ணிக்கைக்காக பெரிய தொரு நகரத்தில் காற்றில் பறக்கும் தூசி யணுக்களின் எண்ணிக்கையை உபமானமாகச் சொன்னேன். ஆனால் காற்றில் உள்ள தூசி யணுக்கள் ஒன்றுக் கொன்று மிக நெருங்கிக் கிடக்கின்றன. விசுவ வெளியில் அம்மாதிரி நெருக்கடி கிடையாது. இத்தனை கோளங்களும் பைத்தியக்கார வேகத்துடன் ஒவ்வொன்றும் இயங்கிக் கொண்டிருக்க, ஒன்றுடொன்று யுகாந்தரத்திலும்—மோத முடியாதளவு ஒன்றுக் கொன்று அகன்று கிடக்கின்றன. நமக்கும் சூரியனுக்கும் ஒன்பது கோடி மைல் இடைவெளியென்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மற்ற இடைவெளிகளும் இதற்கு மேலேயே. ஒரு பெரிய நகரத்திலுள்ள தூசி யணுக்களின் எண்ணிக்கை

ஆகும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை. இந்த தூசித்திரளை ஒரு தூசியணுவுக்கும் மற்றொரு தூசியணுவுக்கும் ஒரு பர்லாங்கு இடை வெளி வைத்து அமைத்தால் எல்லா தூசித் துவள்களும் அடங்க நிலையிடம் எவ்வளவு பரிமாணமாகும்? இது விசுவ மண்டலப் பாழின் பரிமாணம். கற்பனை செய்யப் பார்த்தோமானால் அப்பிரமேயத்வம் என்றால் என்ன என்பது ஒருவிதமாக உணர்ச்சிக்கு வரலாம்.

தீ: ஆகா! இது வேதாந்தம் என்று நீங்கள் முதலில் சொன்ன சொல் முழுதும் உண்மை. சொன்னாலும் கேட்டாலுமே இதில் புண்ணியம் உண்டு.

சே: இந்த பூமண்டலத்தின் பாரத்தையும் அளந்திருக்கிறார்கள்.

தீ: பாரம் கூடவா எடை போட்டு விட்டார்கள்? சொல்லுங்கள்.

சே: ஆமாம், சூரியனுடைய பாரத்தையும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். எல்லாம் வெகு நுட்பமான கணித சாஸ்திர முறையில் செய்து முடித்திருக்கிறார்கள். வெறும் பேச்சல்ல.

தீ: சொல்லுங்கள். நீங்கள் சொல்லுவதையெல்லாம் நம்பித்தான் தீர வேண்டும்.

சே: நிறையைப் பற்றி சோதனை செய்திருப்பதில் பூமியின் நிறை ஒரு கால் ரூபா எடையாக வைத்துக் கொண்டால், தாரதம்மிய விதாசாரப்படி சூரியன் ஒரு டன் பார மாகும். ஒரு டன் என்றால் தெரியுமோ இல்லையோ?

தீ: ஆகா ரயில் வண்டியில் பாரம் ஏற்றுகிறார்களே அது தானே?

சே: ஆமாம், ஒரு டன் எங்கே? ஒரு கால் ரூபாய் எடை எங்கே? இரண்டு மாடுகள் பூட்டிய ஒரு வண்டியில் ஐந்துபேர்கள் உட்கார்ந்தால், மனிதர்கள், மாடுகள், வண்டி எல்லாம் சேர்ந்து ஒரு டன் பாரமாகலாம். பூமியின் பாரம் டன்களில் சொன்னால் 6-க்குப் பின் 21 சுழிகளிட்ட எண்ணிக்கை. இவ்வளவு பாரமான பூமி ஒரே ஒரு கால் ரூபாய் எடையானால் சூரியன் ஒரு டன் பாரமாகும். அக்கினி நட்சத்திரம் அந்த விதா சாரத்தில் மூன்று டன் பாரமாகும்.

தீ: எல்லாம் மாயை போல் தான் சொல்லுகிறீர்கள்.

சே: மாயையுமல்ல, தீக்ஷிதர்வாள். எல்லாம் மிக சாதுர்யமாக நிருமாணிக்கப் பட்ட யந்திரங்களை அமைத்துக் கொண்டு கணித சாஸ்திரத்தின் நுட்பங்களை பயன் படுத்தி மிக கவனத்தோடு சோதித்துச் சொல்லப் பட்ட விஷயங்கள். பூர்வீகர்கள் கிரகணங்களை கணித்துச் சொல்லவில்லையா? இப்போது தொலை நோக்கிகளும், நுண் நோக்கிகளும், நிறச் சேதக்குழாயும் வைத்து சோதித்து நம்முடைய கண்ணைக் காட்டிலும் சூட்சுமமாக பதிவு செய்யும் ஒளிப்பதிவு கருவிகளையும் அமைத்துக் கொண்டு பிரமாண்ட தொலைகளிலுள்ள பொருள்களின் ரகசியங்களையும் கண்டு வருகிறார்கள். அவசரப் படுவதில்லை, மயங்குவதில்லை, அகங்காரப் படுவதில்லை, தான் எண்ணியதே மெய் என்று ஒருவனும் பிடிவாதம் செய்வதுமில்லை. கோபமில்லை, துவேஷமில்லை. இதனால் அறிவுத் தொகையின் பிரவாகம் சுத்த கங்கை போல்பெருகி வருகிறது. நம்முடைய சிற்றறிவுக்கு

அடங்கவில்லை என்று ஜகத்தை பொய் அல்லது மாயை என்று சொல்லி விடலாமா ?

தீ : எறும்பு தன்னறிவுக்கு எட்டாத யானையைப் பற்றிச் சொல்லக் கேட்டு யானையே பொய் என்று சொல்லுவது போல் என்கிறீர்கள்.

சே : சரியாகச் சொன்னீர்கள். உலகத்திலுள்ள கடற்கரைகளையெல்லாம் ஒன்று கூட்டி அந்த கடற்கரை மணலையெல்லாம் குவித்தால், அந்த மணற் குவியலில் ஒரு மணலின் ரவையாகும் இந்த பூ மண்டலம், அதைத் தொத்திக் கொண்டு நிற்கின்றன மனித சாதியும் பறவை மிருக பூச்சி புழு வர்க்க கோடிகளும் கடலிலுள்ள நீர் வாழுயிர்களும். இவ்வளவு அற்பமான மனிதன் உலகத்தையே அளக்கப் பார்க்கிறான். ஈசுவர ரகசியத்தையும் ஓரளவு கண்டு மீதியையும் காண ஆசைப் படுகிறான். உலகமே தனக்காக ஆன சிருஷ்டி என்றும் எண்ணுகிறான்.

தீ : இதன் மத்தியில் நம்முடைய சந்தோஷம், சுகம், துக்கம், பொறாமை, கோபம், துவேஷம். கலகம்—சாஸ்திரிவாள்! வான் நூலும் பௌதிகமும் தாங்கள் சொன்ன படியே விசுவரூப தரிசனம்தான். அதிசயோக்தியல்ல. நமோ நம! இந்த சித்திரையிலாவது வெங்கடராமனுக்கு மூகூர்த்தம் நிச்சயம் செய்துவிட வேண்டும். பெண்ணுக்கு வயதாய் விட்டது. இனி தள்ளி வைக்கக் கூடாது. வீட்டில் ரொம்ப நிர்ப்பந்தம் செய்கிறாள். உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நமோநம :

தமிழ் மணி

'சிற்றம்பலத்தான்'

நடராஜ மூர்த்தி சிதம்பர ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கிறார். ஏன், அநேகமாய் ஒவ்வொரு சிவன் கோயிலிலும் நடராஜ உருவத்தை எழுந்தருளச் செய்திருக்கிறார்கள்.

உருவத்தின் உயரம் பலவகைப் பட்டிருக்கும்—ஒரு அடி முதல் ஏழடி வரைக்கும் இருக்கலாம். சிதம்பர நடராஜர் சுமாராக மூன்றரை அடி உயரம். அற்புதமாய் அழகமைந்த உருவம்.

உருவத்தின் மூலமாக எத்தனை எத்தனையோ விஷயங்களைப் பார்க்க வேண்டும். அதாவது எத்தனையோ விஷயங்களுக்கு அது அடையாளம். ஒரு விஷயத்தை நாம் பார்க்கலாம்.

எந்தத் திசையை நோக்கிச் சென்றாலும் முடிவில்லாதபடியே இறைவன் இருக்கிறான். அவனது ஆனந்த நிலையை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் நடனம் ஆடுகிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

பாதாளம் பாதாளம் என்று கீழே போகலாம். அங்கேயும் முடிவில்லை. அப்படியேதான் மேலே நோக்கிப் போனாலும், பக்கங்களில்ப் போனாலும் முடிவில்லைதான்.

முடிவில்லாத எங்கும் நிறைந்த ஆனந்த வஸ்துவைக் குறிக்கவே சிதம்பரத்திலுள்ள நடராஜ மூர்த்தியின் உருவம் ஒரு அழகான அடையாளமாய் எழுந்தது. அடையாளத்தின் குறிப்பு என்ன? பார்க்கலாம்:

(கட்டளைக் கலித்துறை)

அடிஒன்று பாதலம்
ஏழிற்கும் அப்புறம்
பட்ட(து); இப் பால்
முடி ஒன்(று) இவ் அண்டங்கள்
எல்லாம் கடந்தது;
முற்றும்வெள் ளைப்
பொடி ஒன்று தோள் எட்டும்
திக்கின் புறத்தன;—
பூங்கரும் பின்
செடிஒன்று தில்லைச்
சிற்றம் பலத்தான்
திருநட மே

— பட்டினத்தார்

கோயில் நான் மணிமாலை.

[அடி ஒன்று — வலது பாதமானது; பாதலம் ஏழு-எட்டி எட்டிப்போகும் பாதாளம்; இப்பால் —மறித்து இப்புறம் பார்த்தால் அதாவது விண்ணைப் பார்த்தால்; முற்றும் வெள்ளைப் பொடி ஒன்று —முழுதுமாய்த் திரு நீறு பூசிய; திக்கின் புறத்தன—திக்குகளுக்கு அப்பால்ப் போய் வீசும். பூங்கரும்பின் செடி ஒன்று—நடந்து போனால் கருப்பே களையாகவும்

காட்டுச் செடியாகவும் நின்று இடையூறு செய்வன, நீர்வளமும் நிலவளமும் அப்படி; தில்லைச் சிற்றம்பலத்தான்—சிதம்பர ஸ்தலத்தில் எழுந்தருளிய நடராஜ மூர்த்தியின்; திருநடமே—அற்புத நடனமானது.]

நம்மவர்கள் உலகத்தில் இல்லாத அற்புதமான ஒரு சிறு அடையாளத்தைக் கொண்டு—நடராஜ உருவத்தைக் கொண்டு—எவ்வளவு தூரம் போயிருக்கிறார்கள் பாருங்கள்.

அங்கிங்கு எனாதபடி
எங்கும் பிரகாசமாய்

உள்ள வஸ்துவை அல்லவா பற்றிக் கொண்டார்கள்!

கட்டளைக் கலித்துறைப் பாடலைப் பாடிக்கொண்டே இருக்கலாம். தமிழுக்கான மந்திர சக்தி இன்னதென்று தெரியவரும்.

புதுக்கவிதை

காசிக்குங்குமம்

"சுசி"

சுந்தரம்

உலகத்திலேயே அற்புதமான பொருள் மனசுதான். இந்த மனசு என்னென்ன அற்புதமான விசித்திரங்களை யெல்லாம் செய்கிறது? இதன் ஆழத்தையும், அகலத்தையும் கரை காணமுடியாது. அகண்டமான இந்த மனசிற்கு இருக்கும் ஆற்றலும், திறமையும் உலகத்திலே வேறெதற்குமே இல்லை. மனசு என்ற பொருள் மனிதனுக்கு இல்லா விட்டால் கோப—தாபம், அன்பு—பகைமை, இன்ப துன்பம் இதெல்லாம் ஏது? வெறும் உணர்ச்சியற்ற கட்டையாகத்தானே இருக்க வேண்டும். குங்குமம் இல்லாத குமரியின் முகம் போல!

என்னுடைய தந்தையின் மனசு தங்கமானது. ஏழ்மையான நிலையிலும் என்னைப் படிக்கப் பாட வைப்பதில் ஊக்கம் கொண்டு நான் பீ. ஏ. படித்ததும் அடைந்த ஆனந்தத்தை நான் விவரிக்க முடியாது. நான் சட்ட கலாசாலையில் படித்து வரும் போதும் என் தந்தையார் இன்பக் கனவுகள் கண்டு வந்தார். பீ. எல். பட்டம் பெற்ற அன்று எங்கள் வீட்டில் விருந்தும் விநோதமும், ஏக அமளிகுமளியாக இருந்தது.

படித்துப் பட்டத்தை வாங்கி விட்டால் மனசு திருப்தியாகி விடும். வயிறு திருப்தியாகாதே! வேலை பார்த்து சம்பாதிக்க வேண்டாமா? என் தந்தை தனது வக்கீல் நண்பர் ஒருவரிடம் அழைத்துச் சென்றார்.

வக்கீல், அந்த ஊரில் ஒரு பிரபலமான பெரிய வக்கீல். நானும் என் தந்தையும் அவர் வீட்டை அடைந்தோம். வக்கீல் தன்னுடைய அறையில் இருப்பதாகவே வேலையாள் சொன்னான். நாங்கள் அறைக்குள் நுழையும் போது, ஒரு பெண்ணின் சிரிப்புச் சத்தம் கேட்டது. அக்குரலோசையில் மனசைப் பறிகொடுத்து விட்டேன். எங்கள் காலடி ஓசை கேட்டு, அப் பெண் மான்போல் மருண்டு, அங்கிருந்து நடந்தாள். என்னை அறியாமலே என் மனதும் துள்ளித் துடித்தது.

வக்கீல் என் தந்தையையும், என்னையும் அன்போடு வரவேற்றார். தந்தையார், "குழந்தைக்கு கல்யாணம் ஆய்விட்டதோ?" என்று சம்பிரதாயத்தை ஒட்டி பேச்சை ஆரம்பித்தார். எடுத்தவுடன் இக்கேள்வி கேட்டதும் வக்கீல் கண்ணீர் உகுத்தார். என் மனசும் வேதனை அடைந்தது. சிறிது மௌனம் நிலவிய பின், தமது பெண், கணவனை இழந்தவள் என்ற விவரத்தைச் சொன்னார். அதைச் சொல்லும்போது அவர் நெஞ்சம் அடைந்த குமுறல் அலைகளை, முகத்தில் ஏற்பட்ட சுருக்கங்களிலிருந்து அறிந்து கொண்டேன். பிறகு, ஊர் விஷயங்கள் பேசி முடித்து முடிவாக என்னை ஜூனியர் வக்கீலாக

அவருடன் பழக அநுமதி தரும் படி என் தந்தை கேட்டார்.

சந்தோஷத்தோடு வக்கீல், சம் மதித்தார். என் தந்தைக்குத் தாம் பெருத பேரின்பத்தைப் பெற்று விட்டதாக அத்தனை ஆனந்தம். எனக்கோ அவ்வளவு பெரிய வக் கீலிடம் ஜூனியராக பிராக்டிஸ் செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென மனதிற்குள் எண் ணிக் கொண்டேன்.

நல்ல நாளாகப் பார்த்து வேலை க்கு வருவதாக வக்கீலிடம் சொல்லிவிடை பெற்ருேம். நான் தாழ்வாரத்தில் வந்த போது, வீட்டை ஒரு முறை சுற்று முற் றும் கவனித்தேன். ஜன்னல் கம்பிக்குப் பின்னுல் வக்கீலின் மகள்—சரோஜினி நின்று கொண் டிருந்தாள்.

விசாலமான கண்களில், நல்ல களை. குறுகுறுப்பும், குறும்புத் தனமும் முகத்தில் விளையாடின. கரிய புருவமும், கலங்கிய கண் ணும், கருத்தைக் கவர்ந்து என் மனசை என்னவோ செய்தது. மொத்தத்தில் மூக்கும் முழியும், செவ்விதழும் சிவந்த கன்னமும், என் மனதில் சஞ்சலத்தை உண்டு பண்ணின. இதெல்லாம் நியா யமா, தர்மமா என்று கேட்பது போல் அவள் பார்வை என் நெஞ்சை உறுத்தியது. ஆனல் மனசுதான் விசித்திரமாயிற்றே! என்னென்ன உள்ளக் கிடக்கை களையும், சந்தோஷங்களையும் உள் ளுக்குள்ளேயே அநுபவிக்கின் றன. அது பருவத்தின் வசந்த காலமாயிருந்தால்...........கேட்பா னேன்?

நான் அந்த வக்கீலிடம் நல்ல நாளாகப் பார்த்து, ஜூனியராக அமர்ந்தேன். மனசோ, வக்கீல் தொழிலோடு நிற்க வில்லை. வரம்பு கடந்த சிந்தனைகளும், ஆசைகளும் ஏற்பட்டன. தந்தையார் சொல் லியிருந்த, "அடே; நல்லவனுகப் படித்துப் பாஸ் செய்தது போல் தொழிலைப் 'பழகிக் கொள்' மனம் போனபடி போகாதே" என்ற இந்தச் சொற்கள் நாளா வட்டத் தில் மறைந்து விட்டன.

முன்பெல்லாம் யாராவது, "சந் திர பிம்பம் போன்ற முகம், கிளி கொஞ்சுகிற மாதிரி அழகு" என்று சொன்னுல், அவர்களை நான் நையாண்டி செய்வேன். சரோஜினியைப் பார்த்த பின் 'அதெல்லாம் உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை' என்ற எண்ணம் பிறந்தது. சரோஜினியின் மனதில் என்னென்ன விதமான எண்ணங் கள் பிரதிபலித்தனவோ?

சரோஜினி

நான் பெண்ணுய்ப் பிறந்தவள். பிறர் வீட்டில் குடியும், குடித்தன மும் செய்ய வேண்டியவள். ஆனல் அந்தப் பாக்கியம் இல்லா மல் பிறந்த வீட்டிலேயே இருந்து விட்டேன்.

ஐந்து, ஆறு வயசாக இருக்கும் பொழுதே என்னை வெளியே விட மாட்டார்கள். நான் என்ன பாவம் செய்து விட்டே னே! அடுத்த வீட்டுப் பெண் கள் பட்டுப் பட்டாடைகள் உடுத்திஞல் நான் மட்டும் உடுத்தக்கூடாது. பூச்சூட்டி சிங்காரித்துக் கொண்டு யாராவது தெருவோடு போனல் எனக்கும் பூச்சூட்ட வேண்டுமென அழு வேன். அம்மா என்ன சமாதா னம் செய்தாலும் எனக்குச் சரி யாகப் படாது.

கடவுள், அந்த மல்லிகைக்கு மட்டும் மணத்தைக் கொடுக்காம லிருந்தால், நான் புஷ்பம் கேட்டி ருக்கவே மாட்டேன். மல்லி கைக்கு மணம் கொடுத்தால் நான் மட்டும் கேட்கக் கூடாதோ?

என் மனம் பெண் மனம் அல்லவா? மற்றவர்களைவிட நான் ஒன்றும் அழகில் குறைந்துபோக வில்லை. இதெல்லாம் பத்து வயசு வரும்போது உண்டான நினைவுகள். அதன் பின் எனக்கு "உலகம் என்ன? என் நிலைமை அதில் என்ன?" என்று புரிந்து கொண்டேன்.

எனக்கு நேர்ந்துவிட்ட கதியை நினைத்து நான் அழுவது நின்று விட்டது. அழுது கொண்டிருந்தால் தேற்றுவதற்கு அம்மா வேண்டாமா? அம்மா, என் துர்ப்பாக்கியத்தை நினைத்து, உருகி, உருகி......என்னை விட்டுப்போய் விட்டாள். இதன் பின் அப்பாவின் மனம் மாறியது. என்னைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார். நானும் நன்றாகப் படித்தேன். ஒரு மட்டும் தாயின் பிரிவு வரவர மங்கி மறைந்த கனவாகி விட்டது.

நான் போன வருஷம் ஐந்தாம் பாரம்படித்துக்கொண்டிருந்தேன். படிப்பும் பாட்டும் எனக்கு உயிர். எனக்கு நேர்ந்திருந்த தலை விதியை முற்றும் மறந்து விட்டு, அப்பாவுக்கு குழந்தை என்ற எண்ணத்தில் உலாவி வந்தேன். யாரையும் துடுக்காகப் பேசுவது, எதையும் வேடிக்கையாகப் பேசுவது, யாரிடமும் பேசிப் பழகிக் கோள்ளுகிறது என்ற வரைக்கும் அப்பா அனுமதித்து விட்டார்.

ஆனால் எனக்கென்னவோ அந்த சம்பவம் நடந்தது முதல் மனசில் தைரியம் தோன்ற ஆரம்பித்தது. அவரும் அவருடைய அப்பாவுமாக வந்து போனது முதல் என் மனசு துன்பப்பட்டது. ஜுனியராக மறுபடியும் வந்தபோது சந்தோஷப் பட்டது. குடத்துக்குள் விளக் கெரிந்தால், அதன் பிரகாசம் வெளியே தெரியுமா? என் மனத்தை அவர் அறிவாரா? ஆனால் என்னுடைய அப்பா.....என்ன நினைப்பார்? அப்பாவுக்கு மனக்கசப்பு இருந்தால், மறுநாளே என் நடையுடை பாவனைகளை தடை செய்திருப்பாரே?

அடிக்கடி அப்பா "ஜுனியர் வக்கீல் கெட்டிக்காரர்" என்று என்னிடம் சொல்லுவார். என் மனம் மகிழ்ந்தால் தன் மனம் குளிரும் என்பது அப்பா எண்ணம் போலும். எப்படியோ நானும் அவரும் அப்பாவின் முன்னிலையில் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். அவர் பேசுவது, எழுதுவது, ஏன், செய்கிற ஒவ்வொரு காரியமும் எனக்குத் தெய்விகமாகத் தோன்றும். பிறரிடம் காணாத காணமுடியாத கவர்ச்சி அவர் தோற்றத்தில் இருந்தது.

ஆனால் அவருடைய தந்தை இரண்டொரு முறை தம் பையனைப் பார்க்க வந்தார். பிறகு ஒரு கடிதம் வந்தது. அதில், "தம்பி நீ வக்கீல் தொழிலைப் படித்தது போதும், வீட்டுக்கு வந்து விடு" என்று எழுதியிருந்தது. அதை நானே படித்தேன். அவரைப் பணிந்து, "அடியாள் எடுத்திருப்பது பாவ ஜன்மம், தகப்பனார் மனம் நோகாமல் இருக்கப் போய் விடுங்கள்" என்றேன், அவர், "சரோஜினி, கடமையும், சத்தியமும் மனிதன் உயிர்நாடி, நான் இதில் தவறவில்லை" என்றார்.

அதோடு அவர் தகப்பனார் வீட்டுச் செய்தி மறைந்துவிட்டது. ஒரு வருஷத்தில் என் அப்பாவுக்கு அடுத்த வக்கீல் யாரென்றால்......? புருஷனைப் பற்றி தற்பெருமை அடித்துக் கொள்ள எனக்குப் பிடிக்க வில்லை. ஆனாலும் என்னிடம் மட்டும் அவர் பேச்சு பலிக்காது.

ஒரு சமயம் பௌர்ணமி நிலவொளியில் பாடிய பாட்டு என் மனசைவிட்டு அகலவில்லை. அதுவும் என்னைப் பற்றி அவர்

பாடியது. நான் எப்படி இருக்கி றேன். சொல்ல வெட்கமாயிருக்கி றது. அந்தபாட்டு மட்டும் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

அஞ்சொற்கள் அமுதில்
அள்ளிக் கொண்டவள் வதனம்
மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்

என் அழகைப் பற்றி நான் பெருமை அடித்துக் கொள்ள வில்லை. அவர் சொன்னதைச் சொன்னேன். அவ்வளவுதான்— எங்கள் காதல் வாழ்க்கை, அவரு டைய தகப்பனுருக்கு வேப்பங் காயாகத் தோன்றுகிறதோ? யார் எப்படி நினைத்தால் எங்களுக்கு என்ன?

நானும் அவரும் பூவும் மணமும் போல. எங்கள் இல்லற வாழ்க் கையைக் காணுது, என் மாமனும், மாமியும் எங்குதான் போய்விட் டார்களோ? அவர்கள் இருவரும் என்னைப்பற்றி என்ன நினைக்கிறுர் கள்? ஈசனுக்குத்தான் வெளிச் சம். அவர்கள் இருக்குமிடம் தெரியவில்லையே......?

நான் எங்கிருந்தாலென்ன?

சாமிப்பிள்ளை

நான் காசிக்குப் போய்விட் டேன்... கருமத்தைத் தொலைப்ப தற்குத்தான். பையன் இப்படிக் கெட்டழிந்து போவான், ஊரில் நாலுபேர் முகத்தில் விழிக்க முடி யாதபடி பெண்பித்துப் பிடித்லை வான் என்று நினைக்கவில்லை. என் றைக்கு சரோஜினியையும் அவனை யும் பற்றி என் காதில் ஊரார் சொன்னர்களோ, அந்த நிமிஷமே என் உயிர் போகவேண்டும். போக வில்லை. கருமத்தைத் தொலைக்க மனைவியுடன் காசிக்குப் போனேன், கங்கையில் மூழ்கி யெழுந்தேன்.

இப்படி மூன்று வருஷம் கடந் தது. ஒருநாள் சுவாமிகள் ஒருவரி டம் என் மைந்தன் செய்த பாவத் தைச் சொல்லி பிராயச்சித்தம் கேட்டேன். சுவாமிகள் சிரித் தார். எனக்கு மனம் நொந்தது. அவர், "ஐயா, உமது மைந்தன் செய்தது தவறு இல்லை. பாவம் உலகமே இன்னது என்று அறி யாத அப்பெண் சரோஜினிக்கு அபயம் கொடுத்தார் உம் குமாரன். அவர்தான் உண்மையான வீர இளைஞன்" என்றுர்.

என் மனசில் அவர் சொன்ன நியாயம் பதியவில்லை. அந்த சுவா மிகள் கேட்டார். "என், ஆணு க்கு இருக்கும் சுதந்திரம் பெண் ணுக்கும் இருக்கக் கூடாதா? இரு வரும் மனமொத்து வாழ்கிறதைப் பார்த்து சந்தோஷப்பட வேண் டிய தாங்கள், காசியில் வீணுக காலம் தள்ளுகிறீர்கள், தங்களு க்கு காசி, உமது குமாரன் வீடு" என்று சொன்னர். உண்மை தானே? மகனுடைய குடும்ப வாழ்க்கையைக் கண்டு சந்தோ ஷப்படாமல், அவன் மனம் நோக தகப்பன் தேசாந்திரம் செய்து பயன் என்ன?

ஆகையால் நானும் என் மனைவி யும் காசியிலிருந்து புறப்பட்டோம் என் குமாரனிடம் அனுதாபம் காட்டாமல், நான் அநியாயமாக நடந்து கொண்டு விட்டேன். கொடும் சமூக சம்பிரதாய உணர் ச்சி எனக்கும் என் மைந்தனுக்கும் இடையே பகைமைத் திரையாகத் தொங்கியது. உண்மை ஒளி பிறக் கவே, அத்திரை விலகி விட்டது. நாங்கள் காசியிலிருந்து வரும் பொழுது என் மனைவி குங்குமம் மட்டும் வாங்கிக் கொண்டாள்.

ஊர் வந்து சேர்ந்தோம். பையனோ பெரியவக்கீலாக இருக்கிறான். அவன் முகத்தில் விழிக்க எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஒரு பாவமும் அறியாத குழந்தை மனசை, நான் வாட்டி வதக்கி விட்டேன். மைந்தனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்த எண்ணத்துடன் வண்டியிலிருந்து இறங்கினேன்.

சுந்திரமும், சரோஜினியும் எங்களை வணங்கினார்கள். எனக்கு நாக்கு தழதழத்தது. சரோஜினி, "மாமா, அத்தை

வணக்கம். உங்கள் குமாரரையும் என்னையும் மன்னியுங்கள்" என்றாள். உண்மையில் நானும், என் மனைவியும்தான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவர்கள்!

அப்போது என் மனசில் இன்னும் என்னென்னவோ சிந்தனைகள் மின்னல் வேகத்தில் ஓட ஆரம்பித்தது. இந்த மங்களகரமான காட்சியைப் பார்க்காமல் இத்தனை நாளும் வீணாக்கி விட்டோமே? பார்க்கப் போனால் இன்பம் என்பதுதான் என்ன? மனிதனுக்கு மகிழ்ச்சி எப்படி உண்டாகிறது?

வணங்கி எழுந்த தம்பதிகள் முகத்தில், காசிக் குங்குமத்தை என் மனைவி இட்டாள். சரோஜினியின் முகப் பொலிவைக்கண்டு, "ஐயோ, இந்தத் தங்கத்தையா நாம் என்னென்லாம் நினைத்தோம்" என்றெண்ணிப் பொருமினேன். என் கண் கலங்கியது.

சரோஜினியின் நீண்ட விசாலமான கண்களிலிருந்து கண்ணீர் முத்து முத்தாக துளிர்த்தது.

அடடா! இந்த தூய மனம் வாடும்படியா செய்துவிட்டோம்? ஐயோ, இந்த இளம் மலர் விரிந்து மணம் வீசுவதற்கா தடையாக நின்றோம்? என்ன பைத்தியக்காரத் தனம்? மாயை வந்து கண்ணை மறைத்துக் கொள்ளுகிறது என்று வேதாந்திகள் சொல்லுகிற பொருள் இன்றுதான் எனக்கு 'கண்ணின் நீர்க்கடல்' கண்டு விளங்குகிறது;

அக்கண்ணீர் என்னைப் பார்த்து, "மாமா, இன்றாவது புத்தி வந்ததே" என்று கேட்கிறதா? அல்லது, "நான் இன்றுதான் உங்கள் குமாரனுக்கு மனைவி ஆகிறேன்" என்று சொல்லுகிறதா?

இராமநாதன், "பொருள் கொள்ளச் சொல்லவில்லை; பொருள் விள்ளச் சொன்னேன்" என்றான் —அதிலும் இருசொல் அலங்காரம். "நான் அரசரிடம் பணம் பரிசில் பெறப் பேச வில்லை; உங்களுக்கு, பாச்சுவை நாச்சுவை ஆகிய இரண்டின் பொருளை விளக்கவே சொன்னேன்" என்றான்.

"நீதான் பொருளை விளக்கு பார்ப்போம்" என்றார் பிச்சுவையர். இராமு உற்சாகமாகப் பேசினான்.- (நா†இருந்தே) நாவிருந்தே—நாவில் இருந்தே; பாவிருந்து ஆம்-பாட்டாகிய சொல்விருந்து ஊறி வருகிறது. அத்தகைய பாவூறும் நாவே புலவர் செவிக்கு நல்லவிருந்தாகும் —என்பது ஒரு பொருள். இப்போது புலவர் நாவினின்று வேண்டிய பா விருந்து உண்டோம். இனிப் பாட்டும் கூட இருந்து (பா†இருந்து) நாவிருந்து (உணவு) கொள்ளலாம். அதாவது புலவர்களுடனேயே அரசர் உண்ணலாமே!—"

புலவர் கரகோஷம் செய்தனர். "சபாஷ் பாண்டியா!" என்று பிச்சுவையர் பையனைத் தட்டிக் கொடுத்தார். பாஸ்கர சேதுபதி உள்ளங் குளிர்ந்தார். "நமது ராமுவை வட்டிக்கடையில் போட்டு விடாதீர்கள். அவனை மதுரைக்கு அனுப்பி விடுங்கள் இதோ தமிழ்ச் சங்கத் தலையாசிரியரும், நமது கலாசாலைத் தலைவரும் வந்திருக்கிறார்கள். பையனை அவர்களிடம் விட்டு விடுங்கள்" என்றார்.

"அதைக் கேட்கத்தான் வந்தேன்; மகராசா வாக்கிலிருந்தே உத்திரவு வந்து விட்டது—இதோ சமூகத்தில் அடைக்கலம் வைத்து விட்டேன்; அரசர் விருப்பம் போல் நடக்கட்டும்" என்றார்.

பாண்டித்துரை ராமுவை திருநாராயணரிடம் தந்து, "இவன் மேதாவி; தமிழ் நன்றாகப் பயிற்றுங்கள்; ஆங்கிலக் கலாசாலையிலும் படிக்கட்டும்......" என்றார்.

பையனுக்குப் பெரு மகிழ்வு.

"இராமு சொன்ன படியே "†பாவலர் உடனிருந்துண்க" என்று சேதுபதி அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்.

இனி ராமுவை மதுரையிற் காண்போம்.

மதுரை

மதுரை தமிழகத்தின் உள்ளம்; தமிழின் பெருமைக்குத் தாயகம். தமிழர் நாகரிகத்தின் நிலயம். மதுரையை நினைத்தால் மீனாக்ஷி சுந்தரேசர் சந்நிதி வந்து எதிரே

நிற்கிறது. தமிழரின் கலைவளம், சிற்பச் செல்வம், கவிதைச் செல்வம் எல்லாம் அங்கே உருக்கொண்டு பொலிகின்றன. சிவபெருமான் திருவிளையாடல்ச் சித்திரங்கள் எதிரே காண்கின்றன.

ஆடலேற்றினன்
கூடல் ஆலவாய்
பாடியே மனம்
வீடு சேர்மினே

என்ற திருஞானசம்பந்தர் வாக்கு உள்ளத்தில் ஊறுகிறது.

அண்ணல் ஆலவாய்
நண்ணினான்றனை
எண்ணியே தொழத்
திண்ணம் இன்பமே

என்று மனம் மகிழ்ச்சி கொள்கிறது.

கி. மு. 7000-ஆண்டிலிருந்து பதினன்காம் நூற்றாண்டு வரையில் மதுரையில் தமிழ்க்கொடி வீரச் செருக்குடன் புகழ் வானில் ஆடியது. பிறகுதான் பிரிவினை, உட்கலகம், இஸ்லாமியர் படையெடுப்பு, நாயக்கர் ஆட்சி, நவாப் தர்பார், ஆங்கில சர்க்கார் எல்லாம் வரிசையாகத் தொடர்ந்தன. இப்படையெடுப்புகளால் மதுரையின் பொருட்செல்வம் சிதைந்ததுண்மை ஆயினும், அதன் அருட் செல்வம் காலத்தை வென்று விளங்குகிறது. காலக்கடல் நமது கலைச் செல்வத்தை அள்ளி விழுங்கியும் இன்னும் அரிய கலைச் செல்வம் உள்ளது. பாண்டியன், மாகீர்த்தி காய்சினவழுதி, கடுங்கோன், வெண்தேர்ச் செழியன், முடத்திருமாறன், உக்கிர பாண்டியன், நெடுஞ்செழியன் — முதல் சுந்தர பாண்டியன் காலம் வரையில் தமிழ்க்கலை தனிச்செங்கோல் நடாத்தியது. மனித நாகரிகமே மதுரையில் மலர்ந்தது. பிறகு சேர சோழ நாடுகளுக்குப்பரவி நாடெங்கும் விரிந்தது. தமிழர் தேக்குக் கப்பல்களில் சென்று உலக வாணிபத்தை ஆண்டனர். பெலுசிஸ்தானம், பாரசீகம், அராபியா, மெசொபொடோமியா, சிரியா, எகிப்து, கிரீட், கிரேக்கம், இதாலி ஸ்பெயின், பிரிடானியா, சீனம், பர்மா, மலேயா, ஆஸ்திரேலியா, முதலிய பல நாடுகளில் குடியேறியிருந்தனர். இன்று மூகிஞ்சதரோ (முகிஞ்சதரை வாழ்ந்து முடிந்தவர் நிலம்) வில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற பழம் பொருள்கள் தமிழர் நாகரிகத்தை விளக்கும் தமிழரின் பரந்து விரிந்த நாகரிகத்தைப் பேசும் சங்க இலக்கியங்கள் மதுரையில் பிறந்தன. இன்னும் இதோ நச்சினார்க்கினியர் சங்கம் செழித்தோங்குகிறது.

எத்தனையோ புலவர் மணிகள் இங்கே நிலவினர். நக்கீரர், கபிலர், பரணர், சாத்தனர், திருத்தக்கர், குமர குருபரர் முதலிய செந்தமிழ் மணிகளை நாம் கொண்டாடுகிறோம். தமிழ் மறையான திருக்குறள் மதுரைச் சங்கத்தில் அரங்கேறியது. அருளின்பமளிக்கும் திருவாசகம் பொழிந்த மாணிக்கவாசகப் பெருமான் இந்நகரிலே தான் அமைச்சராயிருந்தார்; இதே நகரிலேதான் அவர் சிறைப்பட்டார்; அருட் பொறுமையால் அரசன் கொடுமைகளை வென்றார். அவரே உலகின் முதல் சத்தியாக்கிரகி. அடுத்த சத்தியாக்கிரகியான அப்பர் மதுரைச் சிவனுக்குப் பாமாலை சூட்டினார். ஞானசம்பந்தர் இங்கேதான் சிவக்கொடி நாட்டினர்; தமிழுக்கு வெற்றிமாலை சூட்டினர். பெரியாழ்வார் இங்கேதான் "பல்லாண்டு" முழக்கினர். இராமாயணம், பாரதம், இரகுவம்ஸம், சங்க நூல்கள்; தோலமி, பிளினி பாஹியன், மார்கோபோலோ முதலியோர் குறிப்புகள் — எல்லாம் பாண்டியர் பெருமையைப்பேசும். பாண்டித் துறைமுகங்களான

கொற்கையும், தொண்டியும், காயற்பட்டினமும் சரித்திரப் புகழ் பெற்றவை. இன்றும் இவை நல்ல துறைமுகங்களாக விளங்குகின்றன.

ஹாலாச்ய மகாத்மியம், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம், திருவிளையாடற் புராணம், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை முதலிய அரிய நூல்கள் மதுரையைப் போற்றுகின்றன. நெடுமாற நாயனார், மங்கையற்கரசியார், குலச்சிறை நாயனார், மூர்த்தி நாயனார் முதல் ரமண மஹரிஷிகள் வரையில் எத்தனையோ மகான்கள் மதுரையில் விளங்கினர். மேற்கும் கிழக்கும் மதுரைக்கு யாத்திரை வருகின்றன. வடநாட்டைப் படையெடுத்த யவனர் மதுரை மன்னருக்கு வாயற் காப்பாளராயிருந்தனர். பிரிடனையும், பிரான்சையும் வென்ற ஸீஸரின் சந்ததியார் மதுரைக் கப்பலை ஆவலாக எதிர்நோக்கியிருந்தனர். தமிழரின் கவிதைச் செல்வம் சங்க நூல்களிற் காண்கின்றன; சிற்பச் செல்வம் மீனாட்சி கோயிலில், ஆயிரக்கால் மண்டபத்தில், நாயக்கர் அரண்மனையில் காண்கின்றது.

மதுரையை நினைத்தாலே அழகின்பம் எதிரே நடம் புரிகிறது!

ஞால நின்புக ழேமிக வேண்டுந்
தென்
ஆல வாயிலுறையும் எம் ஆதியே

என்று வைகை நதி யாழிசைத்துச் செல்லுகிறது.

இம் மதுரையில் ஆறு கல்வி நிலயங்கள் உண்டு — மதுரைக் கல்லூரி, தெல்லா குளம் பாதிரிமார் கல்லூரி, மேரி கலாசாலை, சேதுபதி கலாசாலை, நச்சினார்க்கினியர் தமிழ்ச் சங்கம், திருஞான சம்பந்தர் மடம், இன்னும் பல பாடசாலைகள் உண்டு. நமது கதைக்கு வேண்டியவை இவையே.

முதலில் நச்சினார்க்கினியர் சங்கத்தில் நுழைவோம்.

* * *

மணிப்பிள்ளை

மதுரைத் தமிழ்ச் சங்கம் சுமாரான கட்டிடம்; மாணவர் இருக்க ஒரு மாடி வீடு; வகுப்புகளுக்கு ஒரு தாழ்வாரமும் கூடமும்; அச்சகத்திற்கு ஒரு ஹால்; புலவர் ஆராய்ச்சி செய்ய, எழுத ஒரு அறை. கூட்டங்கள் நடத்த ஒரு ஹால்; பத்திரிகை, புத்தக விற்பனைகளுக்கு ஒரு அறை, ஒரு பெரிய புத்தகசாலை — இவ்வளவே கட்டிட விசாலம், இச்சிறிய கட்டிடத்தில் இன்று தமிழன்னை குடியிருக்கிறாள். இனிப் பெரிய மாளிகை அவளுக்கு அமையும் — ஒரு கலைக் கோயிலே உண்டாகும். அதற்குரிய தமிழன்பன் இதோ சங்கத்திற்குள் செல்கிறான்.

சிவநேசஞ் செட்டியார் மகன் இராமனாதனுடன் தமிழ்ச் சங்கத்திற் புகுந்தார். எதிர் பாராமல் அங்கே அன்று பாண்டித்துரைத் தேவர் வந்திருந்தார். அவர் சங்க நடப்பைப் பார்த்து மகிழ்ந்து, புலவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்புலவருள், மு. இராகவையங்கார், திருநாராயணையங்கார், நேடிவ் காலேஜ் பண்டிதர் கோபால கிருஷ்ணையர், பண்டிதர் ஹரிஹரையர், யாழ்ப்பாணம், குமாரசாமி பிள்ளை, சிவகங்கை தெய்வசிகாமணிப் புலவர் முதலியோர் மதுரைச் சங்க வளர்ச்சியில் ஆர்வங் கொண்டவர்கள். அவர்களுடன் பாண்டித்துரைத் தேவர் அளவளாவிக் கொண்டிருந்தார். அவர்கள் பேச்சின் சுருக்கத்தைச் சொல்லுகிறேன்.

பதினாயிரம் ஆண்டுகளாக நமது தாய் மொழி இலக்கண இலக்கியங்களுடன் விளங்கியது. பின்னே எழுந்த எத்தனையோ மொழிகள்

வழக்கொழிந்து மறைந்தன; அகத்தியரும், தொல்காப்பியரும் பேசிய தமிழ் இதோ இருக்கிறது. காலக் கோளாலும், கடற்கோளாலும் அதன் இலக்கியச் செல்வம் அருகி விட்டது. தமிழில் அரிய கலை நூல்கள் இருந்தன; தமிழிசை நூல், கூத்த நூல், போர் நூல் எல்லாம் மறைந்தன. தேவாரங்களிலும், சங்க நூல்களிலும் காணும் இசைக் குறிப்புகளுக்கு இலக்கணம் இப்போது தெரியவில்லை. இக்காலம் மேனாட்டுக் கலை வெள்ளம், அறிவுப் பயிரை வளர்க்கிறது. நாம் பழைய செல்வத்தைப் பாதுகாத்து அச்சேற்றிப் பரப்புவதுடன் காலத்திற்குரிய புதிய செல்வமும் சேர்க்க வேண்டும். சங்க நூல்களுக்கும் புராணங்களுக்கும், சைவ, வைணவ நூல்களுக்கும் நீதி நூல்களுக்கும் தெளிவான உரை வகுக்க வேண்டும். தற்காலத்திற்கேற்ற உரை நடை நூல்கள் ஏராளமாக உண்டாக்க வேண்டும். புது முறையில் இசை, காவியம், ஓவியம், சிற்பம், கூத்து, பௌதிகம், ரசாயனம், தாவரம், பூகோளம் ஆகிய பல சாத்திரங்களுக்குப் படப்பொலிவுடன் இலக்கணம் உண்டாக்க வேண்டும். அந்தந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற புலவர்களுக்குத் தக்க பொருளுதவி செய்து கலை நூல்கள் ஆக்க வேண்டும். அதுவே சிறந்த தமிழ்ப் பணியாகும். கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர் சாமிநாதையர் சிந்தாமணி வெளியிட்டிருக்கிறார். அவருக்குப் பத்துப்பாட்டு எட்டுத் தொகை வெளியிடப் பணவுதவி செய்யவேண்டும். இனித் தமிழுக்காக வாழும் புலவர் வயிறு வாடாமல் நாம் பொருள் தருவோம். நம் நாட்டுக் கவிகளை ஊக்கிப் புதிய காவியங்களையும், இசை நூல்களையும் ஆக்குவோம். தமிழ் மணம் பரவவே 'சேந்தமிழ்' என்ற மாத இதழ் நடத்துவோம். நமது சங்கம் பாண்டியர் நாட்டிய முற்காலச் சங்கம் போலவே புலவர் நிலயமாக விளங்க வேண்டும். சங்கத்தில் உள்ள பழைய ஏட்டுப் பிரதிகளையெல்லாம் சுத்தப் பிரதி எடுத்து அச்சேற்ற வேண்டும். இந்த ஆண்டு பதினெண்கீழ்க் கணக்கும், பாரதமும், திருவிளையாடற் புராணமும் அச்சேற வேண்டும். எல்லாரும் தமிழ்த் தாயின் பெருமை விளங்கக் கலைப் பணி செய்வோம்.

இவ்வாறு பேச்சு நடக்கும் போதுதான் செட்டியார், பையனுடன் உள்ளே வந்து எல்லாரையும் வணங்கி அமர்ந்தார். பாண்டித்துரை அவரை நல்வரவேற்றார்.

அங்கே நடந்த பேச்சைப் பையன் கேட்டான். பேச்சு முடிந்ததும் சிவநேசர் பாண்டித் துரையிடம் ஒரு பை தந்து "தமிழ்த் தாய்க்கு எளியேன் காணிக்கை ஐயாயிரம்" என்றார். அங்கு கூடியவர்கள் திடுக்கிட்டு வியந்து செட்டியாரை மெச்சினர்.

பாண்டித்துரை : செட்டியார்வாள் இக்கால முதல் வள்ளல்; அவர்கள், கைராசி நிரம்பியவர்கள். அவர்கள் தந்த ஐயாயிரம் திருவிளையாடலும், வில்லி பாரதமும் வெளியிட உதவும்...அவர்களைச் சங்க அபிமானியாகப் பதிவு செய்து கொள்ளுங்கள். செட்டியார்வாள் தங்கள் உதவி மிகப் பெரியது.

சிவநேசர் : ஏதோ அடியேனால் முடிந்த சிறு தொகை......தமிழ் நன்றாக வளரட்டும்.

புலவர் : மேகம் போன்று பொருளுதவும் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வது?

சிவ : இதோ இச்சிறுவன் தமிழ் தமிழ் என்று பரபரக்கிறான். அவனை ஆளாக்குங்கள் போதும்

புல : ஆஹா — மகிழ்வுடன்.

பாண் : இவன் உருவிற் சிறியவன் உள்ளே பெரியவன் : நல்ல அறிவுள்ள பையன்; குரல் குயில் போல் இருக்கிறது. தேவார திருவாசகங்கள் நன்ருகப் பாடுகிருன். ஒரு தரம் கேட்டால் எதையும் அறிந்து கொள்கிருன். இவன் சிறந்த தமிழ் மாணிக்கமாவான். இவனை நன்ருகக் கவனிக்க வேண்டும்.

புல: ஆஹா! அது எங்கள் கடமை பெருமை, உரிமை.

பாண் : செட்டியார்வாள், உங்களுக்கு இனி எக்கவலையும் இல்லை. பையனை இங்கே விட்டு விடுங்கள். அவன் கல்விப் பொறுப்பு நம்மைச் சேர்ந்தது. நமது சேதுபதி கலாசாலையில் ஆங்கிலம் படிக்கட்டும்; இங்கேதமிழ்ப் படிக்கட்டும்; பிறகு வடமொழிக்கும் இசைப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்வோம்.

சிவ : நன்ருகச் செய்யுங்கள். இனி அவன் தமிழ்த்தாயின் பிள்ளை...

இவ்வாறு இவர்கள் பேசும் போதே இராமனுதன் எழுந்து நின்று,

நம்பனே நான் முகத்தாய்
நாதனே! ஞானமூர்த்தி
என்பொனே! ஈசா! என்றென்
றேத்திநான் ஏசற்றென்றும்
பின்பினே திரிந்து நாயேன்
பேர்த்தினிப் பிறவாவண்ணம்
அன்பனே ஆலவாயில்
அப்பனே அருள்செய்வாயே

என்று மனமுருகப் பாடி "நமச்சிவாய" என்று அங்கிருந்த புலவர்களை நிலந்தோய வணங்கினுன். எல்லாரும் அவன் அன்பையும் ஆர்வத்தையும், பணிவையும் வியந்து 'மணிப்பிள்ளை' என்று வாழ்த்தினர்.

இராமநாதன் சங்கமாணவனும் பள்ளிக்கூட மாணவனும் ஆனுன். சாப்பாடு படுக்கை மாமா அண்ணுமலை வீட்டில் வைத்துக் கொண்டான். இனி அவன் கல்வியைக் கவனிப்போம்.

கலை வளர்ச்சி

புலவர் மணிகளான திருநாராயணரும், இராகவையங்காரும், குமாரசாமி பிள்ளையும் இராமநாதனைக்கண்ணும் கருத்துமாகக் கவனித்துத் தமிழமுதம் புகட்டினர். தமிழ் அமுதம்தான் அமுதம்போல் அதை அள்ளிப்புசித்தான் இராமநாதன். அவன் பசிக்கு மெல்ல நடக்கும் வகுப்புப்பாடம் போதாது. ஆதலால் தனியாக விரைவாக அவன் தமிழ் பயின்ருன்.

ஆறுமுக நாவலர் பாடபுத்தகங்களை யெல்லாம் ஒரேமாதத்தில் முடித்தான்; பிறகு ஔவையார் பாடல்கள், நான்மணிக்கடிகை, இன்னு நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, இன்னிலை கார்நாற்பது, களவழி நாற்பது—இவை பயின்று நாலடியார் பாடங்கேட்டான். எல்லாம் இரண்டு மாதங்களில் முடிந்தன; பிறகு திருக்குறளை ஆவலாகப் பருகினுன்; வள்ளுவர் வாக்கமுதை உண்ண உண்ண அவனுள்ளம் பூரித்தது. இரண்டே மாதங்களில் குறள் முழுதும் பாடமானது. அதன் பிறகு நன்னூல் நிகண்டு பாடம் நடந்தது. இவை ஆறு மாதம்; பிறகு நளவெண்பா, நைடதம், திருவிளையாடற்புராணம் பெரிய புராணம், பாகவத புராணம், முதலியவை நடந்தன.

கதைப் போக்கா யிருப்பதால் மாணவன் இந்நூல்களை எளிதாகக் கற்ருன். புராணங்கள் முடிந்ததும் சிலப்பதிகாரம் நடந்தது. பிறகு மணிமேகலையும், சூடாமணியும் நடந்தன. இவை முடிந்து யாப்பருங்கலமும், தண்டியலங்காரமும் நடந்தன. இப்போது இராமநாதன் இசையுடன் எந்தக் கவியும் படித்துச் சுவைத்துப் பொருளறிந்துரைக்க வல்லவனுன். அக்காலமே புலவர் சாமிநாதையர், சிந்தாமணி வெளியிட்டார். அதைப் புலவர்கள் போற்றினர். இராமநாதன் அக்காப்பியத்தை ஆர்வமுடன் கற்ருன். அதைக்கற்பித்த இராகவையங்கார், இடையிடையே கம்பராமாயணச் செய்யுட்களைச் சொன்ஞர். இராமநாதனுக்குக் கம்பனில் சுவை பிறந்தது. தானே இராமாயணம் படிக்கத் தொடங்கினன். படிக்கப் படிக்கப் பரவசனுனன், கம்பனையே தன் கலைத் துணையாகக் கொண்டான் இராமநாதன். இடையிடையே புறநானூறு அகநானூறு, நற்றிணை ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, இறையனர் அகப்பொருள் கலித்தொகை, முதலிய சங்க நூல்களையும் அவன் பாடங் கேட்டான்.

இவற்றுடன் தனியாக ஆங்கிலமும் கணிதமும் பயின்று தேர்ச்சி பெற்று, இராமநாதன் சேதுபதி ஹைஸ்கூலில் ஏழாம் வகுப்பில் சேர்ந்தான். தமிழ்க் கல்வியை ஐந்தாண்டுகளில் முடித்துப் பால பண்டித பரீட்சையில் முதன்மை பெற்றுப் பண்டித பரீட்சைக்குப் படித்தான். அதே சமயம் சேதுபதி கலாசாலையிலும் எட்டாம் வகுப்பில்போய் அமர்ந்தான். இராமநாதனுக்கு இப்போது வயது பதின்மூன்றுதான். அவன் அறிவையும் ஒழுக்கத்தையும் வியக்காதவரில்லை. அவன் தமிழன்புடன் சிவபக்தியிலும் மேலோங்கினன்.

திருஞான சம்பந்தர் மடத்தில் எழுந்தருளிய சோமசுந்திரத் தம்பிரானிடம் அவன் திருமுறை நூல்களைப் பாடங்கேட்டான். அங்கே நடக்கும் தேவாரதிருவாசக பஜனைக்குத் தினம் சென்ருன். இராமநாதன் காலை நான்கு மணிக்கே எழுந்து பல் விளக்கிக் கைகால் முகம் சுத்தி செய்து கொண்டு திருவாசகமும் தேவாரமும் சுருதியுடன்பாடிச் சிவபெருமானை வழிபட்டு, ஆறுமணிவரையில் இலக்கணம் இலக்கியங்கள் படித்தான் பிறகு குளித்துப்பூசி, திருஞானசம்பந்தர் மடத்திற்குச் சென்று தம்பிரானை வணங்கிச் சைவ பாடம்கேட்டான். பிறகு புலவர்களிடம் தமிழ்ப்பாடம் கேட்டான். பத்து மணிக்குப் பள்ளிக்கூடம் சென்ருன். பள்ளிப்பாடங்களை அங்கேயே கற்றுத் தெளிந்து வந்தான். ஐந்து மணிவரையில் படிப்புத்தான் பிறகு அனுட்டானங்களை முடித்துத் தம்பிரான் பஜனை கோஷ்டியுடன் மீனுட்சி கோயிலுக்குச் சென்று திருமுறைபாடல்கள் பாடி சிவதரிசனம் செய்து, ஆறரை மணிக்குத் திரும்பினன். உடனே புலவர்களிடம் உயர்ந்த நூல்களைக் கற்ருன். எட்டு மணிக்கு இரவுணவுகொண்டு சிறிது உலாவி வந்து வகுப்புப் பாடங்களை முடித்துப் படுத்தான்.

அவன் வேறெந்த வம்பிற்கும் போவதில்லை. எந்தப் பையனுடனும் சேருவதில்லை, வீண் பேச்சுப் பேசுவதில்லை. வாயைத்திறந்தால் படிப்பது பாடுவது, இன்றேல் சிந்திப்பது, வரவர அவன் சத்தமிட்டுப் படிப்பதை விட்டு, மனமூன்றி மௌனமாக நூல்களை விரைவில் படிக்கத் தொடங்கினன்.

சங்கத்தில் அடிக்கடி புலவர் வருவர், சொற்பொழிவுகள் நடக்கும். ஒருசமயம் பாண்டித்

துரைத்தேவர் தலைமையில் இராமநாதன் "தமிழின்பம்" என்ற சொற்பொழிவாற்றிச் சபையோரை மகிழ்வித்தான். தந்தை சிவநேசரும் வந்து கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்டார். பாண்டித்துரை இராமநாதனைத் தட்டிக்கொடுத்து ஒரு தங்கப்பதக்கம் அளித்துத் "தமிழ் மணி" என்ற பட்டமும் வழங்கினர். இனி இராமநாதனைத் தமிழ் மணி என்றே அழைப்போம்.

இவ்வாறு கல்வி வளர்ந்து கொண்டிருக்கும்போது சில சம்பவங்கள் நடந்தன — இனிக்கதை விரைவாகச் செல்லும்.

மகனே, கலைக்கோயில் கட்டு !

உலகில் இன்பம் நீடிப்பதில்லை; துன்பமும் நீடிப்பதில்லை; அன்பும் நீடிப்பதில்லை; பகை அதை வந்து கௌவுகிறது. இன்று சேர்ந்தது நாளைப் பிரிந்து போகிறது.

சிவநேசஞ்செட்டியாருக்கு ஈப்போ பெல்பீல்டுத்தெருவில் பெரிய வட்டிக்கடையிருந்தது. அதைத் தன் மகன் வெள்ளையன் பொறுப்பில் அவர் விட்டிருந்தார். வெள்ளையன் இப்போது இருபதுவயதுக் காளை. அவன் மாதா மாதம் ஐந் தொகை கட்டிக் கணக்கும் உண்டியலும் அனுப்பிக் கொண்டிருந்தான். சென்ற நான்கு மாதங்களாகக் கணக்கு வரவில்லை— அது ஒரு கவலை.

பர்மாவில் சிவநேசருக்கு ஒரு பெரிய மரக்கடையும், செழித்த நெல்வயல்களும் உண்டு. அவற்றை மேற்பார்த்து நடத்த மனைவி விசாலாட்சியின் தம்பி முத்தையாவை அனுப்பியிருந்தார். இரங்கூனிலிருந்து உடனே வரும்படி தந்தி வந்தது. சிவநேசன் தன் தமிழ்மணியைக் கண்டு மகிழ்ந்து விடை பெற்றுக் கப்பலேறினர். இச்சமயம் இராமநாதபுரம் கடையை அருணாசலம் பார்த்துக் கொண்டான். விசாலாட்சி நோய் வாய்ப்பட்டு, வைத்தியம் செய்தும் பயன்படாமல் உயிர்துடித்தாள். துடிக்கும் உயிருக்குத்தன் செல்வன் ஊட்டிய திருவாசகமே ஆறுதலளித்தது.

ஒருநாள் தமிழ்மணி கோயிலுக்குச் சென்று விபூதி குங்குமம் கொண்டுவந்து அன்னை நெற்றியிலிட்டு,

அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே,
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யான சிவபதமளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

என்று உருக்கமாகப் பாடினன்.

"கண்ணே ராமு நீ, கலைக்கோயில் கட்டி சிவ பக்தி செய்" என்று தாய் மகனைப் பார்த்தாள். "தாயே எனக்கொரு வரந்தா—நான் கலைக் கோயில் கட்டித் தமிழுக்கும், சைவத்திற்குமே வாழ மனவுறுதி தா" என்ருன் மகன்.

"செல்வனே, அப்படியே வாழ்ந்திரு; கட்டு கலைக்கோயில்; நமசிவாய வாழ்க பாடு" என்ருள் அன்னை. தமிழ்மணி சிவபுராணம் பாடினன்.

"ஈர்த்தென்னை ஆட்கொண்ட

எந்தை பெருமானே"

என்ற அடியைப் பாடும் போது "சிவ, சிவ" என்று தாய் முணு முணுத்தாள்; மகனைப்பார்த்தாள். கலைக்கோயில் என்றாள். பார்த்த கண் அப்படியே பார்த்துக்கொண் டிருந்தது. மூச்சில்லை, பேச்சில்லை. விசாலாட்சி ஆச்சி சிவபதமடைந் தாள் தாய் சொன்ன கலைக்கோயில் மகனுக்கு உபதேசவாக்கானது, சிவபுராணம் முடித்து மகன் பார்த் தான். தாயின் பிணவுடலை கண் டான். பட்டினத்தார் தாயாருக் குப் பாடிய பாட்டைச் சொல்லி முறையிட்டான். "தமிழம்மா, இனி நீயே எனக்குத்தாய்" என்று புலம்பினான். அண்ணாமலை பதறிக் கொண்டு வந்தான். "இறந்த பிறகு அழுதென்ன? வினையுடலை யாரே நிலைப்பாக வைத்திருக்க முடியும்? குடும்பத்தில் வருந்தி வெந்து நொந்த பிணியுடலை உதறித் தாயார் சிவநாமம் கேட்டுச் சிவ நாமமே சொல்லிச் சிவனடி சேர்ந் தாள். ஆதலால் சிவநாமத்துட னேயே இறுதிக் கடன்களைச் செய்வோம்" என்றான் தமிழ்மணி. அண்ணாமலை அதுவே சரி என் றார்; அழுகையில்லை. தமிழ்மணி, ஓதுவார்களைக் கொண்டு இனிமை யாகத் திருவாசகம் பாடச் செய் தான்.

திருவாசகம் முழங்கும் போதே பெண்கள் தாயாரின் உடலைக் கழுவிக் குளிப்பாட்டிப் புத்தாடை யணிந்து குங்குமமிட்டு மலர் முடித்தனர். மகன் உமாபதியின் படத்தை அவள் முன் வைத்தான் தீபதூபங்காட்டி மலர் தூவி,

வாரா வழியருளி

வந்தெனக்கு மாறின்றி

ஆரா அமுதாய்

அமைந்தன்றே— சீரார்

திருத்தென் பெருந்துறையான்

என் சிந்தை மேய

ஒருத்தன் பெருக்கும் ஒளி

என்று பாடிக் கற்பூரங்காட் டினான்.

பூப்பல்லக்கில் தாயுடலை வைத் தனர். தேவார பஜனை பின் வந் தது. மதுரைத்திருக் கோயிலைவலஞ் செய்து உடலை முதுகாட்டிற் கெடுத்தேகிச் சந்தனக்கட்டை யால்எரித்துக் கிரியையை முடித்து "தாயே உனக்குக் கலைக்கோயில் கட்டுவேன்" என்றான். அன்று ஏழை பரதேசிகளுக் கெல்லாம் உணவும், ஆடையும் கிடைத்தன. பங்காளிகளெல்லாம் சேர்ந்துண்ட னர். பத்து நாள் காலை மாலை விசாலாட்சி உயிர் நீத்த இடத்தில் சிவ பஜனை நடந்தது.

சங்கப் புலவர்களுக்கும் ஆசிரி யர்களுக்கும் தான தருமங்கள் செய்தான். தாயார் அவனுக்குத் தான் சேர்த்த ரூ. 50000யும் தந் தாள்; அவன் பங்கிற்குமூன்று லட் சம் வரும். இன்னும் ஒன்றரை லட் சம் சம்பாதித்து ஐந்து லகாரம் போட்டுக் கலைக்கோயில் கட்டத் தீர்மானித்தான். "மகனே கலைக் கோயில் கட்டு" என்று தாய் அவன் உள்ளத்தில் அடிக்கடி பேசினாள்.

"கலைக்கோயில்" அதுவே அவன் உள்ளத்துடிப்பு. வாயிலார் நாய னார் உள்ளத்தில் சிவன் கோயில் கட்டியதுபோல் தமிழ்மணியும் சிந் தனையில் கலைக் கோயில் எழுப்பி வந்தான். ஆனால் செய்கையில் அக்கோயிலெழுப்புமுன் எத்தனை யிடர்கள் இன்னல்கள் வந்தன. அச்சொல் வாழ்வின் கதையை எப்படி யெல்லாம் மாற்றியது கேளுங்கள்.

(தொடரும்)

நவீன நாடகம்:

கிலாவுத்தீன்

ரா. அ. பத்மனுபன்

கதைஞர்: "அலாவுதீனும் அவனது அற்புத விளக்கும்" தெரியும். ஆனல், அவன் வம்சத்தில் பிறந்த கிலாவுத்தீன் கதை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லே. ஏன் என்னண்பன் கிலாவுத்தீன் அந்தக் கதையை எனக்கு சொல்வதற்கு முன் எனக்கே அது தெரியாதே. கிலாவுத்தீன், அலாவுத்தீன் பரம்பரையில் பிறந்திருந்தும் அவனுக்கு வறுமையே சித்தித்திருந்தது. கிலாவுத்தீன் எங்களூர் கலெக்டராபீஸில் பியூனுக இருக்கிருன். பல வருஷங்களுக்கு முன் ஒரு நாள்.........

குமாஸ்தா: கிலாவுத்தீன்.....கிலாவுத்தீன்... என்ன தூங்கப்போயிட்டாயா.........நல்ல வேலேக்காரனப்பா நீ......ஆபீஸிலே ஒரு பியூன் இருந்துமா இவ்வளவு மோசமா இருக்கிறது.........
(உரக்க) கிலாவுத்தீன்..........

கிலாவுத்தீன்: சார்...........வந்திட்டேன்...........

குமா: நாளேக்கு கலெக்டர் விஜயம் செய்யப் போருராம். நீ என்ன டான்னு தூங்கறே. மேஜை நாற்காலியெல்லாம் தட்டி, எலக்ட்ரிக் லேட், டோம் எல்லாம் பளிச்சினு துடைச்சு வை. பாலிஷ் போட்டு, லேட் ஸ்விச்சையும் துடை.

கிலா: அதுக்கென்ன ஸார், நல்லா துடைக்கிறேன். இதோ பாருங்க.........

(சங்கீத ஒலி)

கிலா: (நாக்குழற) இல்லே............ அடடே.........

பூதம்: (சிரித்த குரலில்) நமஸ்காரம்.

கிலா: (பயத்துடன்) நீ யார்? எங்கு வந்தாய்?

பூதம்: ஓ நானு? நான்தான் அலாவுதீனின் அற்புத விளக்கு பூதம்.

கிலா: அற்புத விளக்கு பூதமா? பூ.........பூ.........பூ.........
(மென்று விழுங்கிக்கொண்டு) பூ.........பூதமா?

பூதம்: அலாவுதீன் தெரியாது?

கிலா: யாரு? கதைப் புஸ்தகத்திலே வருமே.........

பூதம்: கதையல்ல. அது நிஜமாக நடந்ததுதான்.

கிலா: (பீதியுடன்) ஆமாமாம். நிஜமாக நடந்ததுதான்.

பூதம்: அலாவுதீனிடமிருந்த அற்புத விளக்கிற்கு அடிமை நான். அந்த விளக்கின் எஜமானருக்கு நானும் என் சகோதர விளக்கு பூதங்களும் நிரந்தர ஊழியர்கள்.

கிலா: (சற்று தைரியமடைந்து) அது சரி. நீ இங்கு திடீரென எதற்கு வந்தாய்? யாரேனும் உன்னே.........

பூதம்: தங்கள் உத்திரவுப்படியே நான் இங்கு வந்தது.........

கிலா: என் உத்தரவுப்படியா?

பூதம்: ஆமாம். விளக்கைத் தேய்த்தது நீங்கள்தானே?

கிலா: விளக்கையா,..........நான் எலக்ட்ரிக் லைட்டின் ஸ்விச்சை யல்லவா பாலிஷ் செய்துகொண்டிருந்தேன்.

பூதம்: ஓ, ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. அலாவுத்தீன் அற்புத விளக்கை வெகுநாள்வரை ஒருவரும் கவனிக்கவில்லை. ஒரு நாள் அதை எவனோ ஒருவன் கொண்டுபோய், உருக்கி, எலக்ட்ரிக் ஸ்விச்சாக வார்த்தான்.

கிலா: அதுதான் நான் துடைத்த ஸ்விச்சோ?

பூதம்: ஆமாம். அந்த ஸ்விச்சைத் துடைத்தால் போதும். நான் உடனே தோன்றுவேன்.

கிலா: சரிதான்.

பூதம்: என் எஜமானர் சொல்வதையெல்லாம் செய்வேன்.

கிலா: நான் சொல்வதையெல்லாமா?

பூதம்: ஆமாம்.

கிலா: நிச்சயமாகவா?

பூதம்: நிச்சயமாக, உங்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்வேன்.

கிலா: அப்படியானால், முதலில் நீ மறைந்துபோய்விடு. என் கண் முன் நிற்காதே. பயமாயிருக்கிறது.

பூதம்: (சிரித்துக்கொண்டே) ஹ... ....ஹ...ஹா....என்னைக்கண்டா பயப்படுகிறீர்கள்? நான் உங்கள் அடிமை. சொன்னதெல்லாம் செய்வேன்.

கிலா: என் அடிமையா? நான் சொன்னதெல்லாமா?

பூதம்: ஆம். உங்களுக்கு வேண்டிய சுகம் தருவேன். எது இச்சித்தாலும், அது உடனே முடிந்துவிடும்.

கிலா: பேஷ். எதுவானாலும் செய்வாயா?

பூதம்: இந்த உலகத்தையே பாயாகச் சுருட்டிக் கடலில் எறிவதாயிருந்தால் கூட?

கிலா: இரு. இரு, நில்.

பூதம்: நிற்கிறேன் எஜமான்.

கிலா: பூமியை எங்காவது பாயாக சுருட்டிவிடாதே. சாயந்திரம் நான் வீட்டுக்குப் போகவேண்டும்.

பூதம்: எஜமான், ஏழேழு சமுத்திரங்களுக்கும் அடியில் கிடக்கும் நீல நிற நத்தையின் முத்துச்சரம் வேண்டுமென்றாலும் நொடியில் கொண்டு வந்துவிடுவேன்.

கிலா: என்ன அது? நீல நிற நத்தையின் முத்துச்சரமா?

பூதம்: ஆமாம், உலகமே கண்டும் கேட்டுமிராத அற்புத நகை அது.

கிலா: அது கிடக்கட்டும். எனக்குப் பசிக்கிறது. முதலில் ரண்டு போண்டாவும் அரை கப் சாயாவும் கொண்டா.

பூதம்: (சிரித்து) இதோ. என்னை இப்போது நீங்கள் சோதிப்பது போலவே தோன்றுகிறது. உலகில் அற்புத அபூர்வ ரத்னங்களையும் வைடூரியங்களையும் உங்களுக்கு நான் தர தயாராயிருக்கிறேன். என்னை, போண்டா, டீ கொண்டுவரும்படி உத்தரவிடுகிறீர்கள்.

(பூதம் அழுகிறது)

கிலா: அட பாவமே. பூதம் இப்படி அழலாமா? அழாதே, அழாதே. உன் இஷ்டப்படியே, எல்லா செல்வங்களும் கொண்டு குவி.

பூதம்: (சந்தோஷத்துடன்) எஜமான், இதோ வந்துவிட்டேன்.

(ஒலிக் குறிகள் மறைந்து மீண்டும் தோன்றுகிறது)

எஜமான் இப்போது தங்களை நிலக்கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள்.

கிலா: நிலக்கண்ணாடி எது ?

பூதம்: எதிரே பாருங்கள்.

கிலா: (ஆச்சரியத்துடன்) அடடே நிஜமாவா ? நான் இவ்வளவு அழகாகவா இருக்கிறேன். சினிமாவில் வரும் அசல் ராஜ குமாரன் போலிருக்கிறேனே.

பூதம்: ராஜகுமாரன் போல என்ன ? அசல் ராஜகுமாரன் தான். உங்களுக்குப் பெண் கொடுக்க எந்த ராஜா மறுப்பான் ?

கிலா: என்ன ? என்ன ?

பூதம்: நீங்கள் இஷ்டப்பட்டால் நம் பாதுஷாவின் மகளையே கல்யாணம்...

கிலா: (குறுக்கிட்டு) உஸ், பேசாதே, எனக்கு இதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.

பூதம்: (ஆச்சரியமடைந்து) என் எஜமான்...என்மேல் கோபமா, நான் ஏதாவது தப்பு செய்து விட்டேனா ? நான் வேண்டுமென்று...

(மீண்டும் அழுகிறது)

கிலா: அழாதே. அழாதே. நீதப்பு செய்யவில்லை. எனக்குத்தான் ராஜ குமாரன் ஆகப்பிடிக்க வில்லை.

பூதம் : ராஜகுமாரனாகாவிட்டால் போகிறது. நிறையப் பணத்தோடு மாடமாளிகை கட்டிக் கொண்டு சுகமாக இருந்தா லென்ன ?

கிலா: இது கூட எதற்கு ?

பூதம்: நான் சொல்வதை எஜமான் கேட்பதே யில்லை. நான் சிரமப்படுவது......

(மறுபடி அழுகை)

கிலா: (தணிவாக) இதென்னடா பெரிய வம்பாயிருக்கிறது. வம்பாயிருக்கிறதே. (உரக்க) அழாதே, அழாதே, உன்னிஷ்டப்படியே, என்னை பணக்காரன் ஆக்கிவிடு.

பூதம்: (சந்தோஷத்துடன்) இதோ எஜமான்.

(பூதம் மறைதல், ஒலிக்குறி)

கதைஞர்: விளக்கு பூதம் தன் வார்த்தைப் படியே கிலாவுத்தீனை ஒரு கோடீஸ்வரனாக்கி விட்டது. பாதுஷாவுக்கு அடுத்தபடி அவன்தான். சுகமாக காலம் கழிந்தது.

அந்த ராஜ்யத்திலே, பாதுஷாவுக்கு ஒரு பெண். அந்த ராஜகுமாரி ஒருநாள் கிலாவுத்தீனைப் பார்த்துவிட்டாள். கேட்பானேன் கண்டதும் காதல். ராஜகுமாரி பல நாட்கள் ஒன்றுமே சாப்பிட வில்லை. என்னமோ ஏதோ என்று எல்லாரும் பயந்தார்கள். கடைசியில் ராஜகுமாரியின் தாதி எல்லாவற்றையும் கண்டு பிடித்து, பாதுஷா விடம் சொல்லிவிட்டாள். உடனே பாதுஷா ஒரு காரியம் செய்தார்.

* * *

தூதன்: ஸலாம், ஆலேகம்.

கிலா: ஆலேகம் ஸலாம். தாங்கள் யாரோ ?

தூதன்: தங்களிடம் ஒரு விசேஷ சமாசாரம் சொல்லும்படி பாதுஷா என்னை அனுப்பியிருக்கிறார்.

கிலா: விசேஷ சமாசாரமா ? என்ன சொல்லு.

தூதன்: முக்கியமான விஷயம். சற்று ஆற, அமர...

கிலா: எனக்கு அவசரமில்லை. நிதானமாகவே சொல். என்ன சமாசாரம்?

தூதன்: ராஜகுமாரி நூருன்னிஸா பற்றி......

கிலா: (கவலையுடன்) நூருன்னிஸா ராஜகுமாரிக்கு என்ன நேர்ந்து விட்டது...

தூதன்: ஒன்றுமில்லை. அவர் காதல் கொண்டுள்ளார்.

கிலா: (கவலைவிட்டு) ஓ, சந்தோஷசமாசாரம். அவள் காதலன் யாரோ?

தூதன்: ராஜகுமாரி, ராஜகுமாரி, ராஜகுமாரி ...தங்கள்மேல்தான் காதல் கொண்டுள்ளார்.

கிலா: (பிரமையுடன்) ... என்ன ... என்ன? என்மேல் காதலா? எனக்கு ஏற்கனவே கல்யாணமாகிவிட்டது. எனது அருமை மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருக்கின்றனர்.

தூதன்: நூருன்னிஸாவை தாங்கள் மணந்துகொள்ளலாம். அப்போது....

கிலா: (குறுக்கிட்டு) என்ன... நூருன்னிசாவையும் மணப்பதா?

தூதன்: ராஜகுமாரியை உத்தேசித்து...

கிலா: என்னைப்பற்றி யோசனை செய்ய வேண்டாம் போலிருக்கிறது.

தூதன்: தேசத்தின் நலனை உத்தேசித்து...

கிலா: போதும் போதும், நிறுத்து.

தூதன்: பாதுஷாவுக்கு நான் என்ன சேதி கொண்டு போகட்டும்.

கிலா: உடனே பதில் தர வேண்டுமா?...அட பாவமே.

தூதன்: அவசரமில்லை. நாளை மறுநாள் தெரிவித்தால் போதும்.

கிலா: அப்படியே...நாளை மறுநாள் வாருங்கள்.

தூதன்: நான் போய் வருகிறேன். ஸலாம் ஆலேகம்.

(சற்று தாமதம்)

கிலா: சீ என்ன வாழ்க்கை, எல்லாம் இந்த பூதத்தால் வந்த வினை ...ஆமாம். அதையே கூப்பிட்டுக் கேட்போம்.

(ஒலிக்குறி, பூதம் வருதல்)

பூதம்: அடிமை, மஹராஜ்.

கிலா: நல்ல அடிமை வந்து சேர்ந்தாய் போ, உன்னால் என் தொல்லைகளுக்கு எல்லையே யில்லை.

பூதம்: தொல்லைகளா. நான் உங்களுக்கு எவ்வளவோ நன்மை செய்துவைக்க நீங்கள்...

(அழுகிறது)

கிலா: ரொம்ப நன்மை செய்து வைத்துவிட்டாய் போ. நிம்மதியாக, தாலுக்காபீசில் வேலை பார்த்துக் கொண்டு பெண்டாட்டி பிள்ளைகளுடன் சுகமாக இருந்தேன். நீ வந்து என்னை கோடீஸ்வரன் ஆக்கினாலும் ஆக்கினாய், பாதுஷாவின் கிழட்டுக் குமாரி என்மேல் காதல் கொண்டு விட்டாளாம்.

பூதம்: யார்? நூருன்னிஸா பேகமா?

கிலா: அந்த அவலட்சணந்தான்.

பூதம்: நல்லதாய்ப் போய்விட்டது.

கிலா: இன்னொருதரம் அந்த வார்த்தையைச் சொன்னாயோ— ஆமாம்.

பூதம்: இல்லை இல்லை. சொல்வ தில்லை. எஜமான் மன்னிக்க வேணும்.

கிலா: ராஜகுமாரி நூருன்னிஸா என்னைக் கல்யாணம் செய்து கொண்டாகவேண்டும் என்கிருளாம் பிடிவாதமாக — எல்லாம் உன்னால் வந்தது.

பூதம்: என்னாலா? நானென்ன செய்தேன். (அழுதல்)

கிலா: சரிதான் மறுபடியும் ஆரம் பித்துவிட்டாயா? நிறுத்து அழு கையை. (அழுகை நிற்கிறது) இந்த சங்கடத்திலிருந்து நான் எப்படித் தப்பலாம். வழி சொல்.

பூதம்: தப்பும் வழியா? அதற் கென்ன, உங்களைக்கண் காணுத் தீவு ஒன்றில் கொண்டுபோய் வைத்துவிடுகிறேன்.

கிலா: என் வீட்டுக்காரி?

பூதம்: அவளையும்தான்.

கிலா: குழந்தைகள்?

பூதம்: அவைகளையும்தான்.

கிலா: மாளிகை?

பூதம்: அதையும்தான்.

கிலா: அப்படியானல் நூருன்னி ஸாவின் தொந்தரவு இருக்கவே இருக்காதா?

பூதம்: இருக்கவே இருக்காது.

கிலா: அந்த அவலட்சணம் என் கண்ணில் படவே மாட்டாளே?

பூதம்: நீங்கள் இருக்கும் இடம் தெரிந்தால்தானே?

கிலா: பேஷ், நல்ல யோசனை, உடனே செய்துவிடு.

(ஒலிக்குறி, பூதம் மறைதல்)

கதைஞர்: கண்காணுத்தீவிலே சுக மாக இருந்தான் கிலாவுத்தீன். ஆனல் அவன் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. அலாவுதீனு டைய அற்புத விளக்கு மீண்டும் அகப்பட்டிருப்பதை எப் படியோ அறிந்து, எகிப்து தேச மந்திரவாதி அதைத்தேடிக் கொண்டு வந்தான்.

வந்து பார்த்ததில் கிலாவு தீனைக் காணேம். அவனது மாளி கையும் இல்லை. துக்கத்தில் மூழ்கிய பாதுஷாவும், நூருன்னி ஸாவும்தான் இருந்தனர். நூருன் னிஸாவின் நோயைத் தீர்த்து விடுவதாகச் சொல்லிவிட்டுச் சென்ருன் மந்திரவாதி.

மந்: அய்யா, சேவகரே இந்த மாளிகைதானே கிலாவுதீன் வீடு?

சேவகன்: இதுதான் கிலாவுதீன் பிரபு மாளிகை.

மந்: ரொம்ப நல்லது. இங்கே மின்சார விளக்குகளை ரிபேர் செய்ய வரும்படி என்னிடம் சொல்லியனுப்பினர்கள்.

சே: மின்சார விளக்கு ரிபேரா?

மந்: ஆமாம், விளக்கு ஸ்விச்சுக ளெல்லாம் பழையதாகிவிட்ட தால் சரியாக இல்லையாம். அவைகளை பழுதுபார்க்க நான் வந்திருக்கிறேன்.

சே: எஜமானர் இல்லையே.

மந்: எஜமான் இல்லாவிட்டால் என்ன? எஜமானியம்மாளைக் கேட்டுப் பாருங்கள்.

சே: இதோ கேட்டுச் சொல்கி றேன்.

(சற்று தாமதித்து)

நீங்கள் உள்ளே வரலாம். ஸ்விச் சுகளில் ஒன்றுதான் ரொம்ப பழசாக இருக்கிறதாம். அதை சரியாகப் போடவே முடிய வில்லையாம்.

மந்: ஆகா, அதற்கென்ன பழைய ஸ்விச்சை எடுத்து விட்டு புது ஸ்விச் போடுகிறேன்.

சே: இப்படி வாருங்கள். இந்த வழி இந்தப்படியில் ஏறுங்கள், இந்த அறையில், ஹூம் இந்த ஸ்விச்சுதான்.

மந்: சந்தோஷத்துடன். ஓ இதுதானா அந்த ஸ்விச்? இதோ சரிப்படுத்தி விடுகிறேன். முதலில் அதைத் துடைத்துப் பார்க்கலாம்.

(துடைத்ததும் பூதத்தின் வருகை ஒலிக்குறி)

பூதம்: எஜமான் உத்தரவு எஜமான் உத்தரவு.

மந்: ஹஹ்ஹஹ்ஹா. சரியான ஸ்விச்சுதான். ஹஹ்ஹஹ்ஹா.

பூதம்: அற்புத விளக்கு பூதம் தங்களுக்கு அடிமை. தங்கள் உத்தரவுப்படி.

மந்: (குறுக்கிட்டு) இந்த மாளிகையை இப்படியே கொண்டு போய் பாதுஷா வீட்டுக்கு எதிரே முன்போல வைத்துவிடு. ராஜகுமாரியும் அதை கவனிக்கும்படி செய்துவிடு.

பூதம்: உத்தரவு.

(பூதம் மறைதல், பயங்கர ஒலிக்குறி. மந்திரவாதி நடுநடுவில் சிரிக்கிறான்.)

தங்கள் உத்தரவுப்படி நடந்து விட்டது.

மந்: பாதுஷா எங்கே?

பூதம்: அரண்மனையில் இருக்கிறார்.

மந்: சரி நீ போகலாம். நான் பார்த்துக் கொள்கிறேன்.

(சற்று தாமதித்து)

பாதுஷா: என்ன மந்திரவாதி கிலாவுதீனைக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டு ஆள் மாயமாய் மறைந்து விட்டீரே.

மந்: பாதுஷா சற்றுப் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

பாது: பொறுமை, பொறுமை. வாடி வதங்கிப் போகிறாள். இன்னுமா பொறுமை.

மந்: நூருன்னிஸா பேகத்தை தாங்கள் இன்று காலை கவனித்தீர்களா?

பாது: கவனிப்பானேன் வழக்கமான அழுகைதான் தெரிந்து கிடக்கிறதே.

மந்: பாதுஷா கவனித்திருந்தால்.

பாது: கவனித்திருந்தால்?

மந்: கிலாவுதீன் மறுபடி வந்து விட்டதை அறிந்திருக்கலாம்.

பாது: கிலாவுதீன் வந்துவிட்டானா?

மந்: ஆம், இதோ தங்கள் முன் அவனைக்கொண்டுவர ஆள் அனுப்பியிருக்கிறேன்.

தூதன்: மகராஜ், கிலாவுதீன் பிரபு.

பாது: கிலாவுதீன் கிலாவுதீன்! சமயத்தில் வந்து சேர்ந்தாய். ராஜகுமாரி இன்றுவரை சாப்பிடவேயில்லை.

தூதன்: காலையில்தான் உணவருந்தினார்.

பாது: என் அருமைப்புதல்வியைக் காப்பாற்றிய புண்ணிய புருஷன் நீ

மந்: அவளைக் கல்யாணம் செய்து கொண்டு சுகமாயிருப்பாயாக.

கிலா: என்ன என்ன? கல்யாணமா? முடியாது முடியாது.

இதற்கா என்னை கூப்பிட்டீர்கள்.

பாது: அடடே எங்கே ஓடுகிருய்? கிலாவுதீன் கிலாவுதீன்.

மந்: விடாதே பிடி...பிடி... விடாதே.

கிலா: முடியாது. முடியாது. என்னை விட்டு விடுங்கள்.

(களேபரம் ஒலி)

டாக்டர்: விடாதே கெட்டியாகப் பிடித்துக் கொள்.

கிலா: விடு விடு.

டாக்: மூர்ச்சை தெளிந்துவிட்டது விட்டுவிடு.

கிலா: நான் கல்யாணம் செய்து கொள்ளவேமாட்டேன்.......

ஹூம். (கொல்லென்று சிரிப்பு) என்ன என்ன?

டாக்: இப்போதுதான் பிரக்ஞை வருகிறது.

கிலா: நான் எங்கிருக்கிறேன்? என்னை விட்டு விடுங்கள்.

டாக்: பயப்படாதே. ஜெனரல் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிருய். (சிரிப்புடன்) நீ யாரையும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டாம்.

கிலா: நூருன்னிஸாவைக்கூட?

டாக்: (சிரிப்புடன்) நூருன்னிஸா யார்? (மற்றவர்களிடம்) பாவம். எலக்ட்ரிக் ஷாக் அவன் மனசை ரொம்பக் கலக்கிவிட்டாற் போலிருக்கிறது.

(திரை)



கதையும் காரணமும்:

விசித்திர மாறுபாடு!

சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

நாளா வட்டத்தில் ஊர்ப் பெயர்களில் மாறுபாடு ஏற்படுவது இயற்கையே. ஆனால் கோழிக்கூடு என்ற பெயர் மாறி கள்ளிக்கோட்டையாகவும், திருச்சிவப்பேரூர் என்பதுதான் திரிச்சூர் ஆகவும் மாறி இருக்கிற தென்றால் எளிதில் நம்ப மாட்டோம். இன்றும் அந்த ஊர்களுக்குப் போனால் ரயில் ஸ்டேஷன்களில் எழுதப்பட்டுள்ள மலையாளப் பெயர்களில் அவைகளைக் காணலாம். ஒருவேளை மலையாள நாட்டில்தான் இப்படி முழுமாறுபாடு உண்டோ என்று கூட எண்ணத் தோன்றும்.

ஆனால் நம்முடைய நாட்டிலும், 'திருஎவ்வுள் ஊர்' திருவள்ளூர் ஆனதும், 'திரு நின்றவூர்' தின்னனூர் ஆனதும் உண்டு. சில ஊர்களின் பழமைப் பெயர்களைக் கண்டு பிடிப்பதும் அரிது. அவைகளின் காரணத்தைக் கண்டு பிடிப்பதோ மிகவும் அரிது. அப்படி ஆராய்ச்சியில் கொஞ்சம் இறங்கினால் வியக்கத்தக்க செய்திகள் கிடைக்கக் கூடும்.

சில ஆண்டுகளாகவே ஒருவித இயக்கம் நம் நாட்டில் இருந்து வந்தது. உண்மையான பெயர்களின் பொருளை மறைத்து புராணக்கதைகளைப் புகுத்தி, அர்த்தமற்ற தாக்கி விடுவதுதான் அது. இந்த மாதிரி முயற்சி பெரும்பான்மையாகக் கோயில் பூஜைகளாலேயே செய்யப்பட்டு வந்தன. இதை நம்பிச் சிலரும் அதற்கேற்றபடி புராணங்களையும், பாட்டுகளையும் எழுதி வைத்து விடுகிறார்கள். ஒரு ஊரில் ஒரு மகாநாடு கூடினால் அதை வரவேற்கும் பெரியார் அந்த ஊரின் பெருமையை எடுத்துச் சொல்வது இயல்புதான். அவர்கள் அபத்தமான கட்டுக்கதைகளையும் போற்றிப் புகழ்வார்கள். கோவையில் நடந்த ஜில்லா அரசியல் மகா நாடுகளில் இந்த விசித்திரத்தைக் கண்டேன். ஈரோடு மகாநாட்டில் ஊர்ச்சிறப்பைப் பேசும் போது, வரவேற்புத் தலைவர் அந்த ஊர்ப் பெயர், ஈர† ஓடு என்பதின் கூட்டு என்றும், சிவபெருமான் இரத்தத்தினால் ஈரமாகிய ஓட்டை அணிந்த படியால் ஈரோடு என்ற பெயர் வந்த தென்றார். அதற்கு ஆதாரமாக அந்த ஊர்ச் சிவாலயத்தில் சுவாமியின் பெயர் அர்த்த கபாலீசுவரர் என்றிருப்பதாகவும் கூறினார். இந்தக் கதைகள் அரை குறையாகப் படித்த அர்ச்சகர்கள் கட்டிவிட்ட கதையைத்தவிர வேறு அல்ல. திருப்பூரில் நடந்த மகாநாட்டிலும் ஊர்ச் சிறப்பைச் சொல்ல வந்த தலைவர், துரியோதனதியர் கவர்ந்த பசுக் கூட்டத்தைப் பாண்டவர்கள் திருப்பியதால் திருப்பூர் எனப் பெயர் வந்த தென்றார். இக் கதைக்கு அனுகூலமாகத் தாராபுரத்தை விராட நகரம் ஆக்கி விட்டார்கள். பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்ய அஸ்திநாபுரத்திலிருந்து (டெல்லி) கோவை ஜில்லாவிற்குத் தேடிவந்தார்கள் போலும்!

எந்த ஊரையும், இதிகாசத்தோடும், புராணத்தோடும், புனைந்து விட்டால் மேன்மை ஏற்படும்

என்று எண்ணின காலம் ஒன்றுண்டு. அந்தக் காலத்தில்தான், இப்படிப்பட்ட கட்டுக் கதைகளும், நம்பத்தகாத புராணக் கூற்றுகளும் ஏற்பட்டன. புராணம் இல்லாத ஊர்களுக்கெல்லாம் அரிய பெரிய புராணங்கள் உண்டாயிற்று. அதற்கு ஏற்ற கவிகளும் தோன்றினர்கள். கொடுத்த பணத்திற்குத் தகுந்தபடி ஏற்றமும் கொடுக்கப் பட்டது. பிறகு விந்தைகளுக்குக் கேட்பானேன்! காட்டாறுகள் மகா நதிகளாகிவிடும்; மேடுகள் பிரம்மாண்ட மலைகளாகிவிடும்; தனி மரம் பெரும் தோப்பாகிவிடும்; அழுக்கடைந்த கிணறே குட்டையோ புனித தீர்த்தங்களாகிவிடும்; மூர்த்தியின் திருவிளையாடலோ அது வரையில் எங்கும் காணுத அற்புத மாகிவிடும்; இதற்கொரு சூதமுனிவரும் சௌனி காதியரும் ஏற்படுவார்கள். இவ்விதம் நாட்டுப் போக்கு இருந்தால் உண்மையை எவ்வாறு அறியக் கூடும்? இங்கு ஒன்றிரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

ஈரோடு நகரத்தில் உள்ள கோட்டையில் சிவாலயம் ஒன்று இருக்கிறது. இது ஒரு பண்டைய ஆலயம். மைசூர் அரச குடும்பத்திற்கும் மதுரை நாயக வம்சத்திற்கும் நடந்த ஒரு பெரிய போர் இங்கேதான், மூன்று நூற்றுண்டுகளுக்கு முந்தி நடந்தது. அவ்வூர் ஆலயத்துக் கல் வெட்டு அதைக் கூறுகிறது. ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருநாமம் 'அர்த்த கபாலீசுவரர்' என்று சொல்லி அர்ச்சகர் அதனைத்தான் கூறும் துதியிலும் கூறுகிறுர். அது மாத்திரம் அல்லாமல் அந்த ஈசனுடைய பெயரினுலேதான் ஈரோடு என்ற பெயரும் வந்ததாம். ஆனுல் உண்மை எப்படி இருக்கிறது?

ஆலயத்துக் கல் வெட்டுகளினுல் சுவாமியின் பெயர் "தான் தோன்றீசர்" என்பதாகக் காண்கிறேம். தானே தோன்றிய ஈசர் என்பது அதன் பொருள். அதாவது அது சுயம்பு மூர்த்தி என்பதே. பண்டைத் தமிழ் நாட்டு ஆலயங்களில் எல்லாம் தமிழ்ப் பெயர்களை மூர்த்திகளுக்கு இட்டு இருந்தனர். வடமொழிப் பெயர்கள் எல்லாம் பின்னுல் ஏற்பட்டவை. மொழி பெயர்ப்பு அல்லது மொழி மாற்றம் காரணங்களில்தான் வடமொழிப் பெயர்கள் வந்தன. ஈரோட்டில் உள்ள பெயர் மொழி மாற்றம் ஆகும். திருப்பேரூரில் வழங்குவது மொழி பெயர்ப்பு ஆகும். பட்டீசர் (திரு ஆன்பட்டி உடையார் என்பது கல் வெட்டில் காணுவது) என்ற பெயர் கோஷ்டீசுவரர் எனக் கொள்ளப் பட்டது. 'கோஷ்டி' என்றுல் வட மொழியில் பட்டி என்பது. வடமொழிப் பெயர் பழைய கல் வெட்டுகளில் இல்லை. ஆகவே. ஈரோட்டிலோ, தான்றேன்றீசர் என்பதே பழைய பெயர். அர்த்த கபாலீசர் என்பது ஊரினுடைய பெயரைத் தப்பாகப் பொருள் படுத்திக் கொண்டு சமீப காலத்துக் கோயிலாட்கள் தம் ஆலயத்தைக் கௌரவப் படுத்த இட்ட பெயராகும்.

இனி ஈரோடு என்ற பெயரின் உண்மைப் பொருளை ஆராய்வோம். அதே ஆலயத்துக் கல் வெட்டுகளினுல் அதன் பெயர், ஈரோடை என்று காண்கிறேம். ஈரோடை என்றுல் இரண்டு ஓடை என்று பெயர். இரண்டு ஓடைகளுக்கு நடுவில் கட்டப்பட்ட ஊர் என்று பொருள். ஊருக்கு வடக்கிலும் தெற்கிலும் இரண்டு ஓடைகள் உண்டு. அவைகளுக்கு நடுவில் ஏற்பட்ட ஊர் ஆதலால் ஈரோடை என ஆயிற்று. இது நாளாவட்டத்தில் ஈரோடு என மருவிற்று. அவ்வூர் உள்ள பிராந்தியத்தில் 'ஓடை' என்ற விடுதிகள்

கொண்ட பெயர்கள் பல உண்டு. அவைகள் எல்லாம் மருவி 'ஓடு' ஆயின. சித்தோடு என்ற சொல் சிற்றோடை என்பதின் மாறுபாடு. வெள்ளோடை தான் வெள்ளோடு என ஆயிற்று. இவைகளுக்கு சிறிய ஓடை, வெள்ளை ஓடை என்று பொருள். அவ்வித ஓடைகளுக்கு அருகில் உள்ள ஊர் என்று நாம் கொள்ள வேண்டும். பல ஓடைகளுக்கு அருகில் ஏற்பட்டது பல்லோடை ஆகும். அது நாளா வட்டத்தில் பல்லடம் ஆயிற்று. இவைகளுக்கு எல்லாம் கல் வெட்டுகளே ஆதாரமாகும். இந்த உண்மையை நேரில் ஆராய வேண்டியவர்கள் அந்த அந்த ஊர் ஆலயங்களில் காணும் கல் வெட்டுகளைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். கல் வெட்டுகளைப் படிக்கத் தெரியாதவர்கள் அரசியலார் எடுத்துப் பதிப்பித்திருக்கும் பிரதிகளை வாசித்து அறியலாம்.

இனி, தாராபுரத்தை விராட நகரம் என்று சொல்லும் செய்திக்கும் ஆதாரம் இல்லை என்பதையும் பார்ப்போம். இந்த ஊர்க் கோட்டை ஆலயத்தில் காணும் கல் வெட்டினால் இவ்வூர்ப் பெயர், "இராஜ இராஜபுரம்" என்று கண்டிருக்கிறது. இராஜ ராஜபுரமே தாராபுரம் என்று மருவிற்று. உதாரணமாகத் தஞ்சை ஜில்லாவிலுள்ள தாராசுரம் என்ற பெயரும் இராஜ ராஜேசுவரம் என்ற பெயரின் மருவாகும். "ஜ" என்ற எழுத்து உச்சரிப்பில் த என்று தமிழில் மாறுவது சகஜம். இவ்விதமான மொழி நூல் தத்துவ முறையினால் இந்த மாறுதலை விளக்கலாம். தாராபுரத்தினுடைய பழஞ் சரிதம் இது வரை நன்றாக ஆராயப் படவில்லை.

அது இராஜராஜன் என்ற ஒரு கொங்கு சோழனால் ஆக்கப்பட்டது. அந்த அரசன் 12-ம் நூற்றாண்டில் கொங்கு நாட்டை ஆண்டவன். அவ்வம்சத்தின் விவரம் அறிய வேண்டுமானால் 'கொங்கு மல'ரின் பழைய பிரதிகளைப் பார்த்தால் தெரியும்.

கோவன் புத்தூர் என்ற பெயரும் இப்படித்தான் கோயமுத்தூர் என மருவிற்று. இதனுடைய முழு விவரமும் 'கொங்கு மல'ரில் வெளி வந்திருக்கிறது. இந்த உதாரணங்களினால் ஊர்ப் பெயர்கள் எவ்விதம் மாறுபாடு அடைந்திருக்கின்றன என்பதை அறியக் கூடும். உண்மையை அறிய வேண்டுமானால் கல் வெட்டுச் சான்றுகள் பல இருக்கின்றன. அவைகளை ஆராய்ச்சி செய்து உண்மைகளைக் கண்டு கொள்வதே நமது கடமை ஆகும்.

சிறுகதை:

பூங்கொடி

கே. விஜயராகவன்

பூசாரிக்கவுண்டனைத் தெரியாதவர்கள் அந்தப் பக்கத்திலே யாருமே கிடையாது. அவனுடைய தாயாரும் அவனும் புதூரிலே குடியிருந்தார்கள். அவனுக்குச் சொந்தத்திலே ஒரு வீடும் ஒரு இரட்டை மாட்டு வண்டியும் இரண்டு ஆலம்பாடிக் காளைகளும் இருந்தன. தினசரி பொள்ளாச்சிக்கு பாரம் போட்டுக்கொண்டு போவான். சந்தை நாளில் சவாரி. ஒரு அலாதியான வாழ்க்கை, நல்ல சுபாவம். வயது இருபதுதான். யாரையும் வசீகரப் படுத்தும் காந்த சக்தி. புதூரிலே ஆண்கள், பெண்கள் குழந்தைகள் அத்தனை பேருக்கும் அவனிடம் பிரியம். பொள்ளாச்சி சந்தைக்குப் போவதானால் 'நான் முந்தி நீ முந்தி' என்று பூசாரியின் வண்டியில் தொத்திக் கொள்வார்கள். பூசாரியின் வண்டி 'மெயில் மெயில் மாதிரி போகும்' என்பார்கள். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதுபோல, பூசாரியின் வண்டி தூரத்தில் வரும்போதே மாடுகளின் கழுத்திலுள்ள மணிகள் 'கல கல' வென சப்திக்கும். பூசாரியைக் கொஞ்சம் தட்டிக் கொடுத்தால் அவனுக்கு 'ஜோர்' கிளம்பி விடும். தெம்மாங்கு பாடிக் கொண்டே மாடுகளைத் தட்டி விடுவான். வண்டி கனவேகத்தில் பறக்கும். பூசாரியின் வண்டி வருஷம் பூராவும் எங்கேயாவது போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கும். அவனுக்கு வீட்டில் சும்மாவே இருக்கப் பிடிக்காது. வெற்று வண்டியையாவது எங்காவது ஓட்டிக்கொண்டு போய்த் திரும்புவான்.

நீங்கள் பூங்கொடியைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்க மாட்டீர்கள். அவள் பூசாரியின் மாமன் மகள். அவளது மருண்ட விழியையும், கொண்டையில் மருக்கொழுந்தைச் சொருகியிருக்கும் பாவனையையும், தேகக் கட்டையும், கபடமில்லாப் பேச்சையும், அழகிய தோற்றத்தையும், பார்த்தால் நீங்கள் சொக்கிப்போவீர்கள். ஏன் பூசாரியே அவள் அழகில் சொக்கிப் போயிருந்தான். அவனுக்கு அவளிடம் ஆசை கொஞ்சநஞ்சமல்ல. பொள்ளாச்சியிலிருந்து வந்தால் வெறுங் கையோடு வரமாட்டான். குட்டி பூங்கொடிக்கு ஏதாவது தின்னவோ, அல்லது வேறு அவளுக்குப் பிரியமான சாமான்களோ வாங்கி வருவான். ஊரிலிருக்கும் போது 'தேன் வண்டு மலரைச் சுற்றித் திரிவதுபோல' அவளையே சுற்றிக் கொண்டிருப்பான். அவளுக்கு அவனிடம் ஆசை இருந்ததோ என்னவோ! அதனாலே அவள் ரொம்பவும் கர்வப் பட்டுக் கொண்டிருந்தாள். பூசாரியின் மாமனுக்கு புதூரிலே ஒரு வீடும் கொஞ்சம் பூமியும் உண்டு. ஆனால் அழுத்தக் காரன். ஊரிலே அவனுக்குப் 'பிசினாறி' என்று பெயர்.

உரிய காலத்திலே பூசாரியின் செலவில் பூங்கொடிக்கும் பூசாரிக்கும் கல்யாணம் நடந்தது. புதுத் தம்பதிகளை வாழ்த்தாதவரே கிடையாது. நல்ல பொருத்தம் என்று எல்லாரும் சொன்னார்கள்.

புது மணம் ஆன புதிதில் பூங்கொடிக்குக் கணவனோடு பேச என், எதிரில் நிற்பதற்கே ரொம்ப வெட்கமாயிருந்தது. கலியாணம்

ஆவதற்கு முன் அவர்கள் தனியாக சந்திக்கையில் எப்படியெல்லாம், விளையாட்டு வேடிக்கைப் பேச்சுப் பேசுவாள். அதெல்லாம் இப்போது திடீரென்று என் மேலுக்கு வராமல் உள்ளத்துக்குள்ளேயே அலைபோல் அடங்கிக் கிடக்கிறது என்பதை நினைத்தால் அவளுக்கே ஆச்சரியமாயிருக்கும். முன்பெல்லாம் ஏதோ ஒரு விந்தைக் கனவை எதிர் பார்ப்பதுபோல் மனம் கட்டுக்கடங்காத பரவச நிலை கொள்ளுமே? ஆனல் இன்ருே? இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது?

அதேமாதிரிதான் பூசாரியின் மன நிலையை விவரிப்பதும் அசாத்திய மான காரியம். அவன் மட்டும் ஒரு கவியாக இருந்திருக்கும் பட்சத்தில் பூங்கொடியைப் பற்றி அருமையான பல காவியங்கள் இயற்றியிருப்பான். அவன் ஒரு சித்திரக் காரனுக இருந்திருந்தாலும் அதி உன்னதமான அவள் எழிலைச் சிந்தும் சித்திரங்களை வரைந்து தள்ளியிருப்பான். ஆனல்— அந்தோ — அவன் சாதாரணப் பூசாரிக் கவுண்டன்தான்! அன்பு —காதல் -இன்பம் முதலியவைகளைப் பற்றி அவனுக்குப் பேசத் தெரியாது. நண்பர்களோடு விவாதிக்கவும் தெரியாது.

காவியத்து நாடகத்துக் காதலை அவன் கொஞ்சமும் அறியாதவன்! இருந்தாலும் குளிர் நிழலில், தெய்வ கன்னிகைபோல் நிற்கும் பூங்கொடியைக் காணக்காண அவனுடைய மனம் கவிதை வெறி கொண்டு ஆனந்த நிலையில் தத்தளிக்கும். ஒரு ஆறு மாதத்தில் பூங்கொடியும் எப்படியோ மெல்ல மெல்ல மொக்கு விரிந்து மலர் ஆவது போல் தன் நாணத்தை விட்டுப் பேச ஆரம்பித்து விட்டாள்.

"என்ன! கோட்டான் மாதிரி குந்திக்கிட்டு இருக்கிறயே, நான் சொல்லறது காதிலே உளுந்துதா?"

"உளுந்துது"

"பின்னெ என்ன; இந்த ஆடி நோம்புக்கு வாரதுக்கு?"

"நாந்தா, அப்பவே சொன்னே. உம்பேச்சை கேட்டுக்கிட்டு இந்த ரண்டு நோம்புக்கும் உம் பின்னேடே வந்தே. நீதா சொன்னது சொன்னபடி நடந்தியா? உங் கொப்பந்தா நடந்தானு?"

"எங்கப்பஞ் சங்கதி உனக்குத் தானு தெரியும்! ஊரே சொல்லுது. உம்மேலே ஆணை; இந்த ஆடிக்கு நீ கட்டாயம் வரோணும்."

"அது முடியாது, உங்கப்பே, காங்கயம் மாடுக வாங்கிக் கொடுக்கிறேண்ணு சும்மா சும்மா எமாத்தரானே! நீ அவன் மகதானே"

"நீ இப்ப வருவயா மாட்டயா?"

"ஊஹூம்"

அடுத்த ஆடியும் வந்தது. "என்ன! பூங்கொடி நான் ஊருக்கு வாரே, உங்கொப்பங்கிட்டே சொல்லி நல்ல காங்கயத்துக் காளெக ரண்டு வாங்கிக் குடுக்கச் சொல்லு. இல்லாட்டிப் போனு எனக்கும் உனக்கும் ...... என்று சொல்லி வைத்தான்.

பூசாரியின் மாமனு இதற்கெல்லாம் மசிகிறவன். காளைகள் விஷயத்தையே அடுத்த ஆடிப்பண்டிகைக்கு ஒத்திப் போட்டு, ஒரு விதமாக மாப்பிள்ளையையும் பெண்ணையும் அனுப்பி வைத்தான். பூங்கொடி தன் புருஷனுக்காகச் செய்த முயற்சி அத்தனையும் வீணுயிற்று, அடுத்த பண்டிகையையும் முன்போலவே தட்டிக் கழித்து விட்டான். பூங்கொடி தகப்பனிடம் இதைப்பற்றிப் பேசிப் பார்த்தாள். கண்ணீர்விட்டுக் கதறிப் பார்த்தாள். அப்பன்சாமி ஒன்றுக்கும் இடங்கொடுக்கவில்லை. "அவன் வந்தா வாரான், வராட்டிப் போரான் மிச்சமாச்சு. இப்பொத்தா ரண்டு ஆடி, ரண்டு தீவாவளியாச்சே. இன்னும் என்ன அவனுக்கு. சும்மா வாரதுண்ணு வருட்டும். காளெக வாங்க முடியாது" என்று சொல்லிவிட்டான்

இந்த தடவை பூசாரி சீராடிக் கொண்டான். பூங்கொடி அப்பன் வீட்டோடு இருந்தாள். அவளை அவன் அழைக்கவில்லை அவன் மாமன் வீட்டுப் பக்கமே வருவதில்லை. பூங்கொடி எப்படியாவது அப்பனைச் சரி செய்து காளைகள் வாங்கி விடுவாள் என்று நினைத்தான். ஆறு மாதங்களும் சென்றன. அவன் எண்ணம் ஈடேறவில்லை, பாவம். கணவனே வைராக்கியத் தோடிருக்கிறுன். அவனிடம் நெருங்கவும் பயப்பட்டாள். அவன், "என் முகத்திலேயே விழிக்கக்கூடாது!" என்று வேறு சொல்லியிருந்தான்.

பூசாரிக்கும் மனம் உடைந்து விட்டது. ஊருக்கே அதிகமாக வருவதில்லை. ஆலம்பாடி மாடுகளையும் விற்று விட்டான். பைத்தியம் பிடித்தவன் மாதிரி அலைந்தான். பூங்கொடியின் மேல்

அளவில்லாத கோபம். "காளைகள் வாங்கா விட்டால் போகுது. இவ அப்பன் வீட்டிலிருந்து வாரதுக்கு என்னவாம்" என்று பிதற்றிக்கொண்டு இருந்தான். கடைசியில் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ போய் விட்டான்.

இரண்டு வருஷங்கள் அவனைப் பற்றிய தகவலே இல்லை. பூங்கொடி அவனை நினைத்துக்கொண்டு துவண்டு வாடிப் போனாள். அவள் உள்ளம் வறண்டு விட்டது. அவளது அகமும் முகமும் மலர்ந்து வெகு நாளாயிற்று. ஊரார் தன்னையும், அப்பனையும் ஏசுவதை அவளால் சகிக்கவே முடியவில்லை. தந்தையோ அவளைச் சட்டை செய்வதில்லை. பூசாரியை நினைத்து நினைத்து அழுவாள். பழைய சம்பவங்களையெல்லாம் நினைந்து உருகுவாள்.

ஆனால் என்றைக்காவது ஒரு நாள் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையின் மீதே அவள் உயிரோடிருந்தாள். சீக்கிரம் அவன் வர வேண்டும் என்று தனக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். கொஞ்ச நாளாகவே அவள் தீவிரமாக வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். பால் தயிர் விற்றுப் பணம் சேர்த்தாள். அவள் உள்ளம் வறண்டு போயிருந்தாலும் ஒரு தனி உற்சாகத்தோடுதான் வேலை செய்து வந்தாள்.

* * *

இன்று பூங்கொடியைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இன்றுதான் அவள் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. வெகு நாளைக்குப் பின் தலைசீவிக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். முன் போலவே ஒரு கூடை மருக்கொழுந்தை தலையில் திணித்துக் கொண்டிருந்தாள். பேச்சுக் கலகலப்பாக இருந்தது. எல்லோரையும் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே இடுப்பில் குடத்தை வைத்துக் கொண்டு ஒய்யாரமாக நடப்பதைக் கண்டால் ஆச்சரியமாக இருக்கிறது!

ஆம், அடுத்த வாரம் ஆடிப் பண்டிகை. அவள் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்த இரண்டு நூறு ரூபாய்களை அப்பனிடம் கொடுத்து காளைகள் வாங்கிவர காங்கயம் அனுப்பி யிருக்கிறாள். அவள் வேண்டிக் கொண்ட தெய்வங்களுக்கெல்லாம் பொங்கல் வைக்க வேண்டும். எறிதேங்காய் போட வேண்டும். அவளுக்குப் பேச நேரமேது! ஆனாலும் இடையிடையே சிங்கப்பூர் மச்சானைக் கேலி செய்து கொண்டிருந்தாள். அது யார் சிங்கப்பூர் மச்சான் என்று கேட்கத் தோன்றுகிறதா? வேறு யாருமில்லை, பூசாரிதான்.

மாட்டை விற்ற பணத்தை எடுத்துக் கொண்டு சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தான் பூசாரி. அங்கே மூட்டைகள் தூக்கிக் காலங்கடத்தினான். அடிக்கடி பூங்கொடியை நினைத்துக் கொள்வான். மனங் குமுறுவான். உடனே திரும்பி வரவும் முடியவில்லை. திடீரென ஜப்பான் சண்டை மூண்டது. அங்கிருந்து ஓடி வந்தவர்களோடு இவனும் சேர்ந்து கொண்டான். பல நாள் காய்ச்சலோடு கஷ்டப் பட்டுக் கொண்டு சென்னை ஆஸ்பத்திரியில் இருந்தான். குணமானபின் நேற்றுத்தான் சர்க்கார் செலவில் ஊருக்கு வந்து சேர்ந்தான்.

காங்கயம் காளைகள் அவனுக்கு முன்னால் ஊர் வந்து சேர்ந்து விட்டன!

கணவனை ஊருக்கு அனுப்பி வைத்த இந்த யுத்தத்தை பூங்கொடி வாயார வாழ்த்தினாள்.

சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

உரைபெறு கட்டுரை

பாண்டியன் நெடுஞ் செழியன் செங்கோல் முறை தவறி கோவலனைக் கொலை செய்த படியால், அன்று முதல் பாண்டிய நாட்டில் மழை இல்லாமல் வறுமையும் நோயும் அதிகரித்தன. ஒரு பொற்கொல்லனுடைய வஞ்சகத்தால் இத் தீங்கு நேர்ந்ததினால், நெடுஞ் செழியனுக்குப் பின் பாண்டிய நாட்டை ஆண்ட வெற்றிவேற்செழியன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு ஆயிரம் பொற் கொல்லரைப் பலி கொடுத்துச் சாந்தி செய்ய, நாட்டில் மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கின.

இந்தச் செய்தியைக் கேட்ட கொங்கு நாட்டுச் சிற்றரசர்களான கோசரும், இலங்கை மன்னன் கயவாகும், சோழ நாட்டு மன்னன் பெருங்கிள்ளியும் தங்கள் நாட்டிலும் பத்தினிக் கடவுளுக்கு கோயில் அமைத்து விழாவும், சாந்தியும் செய்ய அவர்களுடைய நாடுகளெல்லாம் வளமாகச் செழித்தோங்கியது.

சேர நாட்டு மன்னன் செங்குட்டுவன் தன் தலை நகராகிய வஞ்சிக் கருவூரில் பத்தினிக் கடவுளுக்கு கோயில் அமைத்துச் சிறப்புச் செய்த விவரம் வஞ்சிக் காண்டத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தக் கோயில்தான் இப்போது கொச்சி ராஜ்ஜியத்திலுள்ள கொடுங்கலூர் என்னும் ஊரிலிருக்கும் பகவதி கோயிலாயிருக்கலாம் என்று எண்ண சில ஆதாரங்கள் உண்டு. இந்தப் பகவதி கோயிலில் நடைபெறும் விழாக் காலத்தில் பாடப்படும் பாட்டுகளில் பகவதியை "ஒற்றை முலச்சி" என்று சொல்லப் படுகின்றது.

1. அன்று தொட்டுப் பாண்டியன் நாடு,
மழை வறம் கூர்ந்து, வறுமை எய்தி,
வெப்பு நோயும் குருவும் தொடர
கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று
கள வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய,
நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

2, அது கேட்டு, கொங்கு இளங்கோசர்
தங்கள் நாட்டகத்து நங்கைக்கு
விழவொடு சாந்தி செய்ய,
மழை தொழில் என்றும் மாறாதாயிற்று.

3. அது கேட்டு, கடல்சூழ் இலங்கைக்
கயவாகு என்பான் நங்கைக்கு
நாட் பலி பீடிகை கோட்டம் முந்துறுத்து,
ஆங்கு, "அரந்தை கெடுத்து வரம் தரும்
இவள்" என, ஆடித்திங்கள் அகவையின்
ஆங்கு ஓர் பாடி விழாக் கோள்
பன் முறை எடுப்ப, மழை வீற்றிருந்து,
வளம் பல பெருகி, பிழையா
விளையுள் நாடு ஆயிற்று.

4. அது கேட்டு, சோழன் பெருங்கிள்ளி
கோழியகத்து, "எத்திறத்தானும் வரம் தரும்
இவள் ஓர் பத்தினிக் கடவுள்" ஆகும் என,
நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து,
நித்தல் விழா அணி நிகழ் வித்தோனே.

பதவுரை

1. அன்று தொட்டுப் பாண்டியன் நாடு—; மழை வறம் கூர்ந்து—மழை இல்லாமையால் வறட்சி அதிகமாகி; வறுமை எய்தி—; வெப்பு நோயும் குருவும் தொடர — மழை இல்லாத வெப்பத்தினால் வரும் நோயும் கொப்பளமும் அதிகப்பட; கொற்கையில் இருந்த — பாண்டிய நாட்டுத் தலை நகராகிய கொற்கை என்னும் ஊரில் அரசு செய்து வந்த; வெற்றி வேற் செழியன் —; நங்கைக்கு — பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு; பொற்கொல்லர் ஆயிர வரைக் கொன்று —; களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய — வேள்வியினால் சாந்தி செய்து விழாக் கொண்டாட; நாடு மலிய மழை பெய்து— நாடு செழிப்படைய மழை பெய்து; நோயும் துன்பமும் நீங்கியது —;

2. அது கேட்டு—பாண்டியன் நெடுஞ்செழியன் சாந்தி செய்து தன் நாட்டுத் துன்பத்தை நீக்கிய செய்தியைக் கேட்டு; கொங்கு இளங்கோசர்— கொங்கு நாட்டின் சிற்றரசராகிய கோசர்; தங்கள் நாட்டகத்து—தங்கள் நாட்டில்; நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய — பத்தினிக் கடவுளுக்கு விழாவும் சாந்தியும் செய்ய; மழை தொழில் என்றும் மாறாதாயிற்று — மழையும் விவசாயத் தொழிலும் மாறாமல் செழிப்பைக் கொடுத்தன.

3. அது கேட்டு—அந்தச் சங்கதியைக் கேட்டு; கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான்— கடலால் சூழப்பட்ட இலங்கை நாட்டின் அரசன் கயவாகு; நங்கைக்கு — பத்தினிக் கடவுளுக்கு; நாட்பலி பீடிகை — நாள் தோறும் பலியிடும் இடத்தை உடைய; கோட்டம் முந்துறுத்து ஆங்கு — கோயிலைக் கட்டி; அரந்தை கெடுத்து—துன்பத்தை நீக்கி; வரம் தரும் இவள் என — நாம் வேண்டும் வரத்தைக் கொடுக்கின்ற தெய்வம் இவள் என்று; ஆடித் திங்கள் அகவையின் — ஆடி மாதத்திலே; ஆங்கு ஓர் பாடி விழாக் கோள் — தன்னுடைய நகரத்தில் விழா நடத்துவதை; பன் முறை எடுப்ப— ஆண்டு தோறும் தவறாமல் நடத்த; மழை வீற்றிருந்து — குறைவில்லாமல் மழை பெய்து; வளம் பல பெருகி — எல்லா வளமும் பெருகி; பிழையா விளையுள் நாடு ஆயிற்று—தவறாமல் விளை பொருள்கள் விளையும் நாடு ஆயிற்று. (அதாவது இலங்கை மாறாத செழிப்புடைய நாடாயிற்று.)

4. அது கேட்டு — அந்தச் செய்தியைக் கேட்டு; சோழன் பெருங்கிள்ளி; பெருங்கிள்ளி என்னும் சோழ மன்னன்; கோழியகத்து — (தன் தலைமைப் பட்டிணமாகிய) உறையூரில்; எத்தாலும் வரம் தரும் — எந்த வகையிலும் நாம் வேண்டும் வரத்தைக் கொடுக்கின்ற; இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும் — (கண்ணகியாகிய) இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆதலால்; நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து — இவளுக்கு பத்தினிக் கோயிலை ஏற்படுத்தி; நித்தல் விழா அணி நிகழ்வித்தோனே — நித்தமாகிய அணி விழாவையும் செய்தான்.

(விசேஷக் குறிப்பு):—கொற்கை என்னும் பட்டினம் சில காலம் பாண்டியர்களுடைய தலை நகரமா யிருந்தது. இதற்குக் கபாடபுரம்' என்னும் மற்றொரு பெயரும் உண்டு.

இதில் குறிக்கப்பட்ட இலங்கை மன்னன் கயவாகு கி. பி. 171முதல் 193 வரை அரசாண்டான்.



கலியாணம்

"தீபன்"

[செல்லையாவைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் எனக்கு இந்த வாக்கியம் ஞாபகம் வருவதுண்டு:

கேட்ட பண்கள் சுவையுள்ளன
கேளாதனவோ இன்னும் சுவையுள்ளன.

செல்லையாவின் (தீபன்) வாழ்க்கை ஒரு அரிய காவியம். அந்தக் காவியம் பூர்ணமாவதற்குமுன் இறைவன் அவரை அழைத்துக் கொண்டான்.

தீபன் என்ற பதம் ரஸிகனுக்கு இன்னொரு பெயர்: லட்சுமீகரம் பொருந்திய முகத்தில் சரஸ்வதி விலாசம் பிரகாசிக்கும். உருவமோ மன்மத வடிவு. இந்த கம்பீர புருஷனுக்கு உயர்ந்த கலாஞானத்தையும் அபூர்வமான அழகுணர்ச்சியையும் வெகு ரஞ்சகமான சாரீர நயத்தையும் அருளியிருந்தான் ஈசன். தீபனுடைய கடிதங்கள் எல்லாவற்றிலும் நேர்த்தியான இப்பண்புகளை பார்க்கலாம். இக்கடிதங்களை வாசிக்கும் பொழுது, தனம்மாள் வீணை வாசிப்பது போல் இருக்கும். இங்கு பிரசுரமாகும் கடிதம் என் கல்யாணத்தன்று எழுதப்பட்டது. சென்னையிலே மீனம்பாக்கத்தில் படுத்த படுக்கையாய், டாக்டர் உடம்பையே அசைக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருந்த காலத்தில் அன்பின் வலிமையால் பலவீனம் எல்லாம் பறந்து விடவே இவ்வளவு நீண்ட அழகிய கடிதத்தை எழுதியனுப்பினர். "உன்னுடைய கல்யாணத்தில் நான் தான் மாப்பிள்ளைத் தோழன்" என்று செல்லையா அடிக்கடி சொல்வதுண்டு. அதுபோலவே கடிதத்தின் பாவமும் அமைந்திருக்கிறது. சோமு]

10—2—1940

மீனம் பாக்கம்

சிரஞ்சீவி சோமசுந்தரத்துக்கு

இந்த மாசம் இரண்டாந்தேதியன்று அனுஷ நட்சத்திரத்தில் எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஜாதகம் பார்த்ததில் ஒருவர் 62 வயதென்றும் இன்னொருவர் 100 வயதென்றும் கணித்திருக்கிறார்கள். இரண்டையும் கூட்டிவகுத்துப் பார்த்தால் 80 வயதுக்கு குறைவில்லை. எதற்குச் சொல்கிறேன் என்றால், உனக்குப் பிறக்கப் போகும் பெண் குழந்தையை நம்ம பையனுக்குக் கொடுப்பதாக இப்பொழுதே கங்கணம் கட்டிக் கொண்டால், அவள் தீர்காயுசு சுமங்கலியாக இருப்பாள்

அல்லவா? பிறகு உன்னிஷ்டம். சொல்வதைச் சொல்லிவிட்டேன்.

எனக்குக் கல்யாணம் ஆகி வருஷங்கள் ஆகின்றன. குழந்தைகளோ பிறந்துகொண்டே இருக்கின்றன. இவைகள் காரணமாக நானும் நாளுக்கு நாள் 'பெரிய மனுஷன்' ஆகிக் கொண்டே வருகிறேன். 'பெரிய மனுஷன்' ஆகிவிட்டால் போதுமா? அந்த ஹோதாவைக் காட்ட வேண்டாமா? எங்கே? எப்பொழுது, யாரிடம் காட்ட என்பது அடுத்த கேள்வி. இந்தக் கேள்வி கொஞ்ச காலமாக என் மனசை உறுத்திக்கொண்டே இருந்தது. இப்பொழுது தான் அந்தக் கேள்விக்கு நிவர்த்தி ஏற்பட்டிருக்கிறது. ஒரு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நீ கல்யாணம் பண்ணிக் கொள்வதும் அல்லாமல் என்னை ஆசீர்வாதம் பண்ணவும் சொல்லுகிறாய். எனக்கு அதற்கெல்லாம் உரிமை உண்டென்றும் சொல்லுகிறாய். இந்த க்ஷணமே உன்னை ஆசீர்வாதம் பண்ணி என்னுடைய ஹோதாவைக் காட்டிக்கொள்ள உத்தேசம்: ஆசீர்வாதம் ஆரம்பமாகப்போகிறது.

தீர்க்க சுமங்கலி பவா ... என் சிரிக்கிறாய்? ஓஹோ! இது பெண்களுக்குச் சொல்ல வேண்டியதோ! எனக்கு முன்னமே தெரியும்; இப்படியேதாவது ஒன்றுக்கொன்று சொல்லிவிடுவேன் என்று. முன்னப் பின்னே ஆசீர்வாதம் பண்ணியிருந்தா லல்லவோ இந்த சம்பிரதாயமெல்லாம் தெரியப் போகிறது! கிடக்கட்டும் அதற்கென்ன? யாருமறியாமல் இந்த ஆசீர்வாதத்தை அந்தப்புரத்துக்கு அனுப்பிவிடு. உனக்கு வேறு ஆசீர்வாதம் தருகிறேன். ஆசீர்வாதத்துக்கும் என்ன பஞ்சமா? மனம் முட்ட ஆசீர்வாதமாகத்தான் இருக்கிறது. தீர்காயுசுபவா- சர்வமங்களமும் உண்டாவதாக; இத்தியாதி இத்தியாதி.

இத்துடன் ஆசீர்வாதப் பகுதி முடிவடைகிறது. ஆசீர்வாதமும் அளவுக்கு மிஞ்சிவிடக்கூடாது பாரு. இப்பொழுது அறிவுறுத்தல் என்ற அத்தியாயம் தொடங்கப் போகிறது.

மணவடையில் வைத்து நீ நிமிர்ந்தே தான் உட்காரவேண்டும். பெண் குனிந்து இருக்கிறதே என்று நீயும் தலையைக் கீழே போட்டு விடாதே. போட்டாயோ போச்சுது காரியம். 'மாப்பிள்ளைக்கு இருப்பது' என்பது ஒரு தனிக்கலை. அந்தக் கலையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது 'விரைப்பு'த்தான். விரைப்பாயிருந்தால்தான் பெண் வீட்டுக்காரர்களுக்கு உன் அருமை பெருமையெல்லாம் தெரியும். 'தொழு, தொழு' வென்று நீ உட்கார்ந்திருந்தால் 'மாப்பிள்ளையைப் பார்க்கலயா மாப்பிள்ளையை' என்று இரண்டு வார்த்தைகள் சொல்லுவார்கள். அந்த மாதிரி வார்த்தைகளுக்கு இடம் வைத்துக் கொள்ளவே கூடாது. எது எப்படி இருந்தாலும் நம்முடைய கௌரவத்தை மட்டும் விட்டுக் கொடுக்கவே கூடாது. தெரிந்ததா? விரைப்பாய் இருப்பதில் கழுத்து வலியெடுத்தாலும் அதைப் பொருட்படுத்தக்கூடாது. சுளுக்கிக் கொண்டாலும் பாதகமில்லை. விளக்கெண்ணெய்க்கும் என்ன பஞ்சமா? விளக்கெண்ணெயில் விரலை முக்கி நாலு தடவு தடவினால் சுளுக்கெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ஆனால் கௌரவம் சுளுக்கிக் கொண்டால் சுளுக்கெடுக்க முடியுமா என்று கேட்கிறேன்?

மணவடையில் இருக்கும்போது இல்லை - வீற்றிருக்கும் போது என்னை (!) ப்போல் பெரிய

மனிதர்கள், வந்து ஆசீர்வாதம் செய்வார்கள். ஆசீர்வதிக்கையில் அவர்கள் உன் நெற்றியில் விபூதியை எடுத்துப் பூசுவார்கள். அப்பொழுது நீ கண்ணை இறுக்கி மூடிக்கொள்ள வேண்டும். மூடாவிட்டால் விபூதி கண்ணில் விழுந்துவிடும். விழுந்தாலென்ன என்று கேட்கிருயா? ரொம்ப சரி, நீ இப்படிக்கேட்பாயென்று எனக்குத் தெரியுமே! விழுந்தாலென்னவா? கண்ணில் விபூதி விழுந்தால் கண்ணை முழிக்க முடியாது. கொஞ்ச நேரத்துக்குக் கண்தெரியாது போய்விடும். அந்த கொஞ்ச நேரத்துக்கு பெண்ணைப்பார்க்க முடியாது. கல்யாணநாளும் கிழமையுமாய் கண்ணிருந்தும் பெண்ணைப் பார்க்க முடியவில்லையே என்று 'லவா லவா' என்று அடித்துக்கொள்வதில் என்ன பயன்? அதற்காகத்தான் முன்னதாகவே எச்சரிக்கிறேன்.

கல்யாணம் சிறப்பாக நடந்தேறியதும் நலுங்கு என்றுஒன்று நடக்கும். நலுங்கு பூராவும் ஒரே விளையாட்டுத்தான். வேடிக்கை வேடிக்கையாக இருக்கும். முதல் ஐட்டம் பூப்பந்து எறிவது. பொண்ணு பூப்போலத்தான் எறியும். நீ ஓங்கியே எறி. ஏனென்ருல் பந்து பூப்போலத்தான் போய் விழும். பொண்ணுக்கு சேதம் ஒன்றும் ஏற்படாது. அடுத்த ஐட்டம் தேங்காய் உருட்டுதல். வெண்கலத்தேங்காயை பூப்பந்து என்று எடுத்து ஓங்கி எறிந்து விடாதே! இப்பொழுதே சொல்லிவிட்டேன். அடுத்த ஐட்டம் அப்பளம் தட்டுவது. இரண்டு அப்பளங்களையும் இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டு தலைக்குமேலே வைத்துத் தட்டி அப்பளமாரி பொழிவது. ரத்னக்கம்பிளி முழுவதும் அப்பளமயமாகிவிடும். தம்பதிகள் தலையிலும் அப்பளப் பூ வைக்கப் பட்டிருக்கும். உன் தலையில் விழுந்திருக்கும் அப்பளத் துண்டுகளை உன்னுடைய மச்சான் வந்து தட்டி விட்டுவிடுவான். உனக்கு அதைப்பற்றிக்கவலை வேண்டாம். முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கீழே விழுந்து கிடக்கும் அப்பளத்துண்டுகளை நீ எடுத்து தின்று விடக்கூடாது என்பதுதான், எவ்வளவு பசியாயிருந்தாலும் சரி, நாக்கு எவ்வளவு ஊறினாலும் சரி, மனசைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். அதிலேதான் பார்க்கவேண்டும் உன் சாமர்த்தியத்தை. கடைசி ஐட்டம் பல்லாங்குழி விளையாடுதல். இதில் நீ தோற்றுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லித்தருகிறேன். எதிரி கை வலுக்கிறது என்று தெரிந்ததும், கள்ளமுத்து (விரல்களுக்கு இடையே கூடி ஒழுக விட்டு) போட்டு ஆட்டத்தை 'காளாம்பூளாம்' ஆக்கிவிட வேண்டும். இதற்குப் பிற்பாடு பெண் எப்படிக்கூடி கெலிக்கும்? கள்ளமுத்துப் போடலாமா? அது சரியா? என்றெல்லாம் யோசிக்காதே. மானத்தைக் காப்பாற்ற மாப்பிள்ளை கள்ளமுத்துப் போடலாம் என்று நலுங்கு நூலில் சொல்லப் பட்டிருக்கிறது.

பாலும் பழமும் கொடுப்பது என்று ஒரு வழக்கம் நம்மவர்களுக்குள் வெகு காலமாக இருந்து வருகிறது. இதில் நம்முடைய பெண்களின் கஞ்சத்தனமும் கருமித்தனமும் நன்கு வெளியாகும். இம்புட்டுப் போலத்தான் கொடுப்பார்கள். ஒரு பழத்தில் பதினறில் ஒரு பங்குகூட இருக்காது. பாலும் இம்புட்டுன்னு இம்புட்டுப் போலதான். நுனி நாக்குகூட நனையாது. ஆனல் அந்த பாலும் பழமும் அமிர்தமாகத்தான் இருக்கும். இன்னும் சாப்பிட வேணும் இன்னும் சாப்பிட வேணும் என்று தோன்றும். ஆனல் அந்த

ஆசையை அடக்கிக் கொண்டு மேடைக்குப் போனதும், ஒரு சீப் புப் பழத்தை உரித்தோ உரியா மலோ உள்ளே தள்ளு; சுமார் அரைப்படி பாலே உள்ளே விடு. யார் வேண்டாம் என்கிருர்கள்!

பந்தியில் உனக்கு மட்டும் இர ண்டு தலைவாழை இலை போடப்பட் டிருக்கும். அதில் ஏழெட்டு லட்டு, பத்துப் பதினைந்து வடை, ஒரு அஞ் சாறு சோமாசி இன்னும் என்ன மெல்லாமோ வைக்கப் பட்டிருக் கும். அவ்வளவையும் ஒரு கை பார்க்க உனக்கு சக்தியிருக்கலாம். ஆனல் அந்த சக்தியை அங்கே காட்டக் கூடாது. ஒவ்வொன் றின் மேலும் உன் கையை வைத்து எடுத்துவிட வேண்டியது. அது தான் சம்பிரதாயம். அதுதான் மாப்பிள்ளைக்கு அழகு. இதற் காகப் பாயசத்தையும் விட்டு விடாதே.

பாயாசம் புதுமாப் பிள்ளைகள் உடம்புக்கு நல்லதுஎன்று இன்ப நூல் வல்லார் இயம்பி இருக் கின்றனர். (இதிலிருந்து நான் ஆதாரமில்லாமல் அளப்பவன் அல்ல என்பது அறியக்கிடக்கிறது)

*ஆண்டியப்ப பிள்ளை அவர்க ளின் ஆசீர் வாதத்துடன் பாயசத் தில் இறங்கிக் குளி. கொஞ்ச நேரம் முக்குளி நீச்சலும் மூச்சு முட்டிய பின் மல்லாக்கு நீச்சலும் அடி.

பட்டணப் பிரவேசம் சம்பந்த மாக ஒரு வார்த்தை. நான் உன் னைப்பார்த்து ரொம்ப நாளாச்சு. நீ எப்படியெல்லாம் வளர்ந்திருக்கி ருய் என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை உன்னுடைய தேகத் தின் விஸ்தீரணம் அதிகமாக இருக் கலாம். ஆனல் உயரம் அதிகமாக இருக்காது என்று எண்ணுகிறேன் ஆகையினல் ஒரு யோசனை.

ஊர்வலம் கார்வலமாகத்தான் இருக்கும். (கார்வலம் என்பதில் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கி நிற்கிறது. இதற்குத்தான் உருபு மயக்கம் என்று பெயர். இது எதற்காகச் சொல்லுகிறேன் என் ருல் உனக்கு இலக்கணம் தெரி யாது என்பதைக் காட்டுவதற்காக அல்ல; எனக்கும் தெரியாது என் பதைக் காட்டத்தான். ஏனென் ருல் இந்தக் காலத்தில் இலக்கணம் தெரிந்தவர்களுக்கு இலக்கியம் தெரிவதில்லை.) முன் கூட்டியே காரில் இரண்டு மூன்று 'ஸ்பேர்' தலையணைகளைப் போட்டு வைக்கும் படி ஏற்பாடு செய். யாராவது மாப்பிள்ளைக்கு உயரம் காணுது கீணுது என்று சொல்ல வாயெ டுக்கு முன் இரண்டு தலையணை களைப் போட்டுக் கொண்டு அதன் மேல் 'ஜம்' மென்று உட்கார்ந்து கொள். பட்டணப் பிரவேசத்தில் தூங்கி விழுந்து விடாதே. பத்தி ரம். பன்னீரால் நனைத்த பூப்

[ஆண்டியப்பபிள்ளை: அநுபவம் முதிர்ந்த ஒரு பெரியார்; தெள்ளத் தெளிந்த ரஸிகத்தன்மை; தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, சம்ஸ்கிருதம், பல மொழி பயின்றவர். அறிஞரிடத்தில் காதல், செல்லையா என்ருல் உயிர். டி. கே. சி. யிடம் அபார அளவு கடந்த ஈடுபாடு!

மோன நிலை முதல் மோர்க் குழம்புவரை எதைப் பற்றியும் வெகு ரஸமாகப் பேசக் கூடிய திறமை.

ஒரு நாள் ஆண்டியப்ப பிள்ளை யவர்கள், அக்காலத்துக் கல்யாண வீடுகளில் நடக்கும் சாப்பாட்டு விசேஷங்களைப் பற்றி எங்களிடம் ஆனந்தமாய்ப் பேசிக் கொண்டி ருந்தார்கள். மோர்க்குழம்பிற்கும் பாயஸத்திற்கும் பண்ணை பிடித்துப் போட்டிருப்பதையும் அதிலே ஆசாமிகள் நீஞ்சல் அடிப்பதையும் வர்ணித்த அழகு என்றும் மறக்க முடியாது. செல்லையா இந்த இடத் தில் சுகமாகக் குறிப்பிடுவது மேற் படி வர்ணனையைத்தான். சோமு]

பந்தை கண்ணில் ஒற்றிக் கொண்டே இரு.

அடேடே! ஒரு முக்கியமான விஷயம் மறந்து போய் விட்டது. தாலி கட்டுவதற்குமுன் கைத்தடியும் குடையுமாகக் காசிக்குப் போக வேண்டிவரும்.............. இன்னும் மாமனர் உன்னைக் கூப்பிடாவிட்டாலும் நீ பாட்டுக்குக் காசிக்குப் போய்விடாதே. காசிக்குப் போவதாயிருந்தாலும் பெண்ணையும் கூடக் கூட்டிக்கொண்டு போய்விடு...........

ஏதோ! நம்மையெல்லாம் கவனிச்சிக்கடே! ஞாபகம் இருக்குமா? இனிமேல் நேரம் இருக்குமா?

தீபன்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008



சிந்தனைச் சித்திரம்:

அமிர்தம்

கா. ஸ்ரீ. ஸ்ரீ

அப்போதும் உலகம் இருந்தது. உலகத்தில் மனிதர்கள் இருந்தார்கள். மிருகங்களும் இருந்தன. மரங்களும் புல் பூண்டுகளும் இருந்தன. எல்லா சீவராசிகளும் இருந்தன. அப்போதும் மனிதர்கள் சிந்தனை செய்து வந்தார்கள்; அல்லும் பகலும் உழைத்து வந்தார்கள்; பிராணிகளிடம் அன்பு செலுத்தினார்கள்.

ஆனால் சற்று நேரம் சிந்தனை செய்தவுடனே, மூளை நரம்புகள் பலவீனமாகி, மண்டை வெடித்துப்போய் மனிதன் சாகலானான். ஒரு முறை ஏர் உழுதுவிட்டு வீடு சேர்ந்ததுமே, குடியானவன் இவ்வுலகத்திலிருந்து விடை பெற்றுக் கொள்ள ஆரம்பித்தான். ஒருதரம் அன்பைச் செலுத்தியவுடனே மனிதன் இருதயம் உடைந்து, மீளாத் துக்கத்தில் ஆழ்ந்து போனான்.

மனிதர்கள் எல்லாரும் ஒன்று கூடி, "இதற்கு என்ன வழி செய்வது?" என்று ஆலோசிக்கலானார்கள். அந்த ஆலோசனை மண்டபத்திலேயே சிந்தனை வேகம் தாளாமல் பலர் இறந்தனர். "ஜீவரசத்தை—அமிர்தத்தை பெறுவதுதான் தகுந்த வழி" என்று கூறிவிட்டு ஒரு கிழவர் மூர்ச்சையானார்.

அவர் மரணம் மற்றவர்களை விழிக்கச் செய்தது. மனிதர்கள் அவருடைய கடைசி வாக்கைத் தெய்வ வாக்கென்றே கருதினர். அவர்கள் தங்களுக்குள் வலிமையில் மிகுந்த ஒருவனைத் தேர்ந்தெடுத்து அமிர்தத்தைப் பெற்றுவர அனுப்பினார்கள். அவன் நல்ல திடகாத்திரமுள்ள இளைஞன்தான்.

மானவன் பரந்த வயல்கள் பலவற்றையும் பாலைகளையும், வனவனாந்தரங்களையும் கடந்து சென்றான். அமிர்தம் கிடைக்கும் இடத்தை யாரும் அவனுக்குச் சொல்ல முடியவில்லை. மரங்களில் குலுங்கிய இனிய கனிகளைப் புசித்து, தண்ணிய சுனைநீரைத் தாகம் தீரப் பருகிய வண்ணம் அவன் சென்று கொண்டே இருந்தான்.

கடைசியில் அவன் ஒரு மலையடிவாரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே காவி ஆடை அணிந்த துறவி ஒருவர் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். அவர் வதனத்தில் தெள்ளிய நிலவொளி வீசியது. அவர் உச்சியிலிருந்து கொழுந்து விட்டு மலரும் ஜோதி ஒன்று ஆகாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

மானவன் அந்தத் துறவியின் அடிகளில் பணிந்தான்: "சுவாமி, உலகத்தில் மானிடர்கள் மிகவும் பலவீனர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வலிமை பெற அமிர்தம் வேண்டும். அது எங்கே கிடைக்கும் என்பதைத் தெரிவித்தருளல் வேண்டும்" என்று வணங்கி நின்றான்.

"நானும் அமிர்தம் பெறத்தான் தவம் கிடக்கிறேன். இன்னும் அது எனக்குக் கிடைப்பதாயில்லை. இதோ தெரிகிறதே, பர்வதம்; இதற்கப்பால் அமிருதம் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

இதைத் தாண்டிச் செல்லும் தைரியம் உனக்கு இருந்தால் போய்ப் பார்" என்று சொல்லிவிட்டு, அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.

மானவன் வயிறாரப் புசித்துத் தன் பசியைத் தணித்துக் கொண்டான். தன் இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டே தைரியமே துணையாக மலைமேல் ஏற ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்றதும், அவன் அதுவரையில் காணாத பல மரங்களும் பட்சிகளும் தென்பட்டன. அதற்கப்பால் சற்று தூரம் சென்றதும் சுவடே இருப்பதாக தெரியவில்லை. எங்கும் ஒரே பனி மூட்டம். உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு, மேலும் சென்றான்.

அடடா! பனி சூழ்ந்த ஆழ்ந்த பள்ளத்தில் அவன் உடல் போய் விழுந்தது. அவனுக்கு பிராணனே போய்விட்டது போலிருந்தது. கண்களை மூடிக்கொண்டு 'ஐயோ! தெய்வமே' என்று கதறினான்.

கண்களை மீண்டும் திறந்தபோது, அவன் சூரிய வொளியில் மனித உலகத்தில் நின்றான். தான் இவ்வளவு தைரியத்தோடு சென்று புத்துயிர் பெற்று மீண்டு வந்தது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அபூர்வமான சிந்தனை ஊற்றுக்கள் அவன் மூளையினின்றும் கிளம்பின.

அவன் நேராகத் தன் தோழர்களிடம் வந்தான்; நடந்த விவரங்களைக் கூறினான். எல்லோரும் ஏமாற்றம் அடைந்தார்கள். ஆனால், தாங்கள் அனுப்பிய பிரதிநிதி சிந்தனை செய்வதில் வல்லவனாகத் திரும்பியதைக் கண்டு அவர்களுக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது. மறுபடியும் மற்றொருவனைத் தேர்ந்தெடுத்து அமிர்தத்தை தேடி வர அனுப்பினார்கள்.

மானவன் நாடுகளை எல்லாம் கடந்து, மறுபடியும் அந்தத் துறவியைச் சந்தித்தான். முன்பு கூறிய பதிலையே அவர் சொன்னார்.

அவன் மலைமேல் ஏறினான். அமைதியையும் குளிரையும் பனியையும் நடுக்கத்தையும் மூச்சடைப்பையும் பொருட்படுத்தாமல் மகாதீரனாகச் சென்றுகொண்டே இருந்தான். பனிக்கட்டிகள் அங்கங்களை அழுத்தின. பிராணவாயு இல்லாமல் மூச்சுத்திணறியது. 'துறவி சொன்னது வாஸ்தவம். அமிர்தம் இந்த மலைக்கு அப்பால் தான் இருக்க வேண்டும்; ஆனால், அது நமக்குக் கிடைப்பது சாத்தியமில்லை போல் தோன்றுகிறது: இதற்கு மேல் ஒவ்வோர் அடி எடுத்து வைப்பதும் சாவுக்கு அழைப்பாகத்தான் இருக்கும். வந்த வழி திரும்பி விடலாமா?' என்று அவன் கருதினான். ஆனால் மற்றொரு குரல், 'மனிதன் ஆபத்துக்களிடையும் துயர்களிடையும் வாழ்கிறான். அவை மென்மேலும் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஆயினும் அவன் தன் வாழ்வில் ஆபத்தின் ஒரு அணுவையாகிலும் நீக்கமுடியுமானால்—தடுக்க முடியுமானால்—அவனுடைய சாவும் போற்றக் கூடியதாகுமல்லவா?' என்று கேட்டது.

அவன் தன் மரத்துப் போன கைகளால் பனிக்கட்டிகளை விலக்கிக்கொண்டே நாலடி தூரம் சென்றான். கைகள் ஓய்ந்து போயின. கால்கள் மேலே நகர மறுத்தன. அவன் அங்கேயே ஜடப் பொருள் போல அசையாமல் கிடந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம், சிறிது தூரத்தில் கதிரவன் பொற்கிரணங்கள் போல ஏதோ மின்னுவதை அவன் கண்டான். 'என்ன ஆனாலும் ஆகட்டும்' என்ற தைரியத்தோடு தன் பலம் முழுவதையும் திரட்டி ஒரே தாவாகத் தாவி அந்த ஜோதி மண்டலத்தில் குதித்தான். ஆ! இதென்ன! கடலில்



பேரலைகள் எழுவது போல உயர்ந்த பனி அலைகள் ஆகாயத்தையும் மலைச் சரிவையும் ஒன்றாக்கிப் பிரளயதாண்டவம் புரிகின்றன. அவைகளிடையே அவன் பந்து போல் சுழலுகிறான். ஏதோ கூவிச் சொல்ல விரும்புகிறான். ஆனால் வாயிலிருந்து ஒரு சொல் கூட வெளிவரவில்லை. உதடுகள் அசைவது போலத் தோன்றுகின்றன. இதோ மின்னல் தேகத்தோடு ஒருவன் வருகிறானே, இவன் யார்? "மானவா, எழுந்து செல்!" என்ற இனிய சொற்கள் காதில் விழுகின்றன. இவன் கையில் பளபள என்று ஒளிர்கிறதே; இது என்ன? அமிருத கலசந்தானா?

அது கனவா நினைவா? மானவன் மீண்டும் பூமியில் நின்றான். நடந்ததை நண்பர்களிடம் வந்து சொன்னான். அவன் ஓயாமல் வேலைகளில் ஈடுபட்டான்; அவனுக்கு எப்போதும் களைப்பு உண்டாக வில்லை.

இந்தத் தடவை மனிதர்களுக்கு மேலே என்ன செய்வதென்று தோன்றவில்லை. "ஒவ்வொரு மானவனாக இப்படிச் சென்று அமுத நீராடி வருவதென்றால் எத்தனை யுகங்கள் ஆகுமோ? ஒவ்வொருவனும் அத்தனை தூரம் செல்ல முடியும் என்பதுதான் என்ன நிலை? இரண்டாம் தடவை சென்றவன் அமிருத கலசத்தைப் பார்த்து விட்டு வந்திருக்கிறான். ஆகையால் எப்படியாவது அந்தக் கலசத்தைப் பெற்று விட்டால் எல்லோரும் அமிருதத்தைப் பருகிக் குன்றாத வலிமை பெறலாம்" என்ற எண்ணம் அவர்களுக்கு நம்பிக்கையை

அளித்தது. 'இன்னும் ஒருதரம் எதற்கும் பார்த்துவிடலாம்' என்று தீர்மானித்து, அவர்கள் மறுபடியும் ஒருவனைத் தேர்ந் தெடுத்து அனுப்பினார்கள்.

மானவன் மறுபடியும் அந்த மலையைக் கடந்துகொண்டிருந் தான். ஆனால் இப்போது பனி அவ னுக்கு இதமாக இருந்தது. பனி ஓடைகள் அவன் கைக்கு சூடாக இருந்தன. அவன் அதை ஒரு புது நாடாகவே கருதவில்லை. எல் லோரிடத்தும்—எல்லாவற்றி லும்—அவன் அன்பு செலுத்திக் கொண்டிருந்தான். சற்றும் சிரம மோ இடையூறோ இன்றி அவன் மென் மேலும் போய்க்கொண்டி ருந்தான். அன்பின் சக்தியைக் கண்டு, அவனுக்கு வியப்பும் களிப் பும் உண்டாயிற்று.

வானவர் உலகத்தை அவன் அணுகினான். மின்னல்கள் அவனை வரவேற்றன. இடியோசைகள் அவனுக்கு மரியாதை செய்தன. தேவன் ஒருவன் பொற்கலசத்தை அவன் எதிரே கொண்டுவந்து நின்றான்.

"தேவ, இது தாங்கள் சாவுல குக்கு அளித்த பிச்சை" என்று பக்தியினால் நெஞ்சம் தழுதழுக்கக் கூறி வணங்கிய பின், மானவன் அந்தத் தேவனிடமிருந்து அமிர்த கலசத்தைப் பெற்றுக் கொண் டான்.

* * *

உலகம் தோன்றிய காலத்துக் குப் பின்பு மனிதர்கள் இத்தனை பெரிய மகோற்சவத்தைக் கொண் டாடியதில்லை. அவ்வளவு பெரிய திருவிழா அது. ஒவ்வொருவரு டைய முகத்திலும் உவகையும் உற் சாகமும் தாண்டவ மாடின.

தேவர்களுக்கு நன்றி செலுத்த எங்கும் தோரணங்கள் பறந்தன. ஆலயங்களிலிருந்து எழுந்த மணி ஓசை காற்றலைகளிலே மிதந்து வானத்தைத் தாண்டிச் சென்றது. கொடிகளும் மரங்களும் மலர் களைச் சொரிந்து தெய்வ பிம்பங் களை மறைத்தன.

வானப் பந்தலின் கீழே மனிதர் யாவரும் ஒன்று கூடினர், அமிரு தத்தைப் பங்கிட்டுக் கொள்ள. மானவன் அமிருத கலசத்தைக் கொண்டுவந்து நடுவே வைத்தான்.

"இந்தச் சிறு குடத்திலுள்ள அமுதமா எல்லாருக்கும் போதும்? இதை இவன் எப்படிப் பங்கிடப் போகிறானோ?" என்று வாய்கள் முணுமுணுத்தன.

பக்தியினால் கனிந்த உள்ளத் தோடு, தெய்வங்களை எல்லாம் நெஞ்சுருக நினைத்து மானவன் அமி ருதக் குடத்தில் தன் தூய விரலை நனைத்தான். அவனுடைய பக்திச் சூட்டினால் அமிருதம் நீர்ப்பண்ட மாக உருகி ஆறாகப் பாய்ந்தது.

ஒவ்வொரு மனிதனும் அமுத வெள்ளத்தை அள்ளி அள்ளிப் பரு கினான். மனிதன் மட்டுமா? எல்லா ஜீவ ராசிகளும் பருகின. இந்த உல கத்திலே அமுத வெள்ளம் ஓடி யது. அமிருதத்தைப் பருகி மனி தன் பெரும் வல்லமை பெற்றான். பல அறிவுக் கதிர்களைக் கண்டு பிடிக்க முயன்று வெற்றி பெற் றான். பல புதிய தொழில்களை ஆரம்பித்தான். உலகமெங்கும் அன்பை நிலை நாட்டினான், ஆனந்த மாக வாழ்வைக் கழிக்கலானான். மிருக பட்சிகளும் தங்கள் குஞ்சு குட்டிகளோடு பேரானந்தத்தில் வாழ்ந்தன. கொடிகளும் மரங்க ளும் பன்னிற மலர்களோடும் இன்சுவைக் கனிகளோடும் குலுங் கித் தளிர்த்து ஓங்கி வளர்ந்தன. பூலோகமே தேவலோகமாயிற்று.

வைகுண்டத்தில் ஆயிரம் பண முடிகளையுடைய ஆதிசேஷன் சுமை தாளாமல் தவித்துக் கொண்டிருந்தான். அவனுடைய பெருமூச்சு பூலோகம் வரையில்

வியாபித்தது. மனிதர்களின் வளத்தைக் கண்டு பொறுமை கொண்ட முப்பத்து முக்கோடி தேவர்களும் மகா தேவனிடம் வந்திருந்தார்கள்

"மானிடர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசமே இல்லையா?" என்று தேவர்கள் முறையிட்டனர்.

"உங்களுக்கு எப்போதுமே அவசரம் அதிகம். மானவர்களும் ராட்சசர்களும் வந்துவிட்டால் அவர்கள் யார்? எதற்காக வந்திருக்கிறார்கள்?', என்பதைக் கூடப் பாராமல் விழுந்தடித்துக் கொண்டு இங்கே என்னிடம் ஓடிவருவது உங்களுக்கு வெகு சகஜம். மனிதர்களுக்கு நீங்களே அன்புடன் அமிருதத்தைக் கொடுத்து விட்டு அவர்களிடம் இப்படி பொறுமைப்படலாமா? இது அசுர குணமல்லவா? மனித உலகத்திலும் தேவர்களும் ராட்சசர்களும் தோன்றுவார்கள். எந்த உலகமும் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கப்போவதில்லை. தேவலோகத்தில் தேவாசுர யுத்தங்கள் எவ்வளவு சாதாரணமோ அவ்விதமே அங்கும் பலவிதப் போர்கள் நிகழும். நீங்கள் கவலை இல்லாமல் சௌக்கியமாகப் போய் வாருங்கள்" என்றார் தேவன்.

ஓ, அது என்ன ஓசை? டண்—டணங்—டண்—தொழிலாளிகள் சம்மட்டிகளை எடுத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். கர்—கிர்—கர். அறிவாளிகள் தம் மண்டைகளைக் குடைந்து அறிவுக் களஞ்சியங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். கிணிங்—கிணுங்—கிணுங், உடல் தேய்ந்து அறிவு வற்றிப்போகும் சமயங்களில், இவர்கள், உள்ளத்தில் அன்பு சுரக்க, ஜீவப்பிராணிகள் யாவும் குவிந்திருக்கும் பக்திக் கோயில்களிலே கூடுகிறார்கள். ஆனால், இவர்களுக்கு ஜீவரசம்—அமுதம் கிடைக்கிறதா?

மனிதன் தன் மூளையையும் உடலையும் உழைத்து உழைத்து, ரத்தத்தை நீராக்கி, அதன் பயனாக அமுதம் உண்கிறானா?

அதோ பாருங்கள் விந்தையை! கூட்டம் கூட்டமாக, மந்தை மந்தையாக, அறிவாளிகளும் தொழிலாளிகளும் ஓயாமல் சலிக்காமல் உழைக்கின்றனர். அவர்களுடைய ரத்தம் நீராகி, வேர்வையாகிப் பூமியில் சொட்டுகிறது. ஆனால் இது என்ன? உடனே அது அமுதமாகி விட்டதே. இந்த அமுதம் எங்கே போகிறதோ?

மானிடர்கள் சிலர், அதோ தேவர்கள் போல மாளிகை மாடங்களில் நின்று கொண்டு, நிலவொளியைப் பழிக்கும் மின்சார வெளிச்சத்தில் தேவ மாதர்களொத்த மோகனாங்கிகளோடு களியாடிக்கொண்டே, அந்த அமிருதத்தைப் பருகுகின்றனர். அவர்களுடைய உல்லாச விழாவுக்குப் பங்கம் விளைப்பது போல, அதோ ஏழைமக்களின் கூக்குரல் நாராசம் போல் அவர்கள் காதில் பாய்கிறது. "இது என்ன பீடை, இந்த ராட்சசர்கள் ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறார்கள்?" என்று சலிப்போடு முணுமுணுத்துவிட்டு, அவர்கள் மீண்டும் ஆனந்தத்தில் மூழ்குகின்றனர்.

பக்கத்தில் ஒரு கூட்டம் பாடிக் கொண்டு வருகிறது.

"சிறுமை செய்த செய்கை—
செல்வம் சிரிக்கும் சோலை!
வறுமை வடித்த வேர்வை—
விந்தை
வயிர மணிகளாச்சே"

"யார் தேவர்? யார் ராட்சசர்கள்? எங்கே அமிர்தம்?" என்ற கேள்வி திசைகளிலிருந்து எழும்பி வானத்தை முட்டுகிறது. உலகம் முழுவதிலும் அதன் எதிரொலி பரவுகிறது.

ஒரு ஆசை

ஆசிரியர்:
சரத்சந்திர சட்டர்ஜி]

மொழி பெயர்ப்பு:
[ஆர். ஷண்முகசுந்தரம்

குருசரணர் வந்ததும், திடீரென பாரஸ் கையில் பையுடன், ஹரி சரணர், கிராமத்தில் உள்ள இரண்டொரு மனிதர்களுடன் போலீஸும் வந்து சேர்ந்தது.

விஷயம் இதுதான். விமல் தபால் கொள்ளை அடித்து இருந்தான். இப்பொழுது எங்கேயோ ஓடி விட்டான். பத்திரிகையில் சமாச்சாரத்தைப் படித்ததும் பாரஸ் போலீசுக்குப் பூராத் தகவலையும் கொடுத்து விட்டான். பை இதுவரையிலும் அவனிடம் தானிருந்தது. விமல் மிகக் கெட்டவன். குடிகாரன். அவனிடம் எத்தனையோ குற்றங்களிருந்தன. கல்கத்தாவில் காலங்கழித்துக் கொண்டிருந்தான். எப்படிக் காலங்கழிக்கிறான் என்பது யாருக்குமே தெரியாது. ஆனாலும் அவன் ஒரு தபால் கொள்ளைக்காரனாக இருப்பான் என்பதை தந்தை கனவில் கூட கருதியதில்லை. அவர் பாரசின் முகத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். அதன் பிறகு அவருடைய பரிசுத்தமான கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. "எல்லாம் உண்மைதான். பாரஸ் ஒரு வார்த்தை கூட பொய் சொல்ல வில்லை" என்றார்.

போலீஸ் அதிகாரி அவரை இரண்டொரு கேள்விகள் கேட்டு விட்டு போகச் சொல்லி விட்டார். போகும் போது குருசரணர் அருகில் வந்து வணங்கி விட்டு, "தாங்கள் வயதில் பெரியவர். எனது குற்றத்தைப் பொருட் படுத்தாதீர்கள். இதைப் போன்ற துக்ககரமான ஒரு காரியத்தை இதற்கு முன் நான் எப்போதும் செய்ததில்லை" என்றார்.

பலமாதங்களுக்குப் பிறகு விமலுக்கு ஏழு வருஷ தண்டனை அளிக்கப் பட்டது என்று தகவல் வந்தது.

(5)

மறுபடியும் தந்தை சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்ய ஆரம்பித்தார். பாரஸ் தந்தையிடம் "அப்பா இவைகளெல்லாம் வேண்டாம்" என்றான்.

"ஏன்?"

"இதை என்னால் பொறுக்க முடியாது."

"சரி, பொறுக்க முடியா விட்டால் இன்றே கல்கத்தா சென்று சுற்றி விட்டுவா! ஜகத்மாதாவின் பூஜை. தர்ம காரியத்தில் தடை செய்யாதே."

தர்ம காரியம் ஒன்றும் தடையின்றி நடைபெற்றது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஒரு பத்து நாளைக்குப் பிறகு குருசரணர் வீட்டுப் பக்கத்தில் பலமான கூச்சல் கேட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு பால்க்காரி அழுது கொண்டு வந்தாள். அவளுடைய மூக்கிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஹரிசரணர் பயத்துடன், "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

அழும் குரல் கேட்டு வீட்டிலுள்ள அத்தனை பேரும் வந்து விட்டார்கள்.

"பாலில் தண்ணீர் கலந்து விட்டேன். அதற்காகப் பெரிய ஐயா அடித்து விட்டார்" என்றாள்.

"யாரு, யாரு? அண்ணாவா?" என்றார் ஹரிசரணர்.

"பெரியப்பாவா? பொய் சொல்கிறாய்?" என்றான் பாரஸ்.

"பெண்ணைக் கையில் தொட்டு அடிப்பாரா? நீ என்ன உளறுகிறாய் பால்க்காரி?" என்றாள் ஹரிசரணர் மனைவி.

அவள் ஊரில் உண்டான சாமிகளை எல்லாம் வேண்டி சத்தியம் செய்து, தான் சொல்வது உண்மை தான் என்றாள்.

சுவர் எழுப்புவதற்குத் தோண்டியிருந்த குழிகள் எல்லாம் அப்படியே மூடாமலிருந்தன. குருசரணர் மிரட்டவே பயந்து திரும்பியவள் குழிக்குள் விழுந்ததால் காயமடைந்தாள்.

"என்னோடு வா பிராது கொடுக்கலாம்" என்றார் ஹரிசரணர். அவருடைய மனைவி, "நீங்கள் என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? மைத்துனர் கையால் தொட்டு அடிப்பாரா? சுத்தப் பொய்" என்றாள்.

பாரஸ் அசையாது நின்றுகொண்டிருந்தான். ஒன்றுமே பேசவில்லை.

"பொய்யாயிருந்தால் தோல்வி அடைகிறது. அண்ணா வாயிலிருந்து பொய் வராது. அடித்திருந்தால் தண்டனை கிடைக்கிறது."

இந்த யுக்தியைக் கண்டு மனைவி சந்தோஷமடைந்தாள். "அது தான் சரி. கூட்டிப் போய் பிராது கொடுங்கள். சரியான தண்டனை கிடைக்கும்" என்றாள்.

அப்படியேதான் நடந்தது. அண்ணா பொய் பேசவில்லை. நீதிபதி குருசரணருக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தார்.

இந்தத் தடவை சுவாமிக்கு வேண்டுதல் செலுத்தவில்லை. குருசரணர் வெளியே சென்றபோது சில பையன்கள், அவர் பின்னால் வந்து சத்தமிட்டுக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். பால்க்காரியை அடித்ததைப் பாட்டாகப் பாட ஆரம்பித்து விட்டார்கள்.

(6)

இரவு மணி எட்டிருக்கலாம். ஹரிசரணர் வீட்டில் சனங்கள் நிறைந்திருந்தார்கள். கிராமத்து முக்கியஸ்தர்கள் எல்லாம் இப்போது இங்குதான் கூடுவது. அகஸ்மாத்தாக ஒருவர் வந்து ரொம்ப வேடிக்கையான ஒரு விஷயம் சொன்னார். சரஸ்வதி பண்டிகை உற்சவத்திற்காக கல்கத்தாவிலிருந்து இரண்டு நாட்டியக்காரிகளை அழைத்து வந்திருக்கிறார்களாம். அவர்கள் நாட்டியமாடுமிடத்தில் முதல் வரிசையில் குருசரணர் உட்கார்ந்திருக்கிறாராம்!

ஹரிசரணுக்குச் சிரித்துச் சிரித்து வயிறெல்லாம் புண்ணாகியது. "பைத்தியம்! சுத்தப் பைத்தியம். அது என்ன செய்கிறது? நாட்டியம் பார்த்துக் கொண்டிருக்கிறதா?" என்றான்.

அவிநாஷ் சத்தியம் செய்து, 'என் கண்ணாரக் கண்டு வந்தேன்' என்றான்.

ஒருவன் உண்மைத் தகவல் கொண்டுவருவதற்காக அங்கிருந்து எழுந்து ஓடினான். பத்து நிமிஷத்திற்குப்பிறகு அவன் திரும்பி வந்து, "முற்றிலும் உண்மைதான். நாட்டியம் மட்டும் பார்த்துக் கொண்டிருக்க

வில்லை. இனும் கொடுத்ததையும் கண்ணால் பார்த்தேன்." என்றான்.

அவ்வளவுதான். அங்கிருந்த அனைவரும் பெரிய கூச்சல் போட்டார்கள். "ஒரு நாளைக்கு இப்படி நடக்கும் என்பது தெரிந்த விஷயந் தானே?" என்றான் ஒருவன். மற்றொருவன், "எப்ப ஒரு தப்புமில்லாமல் பெண்ணை அடித்தாரோ, அப்பவே எங்களுக்குத் தெரியும்" என்றான். இன்னொருவன் மகனுடைய தபால் திருட்டைச் சுட்டிக் காண்பித்து, "ஏகப்பனை அளவிட முடியுமா!" என்றான். இம்மாதிரி எத்தனையோ விஷயங்கள் பேசப்பட்டன.

இன்று பேசாதவன் ஹரிசரணன்தான். அவன் எதையோ யோசித்தபடி பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு எப்படியோ பழைய நாட்கள் நினைவிற்கு வந்தன. இவர் தான் அவனுடைய அண்ணவா? இவர்தான் பழைய குருசரணரா?

(7)

இரவு மணி இரண்டரை இருக்கலாம். நாட்டியம் முடிவதற்கு இன்னும் நேரமிருந்தது. பூசை முடிந்து விட்டது. ஆனால் பக்த கோடிகள் மது மாம்ச பட்சிணிகளாக உல்லாசமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்! பெரும்பாலோருக்கு சுய நினைவு இல்லை. அவர்களுக்கு மத்தியில் தான் வயோதிகர் குருசரணர் புன்சிரிப்புடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அங்கு யாரோ போர்வையை முகம் தெரியாமல் போர்த்திக் கொண்டு வந்து மெதுவாக அவருடைய முதுகில் கையை வைத்தார். அவர் திடுக்கிட்டு, "யார்?" என்றார்.

"நான்தான் பாரஸ், பெரியப்பா, வீட்டுக்குப் போவோம் வா"

குருசரணர் தடை ஒன்றும் சொல்லவில்லை. "வீட்டிற்கா? வா" என்றார்.

விளக்கு வெளிச்சம் பாதையில் மங்கலாகப் பட்டுக் கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்ற பிறகு பாரஸ் பெரியப்பா முகத்தை உற்றுப் பார்த்தான். கண்ணிலே அந்த ஒளியில்லை. முகத்திலே களை இல்லை. அவர் உடல் முழுதும் மாறிப் போயிருந்தார். இத்தனை நாளைக்குப் பிறகு அவனுடைய கண்களில் நீர் துளித்தது. ஜனங்களுக்கு மத்தியில் வெட்கமடைவதற்கு 'பெரியப்பாவிடம் மீதி ஒன்றுமே இல்லை' என்பதை உணர்ந்தான். இந்த தேகத்தை விட்டு அவர் எங்கோ போய் விட்டார் என்று நினைத்தான். "பெரியப்பா நீங்கள் காசி போக வேண்டுமென்றிருந்தீர்களே, போகலாமா?" என்றான். குருசரணர் மிகுந்த ஆவலுடன், "போக வேண்டும், போகவேண்டும். ஆனால் யார் கூட்டிப் போவார்கள்?" என்றார்.

"நான் கூட்டிப் போகிறேன், பெரியப்பா."

"சரி, வா, வீட்டிற்குப் போய் சாமான்களெல்லாம் எடுத்து வருவோம்."

"வேண்டாம் பெரியப்பா, அந்த வீட்டிற்கு இனிப் போக வேண்டியதில்லை. அவ்விடத்திய சாமான் ஒன்றும் நமக்கு வேண்டாம்."

குருசரணருக்கு திடீரென சுய நினைவு வந்தது போலிருந்தது. அவர் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "ஒன்றும் வேண்டாமா? அந்த வீட்டில் உள்ளது ஒன்றும் நமக்கு வேண்டியதில்லையா?" என்றார்.

பாரஸ் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, "வேண்டாம் பெரியப்பா, நமக்கு ஒன்றும் வேண்டாம். தேவை உள்ளவர்கள் எத்தனையோ பேர் அங்கேயே இருக்கிறார்கள். நாம் போவோம்" என்றான்.

"சரி வா" என்று குருசரணர் பாரசின் கையைப் பிடித்துக் கொண்டார்.

மனித சந்தடியற்ற இருள் சூழ்ந்த அந்தப் பாதையிலே இருவரும் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள்.

(முற்றிற்று)

வாழ்க்கை விநோதம்:

கண்ணாமூச்சி

க. லக்ஷ்மி

அவன் குருடன்; அவள் அவன் மனைவி. அவன் அவளுடைய தோளைப் பிடித்துக்கொள்ள, அவள் அவனை இட்டுக்கொண்டு ஊருக்குள் போய் வீடுதோறும் பிச்சை எடுப்பது வழக்கம். ஆற்றங் கரையை அடுத்திருந்த மண்டபத்தில் வைத்து பிச்சைச் சோற்றைத்தின்று விட்டு இருவரும் அங்கேயே படுத்துக்கொள்வது. இப்படியாக இவர்கள் காலம் கழிந்து வந்தது.

அவள் பிச்சைக்காரி; அதிலும் ஒரு குருடனின் மனைவிதான். இருந்த போதிலும் அவள் ஒரு கட்டழகி. அவளுடைய அங்கங்களிலே அழகு ததும்பிக் கொண்டிருந்தது. 'கண்ணடிக் கன்ன'த்திலும், கரிய பெரிய விழிகளிலும் தேங்கி நின்ற சோக பாவத்தைச் சித்திரிப்பது அசாத்தியம்; கனிவும் குளுமையும் அவள் பேச்சிலும் நிறைந்திருந்தது.

துன்பமும் துக்கமும் மனச் சாந்தியை அழிக்கலாம்! தேகக்கட்டையும் சுகத்தையும் குலைத்து விடலாம்! ஆனால் இயற்கை தந்த எழிலை மாற்றவோ மறைக்கவோ முடியுமா?

அமைதியான காலை வேளையிலே ஒருநாள் அந்தப் பெண்ணுடன் ஒருவன் பேசிக்கொண்டிருந்தான். குருடனும் ஒருபுறம் படுத்துக் கொண்டிருந்தான். பேசிக்கொண்டிருந்த மனிதனுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். தடித்த உயர்ந்த உருவம். கருத்து நீண்டு முறுக்கிவிடப்பட்ட கிருதா மீசை. கிராப்புத்தலை. கொழுத்த உடம்பில் பெருமிதம் கொண்ட பார்வை. மேலே மிருதுவாய் இழைந்த மல் ஆபாரம், ஒரு ஜரிகை துப்பட்டியும் போட்டிருந்தான். நெற்றியில் அகலமான குங்குமப்பொட்டு. அவன் கேட்கிறான்:

"பாவம், இப்படியே எத்தனை நாளைக்கு பிச்சை எடுத்து நீங்கள் பிழைக்க முடியும்?"

"ஏதோ, சாமி என்ன பண்றது? தலைவிதி இப்படி. யாரை நொந்து கொள்வது.?"

"ஐயோ, பாவம். அதுவும் இந்த ஊரிலா? சுத்த கருமிகள். பிச்சைக் காரருக்குப் பிடிசோறு தருமம் கூடப் போட மாட்டார்களே!"

அவள் மௌனமாய் இருந்தாள் அந்த மனிதன் சொன்னதின் உண்மையை அவள் சிந்தித்துப் பார்த்தாள், முந்திய தினம் அக்கிரகாரத்தில் பிச்சைக்குப் போனபோது அப்படித்தான் நடந்தது. வீட்டுக்காரி, "ஏது, தினம் தவறாமல் வருவதென்று வைத்துவிட்டாயோ? சனியன். சரிதான். இதே வேலையாய்ப் போய்விட்டதப்பா!" என்று கடிந்து கொண்டாள்.

அம்மனிதன் மறுபடியும் பேச ஆரம்பித்து, "இன்று அதிக வெயிலாக இருக்கிறதே. பாவம், அந்தக் கண்ணில்லா குருடனையும் என் வீணில் அலைக்கப்போகிறாய். இதோ, இதைக் கொண்டு போய்

ஏதாவது வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி, ஜேபியிலிருந்து அரை ரூபாய் நாணயத்தை எடுத்து நீட்டினன்.

அவள் கண்கள் அந்த நாணயத்தின் மீது விழுந்தன. அவன் செய்கை அவளைப் பிரமிக்கச் செய்தது.

"என்ன? உண்டு மிகுந்த சோற்றில் ஒருபிடி கொடுப்பதற்கில்லாமல் சீறி விழுகிறார்கள் எல்லாரும். ஆனல் வழக்கத்துக்கு விரோதமாயிருந்த இந்த அனுபவம் ஒரு நூதனமாக இருந்தது அவளுக்கு. வறுமையும் பசிக் கொடுமையும் அந்த நாணயத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு உந்தின. கை தன்னையறியாமல் அவன் பக்கமாய் ஏந்தப் புறப்பட்டது. அந்த சமயத்தில் அவள் மனதில் ஏதோ ஒன்று உறுத்துவது போலிருந்தது கண்கள் சிவந்து நீர் ததும்பின.

"யோசிக்காதே? ஒன்றும் நினையாதே — இதெல்லாம் எனக்குப் பெரிதில்லை. எவ்வளவோ வரவு செலவு. நீங்கள் திருப்தியடைவது தான் எனக்குப் பெரிது, ஊம்... இந்தா வாங்கிக்கொள்..."

தட்டிச் சொல்ல முடியவில்லை. வாங்கிக் கொண்டாள்.

நெடுநாள் வரையில் நம்மையறியாமலே உடலுக்குள் இருந்து பரவி முற்றிவிடும் வியாதியைப் போல, அவள் உணராதவிதமாய், அவள் மனச்சாட்சியைக் கொல்வதற்கு தந்திர மாயை அடிகோலி விட்டது!

இயற்கையின் போக்கை என்னவென்று சொல்வது? மக்களின் நடையுடை பாவனை, மனப்பாங்கு முதலியவைகளும் அவர்களறியாமலே மாறுபடுகின்றன. எப்படியோ அபினிக்கடைப் பங்காருநாயுடு—ஆம், முன்பு ஒரு நாள் தர்மம் செய்தவன்தான் — இந்தப் பிச்சைக்காரத் தம்பதிகளின் வாழ்க்கை நாடகத்தில் ஒரு இன்றியமையாத பாத்திரமாகிவிட்டான். குருடனின் மனைவிக்கோ, தன்னையறியாமலே, தன் புருஷனுக்கு ஆற்றி வந்த கடமையில் ஒரு சலிப்பு ஏற்பட்டது. ஏதோ அவனுக்குச் செய்யும் பணிவிடையும் பேணுதலும் முற்றும் நின்றுவிடவில்லை. இருந்த போதிலும் அவை வேண்டா விருப்புடன் செய்யப்பட்டன. இப்பொழுது அவள் அதிகம் ஊருக்குள் சென்று பிச்சை எடுப்பதில்லை. பங்காருவின் பொருளுதவிகளை கூச்சமின்றி ஏற்றுக் கொள்கிறாள். 'உண்மையான தரும சிந்தனையின் பேரில்தானே செய்கிறான். அநாவசியமாய் தப்பு அர்த்தம் செய்துகொள்வதா' என்று சமாதானம் செய்து கொள்வாள். வறுமை, பசி, தெருத்தெருவாய், வீடு வீடாய், கால்கள் தள்ளாடத் திரிந்து சம்பாதிக்கும் கடிந்த சொற்கள், ஒருபுரமும், பங்காருவின் ஆதரவு, உழைப்பும் இடித்தலுமில்லாத உணவு, மனநிம்மதி, இவை ஒரு புறமும் அணிவகுத்து நின்று இவ்வனுதைப் பெண்ணின் உள்ளத்தை ஊசலாடச் செய்தது.

மயிலி. இதுதான் அவள் பெயர்.

கணவன் சொல்லுகிறான், "அந்த மனிதன் இருக்கிறாரே, அவர்தான், நமக்கு உதவி செய்து வருபவர். அவர் மட்டும் என் நம்மிடம் இவ்வளவு அநுதாபம் காட்டவேணும்?"

"ஆம், பாவம், அந்தப் புண்ணியவான் இல்லாவிட்டால் இதற்குள் நம் கதி என்ன ஆயிருக்குமோ."

'புண்ணியவான்! அவன் புண்ணியவானு?' அவளுடைய வார்த்தைகளின் உண்மையை அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து அறிந்து கொள்ள முயல்பவன் போல் அவனது பார்வையிழந்த

கண்கள் விம்மித் தத்தளித்தன.

தான் நெடு நாளாகத் தீட்டி முடிவு பெற்ற ஓவியத்தில் மனதுக்குத் தோன்றியும் கண்ணுக்குப் புலப்படாத, ஒரு சிறிய குறையைப் பின்வாங்கி நின்று நிதானமாக உற்று நோக்கும் ஒரு ஓவியக்காரனைப் போலிருந்தது அக்குருடனின் நோக்கு. குறை எதுவோ, அற்பமானது தான்—ஒரு சிறு கோடு,—ஒருவரையின் அழுத்தம், பின்னணியிலுள்ள மரத்தின் இலைகளில் ஒரு சோக அசைவு—நீரோட்டத்தின்மீது உராய்ந்து செல்லும் மந்த மாருதத்தை உணர்ந்தும் சிறு அலைகளை உண்டாக்க இயற்றும் நிழல்—பிரதான உருவத்தில் எத்தனையோ காததூரங்களுக்கப்பால் சென்று லயித்திருக்கும் மனத்தின் சிந்தனை வேகத்தையுணர்த்த கண் விழிகளில் இயங்கும் ஒரு மாயாஜாலப் புள்ளி,— உதடுகளின் ஓரத்தில் தேங்கி நின்று சென்று போன இன்பத்தை நினைத்துப் புளகிக்கும் முறுவலைக் காட்டும் ஒருகீற்று-இவைகளில் ஏதாவது ஒன்றுதான். ஆனால் இது இல்லாவிடில் ஓவியம் உயிரற்றதாய் பூரணத்வம் பெறாததாய் விடுமல்லவா? அதுபோலவே, தன் மனத்தில் பாய்ந்தெழுந்த கோர எண்ணத்தின் உண்மையைத் துலக்கும் அவள் முகத்தை, அவன் பார்க்க எவ்வளவு ஏங்கினான்? ஆனால் அவன் குருடன்.

இவ்வளவுக்கும் அவனுடைய வெளித்தோற்றம் சாந்தி நிறைந்ததாகவே இருந்தது.

"ஆம், ஆம், நீ சொல்வது சரிதான்" என்று சொல்லிச் சும்மா இருந்தான். திருவிளையாடல் புரியும் திரிலோகநாயகன் இந்தக் கண்ணாமூச்சியில், அவன் கண்களைக் கட்டியிருக்கிறார். ஒளிந்து விளையாடுபவர்களை அவன் பிடிக்க முடியவில்லை!

சுமார் ஆறு மைல் தூரத்திலிருந்த பக்கத்துக் கிராமத்தில் திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. அதிக விமரிசை, அன்று கடைசி நாள்; இரவில் விதவிதமான கேளிக்கைகளும் விளையாட்டும் இருக்கும் பக்கத்து ஊர்களிலிருந்து திரளாக ஜனங்கள் திருவிழாப் பார்க்க வருவார்கள். தாங்களும் போய்ப் பார்த்துவிட்டு வருவதென்று பங்காரு மயிலியுடன் ஏற்பாடுசெய்திருந்தான். ரஸ்தாவின் வழியாகப் போவதென்றால் ரொம்ப சுற்று. குறுக்குப் பாதையில் தோணித் துறைக்கு நாலு மைல் தான். அங்கிருந்து ஆற்றைக் கடந்ததும் ஊர் நடந்து போகிறவர்கள் இப்படித் தான் போவது வழக்கம்.

அன்று மயிலி அபூர்வ அழகுடன் விளங்கினாள். பங்காரு அய்யா தருமசிந்தனையுடன் வாங்கிக் கொடுத்திருந்த புதுச்சேலை ரவிக்கைகளை அணிந்திருந்தாள். தலையில் எண்ணெய் தடவி பின்புறம் எடுத்து 'சொருக்கு'ப் போட்டிருந்தாள். தன்னை வேண்டுமென்றே சிங்காரித்துக் கொள்ளாவிடினும் அவளுக்கு ஒரு புதிய 'ஒயில்' ஏற்பட்டிருந்தது.

வயற்காடுகளிலும் தோப்புகளின் மத்தியிலுமாய் வளைந்து சென்றது இவர்கள் சென்ற ஒற்றையடிப்பாதை. ஆரவாரம் ஒன்றுமில்லை. எங்கும் அமைதி நிலவியிருந்தது. சந்திரன் மேலெழுந்து வந்து மோன ஒளி பரப்புகிறான்!

அனேகமாய் ஒருவரோடொருவர் அதிகம் பேசாமலே இருவரும் வழிநடந்தனர். இருவர் மனமும் தனித்தனி யோசனையில் ஈடுபட்டிருந்தது.

பங்காரு தனது பக்கத்தில் நடந்து வரும் இளமையும் எழிலும் ஒருங்கே அமைந்த அழகுத் தெய்வத்தை அடிக்கடி பார்த்து உள்ளம் பூரித்தான். இடையிடையே

தான் கேட்கும் சாதாரண கேள்வி களுக்கு அவள் பதிலளிக்கும் போது அவள் குரலில் தொனித்த இனிய கானத்தில் அகமகிழ்ந் தான். சந்திரிகையால் குளிப் பாட்டப் பெறும் சிற்பக் கலையின் சிகரமான கடைசல் போன்ற அவ ளுடைய உருண்டு திரண்ட அவய வங்களை நோக்கி நோக்கி அங்கம் புளகித்தான். வனந்திரங்களிடை வளர்ந்து மலர்ந்த மனோரஞ்சி தத்தை நிகர்த்த அப் பூங்கோதை யிடமிருந்து கமழும் தெய்விக இயற்கை மணத்தில் திளைத்துக் குதூகலித்தான். தன எண்ணத்தை அவள் முழுதும் உணர்ந்து கொண் டாளா? தன் எத்தனங்களை ஏற் றுக் கொள்ள அவள் மனம் பக் குவமடைந்து விட்டதா? என்ற சிந்தனைகள் மாறி மாறித் தோன்றி அவன் மனம் அலைமோதிற்று!

மயிலியோ, தான் பங்காருவின் மனத்தில் எழுப்பிய புயலின் வேக த்தை கொஞ்சமும் அறியவில்லை. தங்கள் நிலைமைக் கிரங்கி உதவி புரி யும் அவனை மனதில் பூரணமாய் நேசித்தாள். ஏழைக்கிரங்கும் உள் ளம் படைத்த அவன் நோக்கத்தை நினைப்பினுற்கூட விகற்பம் கற்பிப் பது பெரிய பாவமாகும். இப்பொழுதும் தன் கணவன் மாத்திரம் கண்ணால் பார்த்துக் களிக்கக் கூடுவதாயிருந்தால் அவன் இல்லாமல் தான்மட்டும் தனியாகவா புறப்பட்டிருப்பாள்? ஒருக்காலுமில்லை.

ஒரு வயலின் வழியாய் நடந்து கொண்டிருக்கும் போது, ஒரு வர ப்பில் மயிலியின் கால் இடறிவிட் டது. கீழே விழப் போகும் தரு ணம் பங்காரு அவள் தோளைப் பிடித்துக் கொண்டான். அவள் தன் நிலைக்கு வந்த பிறகும் அவன் கை ஒரு வினடி அவள் தோள் மேலேயே இருந்தது. மயிலியின் மனதிற்குள் ஏதோ 'நறுக்' கென் றது. அவனை ஏறிட்டு விரைக்கப் பார்த்தாள். பங்காரு கையை விரைவில் நகர்த்திக் கொண்டு ஒப் புக்குச் சிரித்தான்.

பிறகு அவளும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். "அவரை தப் பிதமாய் நினைத்து விட்டோமே. சீ அற்பத்தனமானவள் என்று தன்னை எண்ணுவாரோ?" என்று உள்ளுக்குள்ளே அவள் நொந்து கொண்டாள்.

பாதிதூரம் போயிருப்பார்கள். ஒரு தென்னந் தோப்பின் மத்தியில் பாதை நுழைந்து சென்றது. தூரத் தில் வயற்காட்டில் ஆட்டுக்கிடைக் காவல் புரிந்து கொண்டிருந்த இடைச்சிறுவன் உல்லாசமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந் தான். அவன் இனிய குரல் இர வின் அமைதியில் மிதந்து வந்து அவர்கள் காதில் பாய்ந்தது. அட டா, எவ்வளவு ரம்மியமாயிருந்தது அந்த இசை வெள்ளம்!

தேக்குமரச் சோலையிலே
தே நிலவு பாய்ந்து வர
கோமளமாங் குயிலோசை
கொஞ்சி வந்து ஊசலிட!
ஆற்றோரஞ் செந்தாழை
அரும்பவிழும் வாசமெல்லாம்
காற்றோடே கலந்தல்லோ
கன்னி நம்மை சேருதடி!

தோப்பைக் கடந்து மறுபடி வயற்பாதை. பாட்டு இப்பொழுது முன்னை விட அதிகத் தெளிவுடன் கேட்கிறது:

காட்டு வழிப் பாதையிலே
கள்ள விழிப் பார்வையிலே
கூட்டுறவின் போதையிலே
கொள்ளையின்பம் தோணுதடி!

சீக்கிரத்திலேயே தோணித் துறைக்கு வந்து சேர்ந்தார்கள். ஓடக்காரன் இருவரையும் ஏற்றிக் கொண்டபின் ஓடம் நீர்ப்பரப்பின்

மேல் மிதந்து சென்றது. ஆட்டிடையன் பாட்டு இன்னும் காதுகளில் ஒலிப்பது போலிருந்தது. இல்லை, இப்பொழுது வேறு வார்த்தைகளல்லவா? அவனே தான்

மலையோரம் புலியிருக்கும்,
வானத்தில் மீனிருக்கும்
அலையேறித் தோணிவிட்டால்
அக்கரையில் சொர்க்க மடி!

இன்னும் பாடிக் கொண்டிருக்கிறான்- தொலையிலிருந்து மெதுவாய், கனவில் கேட்பது போல் நாதம் எழுந்தது!

அந்த ஆற்றைக் கடப்பது இசைக் கடலில் நீந்திச் செல்வது போலிருந்தது.

கடைசியில் கோவிலின் அருகாமையில் வந்து விட்டனர். ஆகா! எத்தனை ஜனக் கூட்டம்! எத்தனை விதமான கேளிக்கைகள்! வாண வேடிக்கைகளென்ன; மேளதாளங்களென்ன; எல்லாம் திருவிழாக் கொண்டாட்டம்; கடைசி நாள் அல்லவா? திரு விழாக்களில் சுவாமி முன்னால் நின்று மனதை ஒருமைப் படுத்தி அஞ்சலி செய்வதெல்லாம் ஐந்து நிமிஷ நேரம் தானே! நாள் முழுதும் வேடிக்கை பார்ப்பதில் தானே கழிப்பது! நாதசுரக் கச்சேரிகள், பாட்டு, பரத நாட்டியம் முதல், ஆலி ஆட்டம், கிரகம் பொய்க்குதிரை, புலி வேஷம், பாவைக் கூத்து வரை சகலமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் ரசிக்கத் தனித்தனி மனப்போக்குள்ள திரளான மக்கள் கூடியிருந்தார்கள். பரத நாட்டியத்தையும், நாதசுரத்தையும் ரசித்தவர்களின் இன்பத்தை விட, பாவைக் கூத்தையும், பொய்க்குதிரை, நையாண்டி மேளத்தையும் ,ரசித்தவர்களடைந்த இன்பம் எவ்விதத்திலும் குறைவாக இருக்கவில்லை. இந்த வேடிக்கைகளை எல்லாம் ஒவ்வொன்றுய்ப்போய் சுற்றிப்பார்த்து உல்லாசமாய் நேரத்தைப் போக்கினர்கள் பங்காருவும் மயிலியும். பங்காரு வரிசையாய் இருந்த சிற்றுண்டி சாலைகளில் ஒன்றில் நுழைந்து பலகாரங்கள் வாங்கி வந்து மயிலியை வற்புறுத்தித் தின்னச் செய்தான். அவள் முகம் மலர்ச்சியாய் இருப்பதைக் கண்டு தானும் அளவிலா ஆனந்தமடைந்தான்.

இவ்விதம் இவர்கள் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும் வழியில் ஓரிடத்தில் 'குடை ராட்டு' ஆடிக் கொண்டிருந்தது. உள்ளே உட்கார்ந்திருந்த ஜனங்கள் ஆநந்தத்தால் கை கொட்டி 'ஓ' வென்று ஆர்ப்பரித்தனர். ஆகா! என்ன வேடிக்கை! அது வேகமாய்ச் சுற்றும் பொழுது அதிலிருப்பவர்களுக்கு சுற்றியுள்ள விளக்குகள், கடைகள், மரங்கள் மனிதர்களெல்லாம் எப்படிக் காட்சி யளிப்பார்கள்?

பங்காரு மயிலியின் பக்கமாய்த்திரும்பினன்.

"நீ எப்போதாவது இதில் ஏறியிருக்கிருயா?"

"இல்லையே"

"இப்போது ஏறிப் பார்க்கலாமா?"

"எதற்கு.........வே........."

அவள் முடிக்கு முன் பங்காரு குறுக்கிட்டு,

"இல்லை, ஒரே ஒரு ஆட்டம்; ரொம்ப வேடிக்கையாக இருக்கும் இதெல்லாம் ஒரு தமாஷ்தானே."

இரண்டுபேர் உட்காரக் கூடிய சாய்வு ஆசனத்தில் இருவரும் ஏறி ராட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். ராட்டு முதலில் மெதுவாய்ச் சுற்ற ஆரம்பித்து வர வர அதிக வேகமாய்ச் சுற்றத்

தொடங்கியது. மயிலிக்கு, தான் சுற்றியிருந்த பொருள்களை விட்டு, அந்த இடத்தையே விட்டு வேறு ஏதோ இடத்திற்கு அதி வேக மாய்ப் பறந்து செல்வது போல் தோன்றியது. தலையைச் சுற்ற ஆரம்பித்தது. பக்கத்திலிருக்கும் பங்காரு தன் தோளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது மெதுவாய் அவளுக்குப் புலப்பட்டது. தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டு மென்று அப்பொழுது அவளுக்குத் தோன்ற வில்லை...... வேகம் மறுபடி குறைந்து கொண்டே வந்து ராட்டு நிற்கப்போகும் சமயம். பங்காருவின் மார்பில் தான் பூராவாகச் சாய்ந்திருக்க அவன் தன் இரண்டு கரங்களாலும் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டிருப்பதை மயிலி உணர்ந்தாள்.

வெளியில் வந்ததும் மயிலி "ராட்டிலிருக்கும் போது நான் மிகவும் பயந்து போனேன், அப்பா! இன்னும் தலை சுழன்று கொண்டேயிருக்கிறது" என்றாள்.

"ஆமாம் புதுசாய் உட்காருகையில் அப்படித்தானிருக்கும். தப்பினால் கீழே விழுந்து விடுகிறதும் கூட உண்டு" என்று சொன்னான் பங்காரு.

இரவு ஒரு மணி இருக்கும். பார்த்து முடிந்தது. பற்பல வேடிக்கைகளையும் பார்த்துத் தன்னை மறந்திருந்த மயிலியின் முகம் மிக மலர்ச்சியுடன் விளங்கியது.

"மயிலி, காலையில் ரொம்பபேர் ஆற்றைக் கடந்து போவார்கள். ஓடம் கிடைப்பது கஷ்டம். இப்பொழுதே புறப்பட்டு தோணித் துறை போய்விட்டால் விடியுமுன் ஊருக்குப் போய்விடலாம்" என்றான் பங்காரு. மயிலியும் இசைந்தாள்.

ஆற்றைக் கடந்து தோணித் துறை மண்டபத்தை அடைந்த போதுதான் திருவிழாக் கூட்டத்தில் சுற்றித் திரிந்த அலுப்பு தெரிய வந்தது. மண்டபத்தில் சந்தடி எதுவுமில்லை. மண்டபத்தின் கல் தளத்தில் இருவரும் உட்கார்ந்தனர். படிக்கட்டில் உட்கார்ந்திருந்த ஆந்தை ஒன்று ஆள் ஆரவாரத்தினால் வெருண்டு "கிரீச்" சென்று கத்திப் பறந்தோடியது.

"மயிலி" என்று கூப்பிட்டான் பங்காரு. அவன் பக்கத்திலேயே தான் அவள் உட்கார்ந்திருந்தாள். கூப்பிடவும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "மயிலி" என்று பங்காரு மறுபடியும் மெதுவாக கூப்பிட்டான். தொண்டையைப் பிடிப்பதுபோல் வந்தது அவன் சத்தம். அவளுடைய மிருதுவான பஞ்சு போன்ற தளிர்க்கையைத் தன் இரு கரங்களாலும் பற்றினான். அவள் இன்னும் பேச வில்லை. ஆனால் கையை விடுவித்துக் கொள்ளவுமில்லை.

மனோகரமான நிலவு; ஏகாந்தம்; அமைதி; அலைச்சலால் உடம்பில் ஏற்பட்ட அலுப்பு; தென்புறமிருந்த நந்த வனத்தில் அலர்ந்து கொண்டிருக்கும் பவள மல்லிகையின் நறுமணம்!

அவள் சாதாரண பெண்தானே!

* * *

அங்கே, ஆற்று மண்டபத்தில் தனியாக விடப்பட்ட மயிலியின் கணவன் தன் மனைவியின் வரவை எதிர்பார்த்து விழித்திருந்தான். நேரமோ நடுநிசிக்கு மேலாகி விட்டது. ஊருக்குள் போய் சாப்பாடு ஏதாவது கொண்டு வருவாள் என்று எண்ணியல்லவா, காத்திருந்தான்? முன்னேரத்திலேயே சென்றவள் ஏன் இன்னும் வராதிருக்கிறாள்? பசியோ வாட்டுகிறது. தொண்டை வறளுகிறது.

மனித அரவமே பக்கத்திலில்லை. பக்கத்தில் ஆற்று வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் ஓடும் இரைச்சல் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. அவனாக எழுந்து எங்கு சென்று யாரிடம் ஒரு பிடி அன்னம் பிச்சை கேட்க முடியும்? அதிலும் அந்த நடுநிசியில்? தண்ணீராவது குடித்தாக வேண்டும்! நா உலர்ந்து தண்ணீருக்காக மன்றாடுகிறது. வேறு வழியின்றி மெதுவாய் எழுந்து ஊன்றுகோலை எடுத்து நடந்து சென்றான். ஒவ்வொரு படியையும் ஊன்றுகோலால் நிதானித்துத் தெரிந்து கொண்டு படிகளில் இறங்கலானான். ஒன்று இரண்டு......மூன்று, அவ்வளவு தான்! கால் சறுக்கி விட்டது. தண்ணீரில் தொப்பென்ற ஒரு சத்தம்.........

பலியை ஏற்றுக்கொண்டும் வெள்ளம் எப்பொழுதும் போல் சுழித்துச் சுழன்று ஓடிக்கொண்டு தானிருந்தது.

* * *

மறுபடி தோணித் துறையில்.

விடியற்காலம்!

மந்திர சக்தியால் கட்டுண்டு மயங்கிக் கிடந்த பூமிதேவி இளஞ் சூரியனின் பொற் கிரணங்கள் பட்டதும் புன்னகையுடன் விழித்தெழுந்தாள். மரம் செடி கொடிகளில் மூடுண்டிருந்த இலை இணுக்குகள் விரிந்து நிமிர்ந்தன. கொத்துக்கொத்தாய் மரக் கிளைகளில் தொங்கிய காய் கனிகள் காலை காற்றில் அசைந்து கொடுத்தன கரையிலிருந்த வானளாவும் மரங்களின் நிழல் நீர் மட்டத்தின்மேல் வீழ்ந்து அலைகளில் அலைப்புறுகின்றது.

கலகலப்பால் கண்விழித்த மயிலி எழுந்து உட்கார்ந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தாள். பங்காருவைக் காணவில்லை. அவள் இருதயத்தில் மின்னல் போன்று ஒரு வேதனை பாய்ந்தது. கண்ணுக்கெட்டிய வரையிலும் அவன் உருவம் தட்டுப்படவில்லை. ஆற்றில் இன்னும் ஓடம் செலுத்த ஆரம்பிக்கவில்லையே. அவன் எங்கு போயிருக்கக் கூடும்? அவளுடைய மூளை யோசனை செய்ய மறுத்து விட்டது.

மயிலி உன்மத்தம் பிடித்தவள் போலானாள். அவள் கண்கள் நினைப்பற்று வெறும் வெளியை நோக்கியது. ஒரு வண்ணாரப் பூச்சி ஆகாயத்தில் பறந்து அவள் பார்வைக்கு நேராய் வந்தது. சிவப்பும், கருப்பும், வெள்ளையுமான நிறங்களுடன் கூடிய அதன் அழகிய இறக்கைகளைப் பராமுகமாய் அவள் கண்கள் பின்பற்றின. பக்கத்தில் பூத்துக் குலுங்கி நின்ற ஒரு குத்துச் செடியின் பூவில் அந்த வண்ணாரப்பூச்சி உட்கார்ந்தது. மறு நிமிஷம் பூவின் இதழ்களுக்குள் பாதிக்கு மேல் மறைந்து மதுவை உண்டதும் பிறகு பறந்து விட்டது. தேனை உண்ட பின் வண்ணாரப் பூச்சி பூவை விட்டுப் போய்விட்டது. வாஸ்தவந்தான்.

உடைந்த மனமும் அழுத கண்ணுமாய் மயிலி எழுந்து விரைந்து நடந்தாள். ஆற்றங்கரை மண்டபம் வந்து சேர்ந்ததும், தன் புருஷன் இருந்த இடத்தில் பார்வையைச் செலுத்தினாள். அவ்விடம் வெறுமையாய் இருந்தது. படிகளில் வேகமாய் மோதிச் செல்லும் நீர்த் திரைகள் அவளைப் பார்த்துச் சிரிப்பது போல் 'ஓம், ஓம்' என சப்தமிட்டுச் சென்றது.

விளையாட்டு வலுக்கிறது. ஒளிந்து கொள்பவர் தேட, முன் தேடினவர் ஒளிந்து கொள்கின்றனர். இப்பொழுது தேடுபவர் திறந்த கண்களுடனேயே ஒளிந்து கொள்பவர்களைத் தேடிப் பிடிக்க வேண்டும்!

[P. S. G. Printing Year Book 1943.
Printed at the P. S. G. & Sons' Charity Industrial Institute Press, Peelamedu.]

மேலே கண்ட அழகிய புத்தகத்தைச் "சித்திரப் புத்தகம்" என்று சொல்வதுதான் முற்றும் பொருத்தமாயிருக்கும். ஏனென்றால் கண்ணைக்கருத்தை கவரும் பல அருமையான வர்ணப் படங்களுடன் தேஜோமயமாகப் பொலிகிறது இந்த மலர்.

மேல் நாட்டுச் சித்திரத் தொகுதிகளைக் காணும் போது, "இப்படித் தமிழில் வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று நான் எண்ணுவதுண்டு. அந்த ஆவலைப் பூர்த்தி செய்வதாயிருக்கிறது பி. எஸ். ஜி. யாரின் இந்த நல்ல முயற்சி.

அச்சுக் கலை சம்பந்தமாக சிறந்த ஆங்கிலக் கட்டுரைகளும், ஒரு தமிழ்க் கட்டுரையும், பலவர்ணப் படங்களும் மலரை அலங்கரிக்கின்றன. இதில் இன்னொரு விசேஷமென்னவென்றால், பி. எஸ். ஜி. இன்ஸ்டிடியூட்டில் பயிலும் மாணவர்களாலேயே இச் சிறந்த புத்தகம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. நிர்வாகிகளுடைய இம்முயற்சியை பெரிதும் பாராட்ட வேண்டும்.

எந்தக் கலையும் வளர்ச்சியடைய வேண்டுமானால் பாங்காக போற்றி வளர்க்க வேண்டும். டி. கே. சி. ஒருசமயம் ரொம்ப நல்ல உதாரணமொன்று சொன்னார்: "உருளைக் கிழங்கு சாகுபடி செய்ய வேண்டும்" என்று யாரும் உபதேசம் செய்ய வேண்டியதில்லை. உணவு சம்பந்தமாக எல்லோரும், சொல்லாமல் கொள்ளாமல் செய்து கொண்டு விடுவார்கள். ஆனால் தாமரைத் தடாகத்தை நன்றாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்."

அச்சுத் தொழிலைப் பற்றி பி. எஸ். ஜி. ஸ்தாபனத்தார் எடுத்துக் கொண்டுள்ள சிரத்தை போற்றுவதற்குரியதாகும்.

'ரதி'

கிடைக்கப் பெற்றோம்

1. குண்டலகேசி அகவல்:
2. சதாசிவ ப்ரம்மம்:
   ஆசிரியர்: சுவாமி சுத்தானந்த பாரதியார். பிரசுரம்: அன்பு நிலையம். விலை: 4-அணா; 2-அணா.

காந்தி யார்?:
ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா பிரசுரம்: தமிழ்ப் பண்ணை. விலை 8-அணா.

1. இன்பப் பொழில்:
2. கோசலைச் செல்வன்:
   தொகுப்பாசிரியரும் ஆசிரியரும்: ப. நீலகண்டன். பிரசுரம்- கலை வாணிக் கழகம். விலை: 14-அணா 10-அணா.

1. அகலிகை வெண்பா:
2. தனிக்கவித் திரட்டு:
3. இராமாயண உள்ளுரை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்: 4. சருவசன செபம்:
   ஆசிரியர்: தமிழ்ப் பெருங்கவி, முதுபெரும் புலவர் ராவ்சாகிப் வெ. ப. சுப்ரமணிய முதலியார் அவர்கள். ஜி. பி. வி. சி. பிரசுரம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். விலை: ராப்பர் 10-அணா, காலிக்கா 1. ரூ.; 8-அணா; காலணா.

1. கோம்பி விருத்தம்:
2. சுவர்க்க நீக்கம்:
   ஆசிரியர்: தமிழ்ப் பெருங் கவி முதுபெரும் புலவர் ராவ்சாகிப் வெ. ப. சுப்ரமணிய முதலியார். 1. பதிப்பாசிரியர் டி. கே. சி. 2. பிரசுரம் அல்பேனியன் அச்சுக்கூடம், விலை 8-அணா.

கல்வி விளக்கம்: (முதற்பாகம்)
ஆசிரியர்கள்: எஸ். வி. கண்ணபிரான் பிள்ளை, சி. அப்பாவு பிள்ளை ராவ்சாகிப் வெ. ப. சுப்ரமணிய முதலியார். பிரசுரம்: அல்பேனியன் அச்சுக்கூடம்.

எண்ணக்கடல் :

கன்னிப் பெண்

திருஞானம்

ஒரு அழகியை, நமக்கு மிகவும் பிரியமான ஒரு அழகியைப் பற்றி நினைக்கும்போது மனதிலே எப்பேர்ப்பட்ட இன்பகரமான ஆனந்தம் ஊற்றெடுக்கிறது? அப்பேர்ப்பட்ட ஆனந்த வெள்ளம் என் உள்ளத்திலே பெருகிக்கொண்டிருந்தது. நான் நடந்து போய்க் கொண்டிருந்த ஒற்றையடிப் பாதை கல்லும் முள்ளும் கலந்து கரடு முரடாயிருந்தாலும் பூவின் மேல் நடப்பதைப் போன்ற உணர்ச்சியேதான் எனக்குள் நிறைந்திருந்தது.

ஆச்சு, எங்கள் கிராமம் இன்னும் ஒரே ஒரு மைல்தான். அதோ, செல்லியாண்டியம்மன் கோவில் கொடுமுடியும் தென்படுகிறது. அதைத்தாண்டினால் ஊர் முகப்பில் முன்னால் இருக்கிறது பெரிய வீடு. வீட்டின் வாயிலிலே என் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு சரஸ்வதி நின்றிருப்பாள் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கலாம் போல் இருந்தது!

மூன்று வருஷம். அடேயப்பா! பட்டணத்தில் படிப்புக்காக கழித்த வருஷங்களை நினைத்தாலே எரிச்சல் வருகிறது. அதுவும் சரஸ்வதியைப்பிரிந்து வேண்டாத விஷயங்களோடு "மார்" அடித்துக் கொண்டிருப்ப தென்றால் யாருக்குத்தான் வயிற்றெரிச்சல் வராது?

பாழும் படிப்பு. சை. இப்போது அதையெல்லாம் என் ஞாபக மூட்டிக் கொள்ள வேண்டும். தெவிட்டாத தேன் ததும்பும் காக்ஷிகள் கண் எதிரே தெரிகையில் அபத்தங்களைப்பற்றி இப்போது என்னத்திற்கு வீண் சர்ச்சை?

சாதாரணமாகவே காட்டுப் பாதைகளுக்கிடையே நடந்து செல்வதிலும், கையால் வேலியை ஒதுக்கி வழி பண்ணிக் கொண்டு போவதிலும்எனக்குஎப்போதுமே ஆசை அதிகம். அன்றையக் காலைப்பொழுது ரொம்பவும் ரஞ்சிதமா யிருந்தது. திராக்ஷை பச்சையாய் 'ஜிலு ஜிலு' என்று ராகி நாற்றுகள் அசைந்துகொண்டிருப்பதும், புதிதாக கொழுந்து விட்ட வேப்பம் பூக்கள் 'ஜம்' என்ற மணத்துடன் வழி நெடுக நிறைந்திருப்பதும் சுற்றுப்பக்க காடுகளிலே வெடித்திருந்த வெள்ளைவேளேரென்ற பருத்திகள் இளவெயிலில் மின்னிக்கொண்டிருப்பதும் பார்க்கப்பார்க்க ஒரே பரவசக்காட்சியாய் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக சரஸ்வதியின் எழில் வடிவம் தோன்றித் தோன்றி வித வித விந்தைக் கனவுகளைச் சிருஷ்டித்துக் கொண்டேயிருந்தது.

ஊரை விட்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் புறப்பட்ட போது சரஸ்வதியும் கூடவே வந்து வழியனுப்பிய பாதைக்குப் பக்கத்தில் வந்ததும் ஏனோ என்னையறியாமல் கால்கள் சங்கின, சற்று நேரம் அங்கு நிற்க வேண்டும்போல் தோன்றியது. அவள் தயங்கித் தயங்கி கலங்கிய கண்களுடன் தோட்டத்திற்கு சென்ற காட்சியை நினைவூட்டிக்யதும்

அவள் சென்ற திக்கை பார்த்தபடி வெறி பிடித்தவன் போல் நின்று விட்டேன்.

'என்ன தம்பி, இப்படி உட்டது உட்டமாதிரி பாக்கறே. அடையாளம் மாறிப்போச்சா ?'' என்ற குரல் கேட்கவும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தேன்.

பக்கத்துக்கிராம நாலைந்து நண்பர்களும், என் சொந்தக்காரர்களில் சிலரும் என் எதிரில் நின்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்ததையே நான் கவனிக்கவில்லை. சந்தன தாம்பூலத்தோடு கலியாணக் கோலத்தில் அவர்கள் காட்சியளித்ததைக் காணவும் சட்டென்று என்னைச் சமாளித்துக் கொண்டு பேச்சைத் தொடங்குவதற்கு ரொம்பவும் சவுகரியமாய் இருந்தது.

''சரிதான், நல்ல சமயத்தில் நானும் வந்து சேர்ந்தேனென்று சொல்லுங்கள்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னே.ன்

''ஆமாம் அப்பா, நீ இப்ப வருவீண்ணு உங்க மாமன் கூட சொன்னங்க. சரஸ்வதி ஊட்டிலும் நீ வருவாயிண்ணு பேசிக்கிட்டு இருந்தாங்க'' என்ருர் ஒருவர்.

''சரஸ்வதி'' என்றதும் எனக்குத் 'திக்'கென்றது.

''யாருக்குக் கலியாணம்'' என்றேன், என் பதைப்பை வெளிக்கு காட்டாமல்.

''நம்ம சரஸ்வதிக்குத்தானப்பா''

''சரஸ்வதிக்குக் கலியாணம்''!

என் மனதிலே நூராயிரம் எண்ணங்கள் எழுந்தன. என்ன, நான் கேட்டது நிஜந்தான? சரஸ்வதிக்குக் கலியாணம். உம்...... சரஸ்வதி ஒத்துக்கொண்டாளா ? ஆமாம், அவள் உடன் படாமலா சந்தன தாம்பூலத்துடன் விருந்தினர்கள் சாப்பிட்டு விட்டுப் போகிருர்கள் ?

'' சரி, போயிட்டு வருகிறீர்களா?'' என்று அவர்களைத் தாட்டிவிட்டு ஊரை நோக்கி விரைவாக நடந்தேன்.

விரைவாக நடக்க வேண்டுமென்று மனம் விரும்பியதே தவிர கால்கள் பின்னிக் கொண்டன. நடை தளுங்கியது. வந்த வழியே திரும்பிப் போய் விடலாமா என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனல் ......ஆனல்......ஏனே அப்படிச் செய்ய என்னுல் முடியவில்லை.

எனக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. யார் மேல் ? அவள் பெற்ருேரிடமா? அல்லது என் பெற்ருேர்களிடமா? இல்லை என்னிடமேயா? தப்பு தப்பு, விதியினிடத்திலா ?

இந்தச் சமயம் 'விதி பெரிதா ? மதி பெரிதா?' என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் சக்தியை நான் இழந்து விட்டேன். உம், சரஸ்வதி நான் போகும்போது சொன்னள்: ''மூன்று வருஷமானலென்ன? முப்பது வருஷமானலென்ன? உங்களை மறுபடியும் சந்திக்குமுன் சரியாகத் தூக்கங் கூட வராதே''. அப்படி சரஸ்வதி சொன்னதெல்லாம் வெறும் வேஷம்தான? அல்லது ஏதாவது நாவலில் கீவலில் படித்துவிட்டு அப்படியே என்னிடம் பாடம் ஒப்பித்து விட்டாளா ?

'சரஸ்வதி...நீ கூடவா அப்படி செய்தாய்?'' இல்லை இல்லை, அவள் ஒருக்காலும் இந்த விவாகத்திற்கு உடன் பட்டிருக்கவே மாட்டாள். பின்னே ? என் தகப்பனர். அவர் தான் முன்னமே பிடிவாதமாயிருந்தாரே? ''நம்முடைய சொத்தென்ன காரியமென்ன, கணக்கென்ன. தராதரம் பார்க்

காமல் எந்தக் காரியத்தையும் செய்யலாமா?'' என்று என்னென்னமோ ஆக்ஷேபணைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். அம்மாதான் தடுத்துச் சமாதானம் அடிக்கடி சொல்லி வந்தாள். அதெல்லாம் வெறும் 'மெப்'புக்குச் சொல்லியது என்பது இப்போதல்லவா தெரிகிறது? ஓஹோ! இரண்டு பேருமாகச் சேர்ந்துதான் நாடகத்தை நடத்தினர்களா? நடத்துகிறதா? முடித்து விட்டார்களே. சரி, இந்த முடிவுக்குத் தகுந்த பதிலை நான் அளித்து விடுகிறேன். கறியைத் தடவி விட வேண்டியதுதான். சரியான தண்டனை அதுதான். உம்......அம்மா நொந்து கொள்வாள்..............அழுவாள். அழுது சாகட்டும்!

காலைக் காற்று "ஜில்" லென்று அடித்தது; மரநிழலில் அப்படியே நின்று விட்டேன். 'என்ன பண்ணுவது' என்று ஒன்றுமே தோறன்வில்லை. குளிரில் நடுங்கிக்கொண்டே ஒரு ஆட்டுக்குட்டு வேலியோரம் கிடந்த பூண்டு பொடிகளைக் கூட கடிக்கவில்லை. நான் பெருகி வரும் வியர்வையை அடிக்கடி துடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

கங்கையின் தண்ணென்ற புனலிலே ஆனந்தமாக நீராடிக் கொண்டு உல்லாசமாக மாந்தளிர்க் குளுமையிலே மூழ்கி முழுகி ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தேனே. ஐயோ, திடீரென்று அக்கினியாற்றிலே யாரோ தூக்கி எறிந்து விட்டார்களே, இந்த வெப்பத்தைப் பொறுத்துக் கொள்வதைப்பற்றி எனக்கு கவலையில்லை. ஆனல் முன்னைய குளிர்ச்சியைப்பற்றி இனிக் கற்பனை பண்ணக்கூட முடியாதே? இதற்கு விடிவே கிடையாதா?

மற்றவர்கள் எல்லோரையும் விட சரஸ்வதியிடம்தான் அதிகக் கோபம் வந்தது. "கட்டிக் கொள்ள முடியாது" என்று ஒரே யடியாக மறுத்து விடுவதற்கு என்ன? பலவந்தம்...... பாழாய்ப்போன பலவந்தம் என்ன செய்து விடும்? பிராணன்தான் போகட்டுமே? நான், அவள் கலியாணச் சங்கதியைக் கேட்டதைவிட மரணச் செய்தியைக் கேட்டிருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அப்போதுதான் என்னுடைய பைத்தியக் காரத்தனம் எனக்குத் தெரிய ஆரம்பித்தது. இவளுக்காகவா அழகும் குணமும் உள்ள எத்தனையோ அழகிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு எல்லாவற்றையுமே பாழ்படுத்திக் கொண்டேன்?

பட்டணத்தில் நான் குடியிருந்த பங்களாவின் மேல் மாடியில் ஒரு கௌரவமான குடும்பம் இருந்தது. சொத்தும் நிறைய உண்டு. பெற்றோருக்குச் செல்லமாக ஒரே ஒரு பெண். அந்தப் பெண்ணை அருமையாக வளர்ப்பதிலேதான் அவர்கள் கவனத்தைச் செலுத்தினர்கள். சங்கீதம், நாட்டியம் எல்லாம் வீட்டிலேயே சொல்லிக் கொடுத்து பெண்ணை ரொம்பவும் செல்லமாக வளர்த்து வந்தார்கள். என்னிடம் அவர்களுக்கு அத்யந்த பிரியம். நான் இஷ்டப்பட்டிருந்தால் அவர்கள் பெண் பத்மாவை மணப்பதில் ஒரு தடையும் இருந்திருக்காது. ரொம்பவும் யதார்த்தமான சுபாவம். பத்மாதான் ஆகட்டும், எவ்வளவோ அன்புடன் அல்லவா நடந்து கொண்டாள்? சுவை ததும்பும் இரண்டொரு காட்சிகளை நான் சுலபத்தில் மறந்துவிட முடியுமா?

அம்மன் கோவில் மணி "கணி கணீர்" என்றடித்தது. ஏத்து இறைத்துக் கொண்டிருந்தவர்கள், பழைய சோறு தின்பதற்காக ஏத்தை நிறுத்தி விட்டு, வாய்க்கால்

ஓரங்களிலும் வாறி வெளியிலும், பனங்கருக்குப் பக்கத்திலும் போய் உட்கார்ந்தார்கள். நான் நிழலில் "பகற் கனவில்" ஆழ்ந்து விட்டேன்.

பத்மாவதி ஒரு நாள் சொன்ஞள்: "நாட்டியம் என்ருல் உங்களுக்கு உயிர் ஆச்சே. இன்றைக்கு என் நாட்டியத்தைப் பார்த்து எப்படி இருக்கிறது என்று சொல்லக் கூடாதா? நீங்கள் என்ன சொன்னுலும் இதைப் பழகிய பலன் கிடைத்து விட்டதாக எண்ணிக் கொள்வேன்" என்ருள்.

அவள், எங்கே ஆடப்போகிருள் என்பது நிச்சயமாகத் தெரியவில்லே. தவிர அவள் 'கச்சேரி'யா செய்யப் போகிருள்? அதை உத்தேசித்தா பெற்ருேர் நாட்டியம் கற்பித்தார்கள்?

நான் தயங்குவதைக் கண்டு, "சொல்வதை எல்லாம் அப்படியே நம்பி விடுகிறீர்களே? நாட்டியம் இங்கேதான் நடக்கப்போகிறது. அம்மா கோயிலுக்குப் போயிருக்கிருர்கள். அப்பாதான் ஊரில் இல்லேயே. யார் இருக்கிருர்கள்? நீங்கள் மேலே வந்து பாருங்களேன்" என்ருள் பத்மாவதி.

அவள் "அழைப்பை" மறுக்க எனக்கு மனம் வரவில்லே. தூய அன்புடன் அவள் சொல்கிருள் என்பதும் எனக்குத் தெரியும்.

"சரி, வாருங்கள்" எனறு மேல் மாடிக்கு அழைத்துச் சென்ருள் பத்மா. சற்று நேரத்தில் அவள் "அலங்காரி" யாகக் காட்சி தந்தது எனக்கு இன்னும் வியப்பாகத்தான் இருக்கிறது. இளமையின் வனப்புப் பொங்கும் அவள் அங்கங்கள் நாட்டியத்திற்கு மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது. மைதீட்டிய கருவிழியிலும், அவளுடைய ஒவ்வொரு அசைவுகளிலும் பாவம் கொப்புளித்துக் கொண்டு நிறைந்திருந்தது. கூந்தல் இயற்கையிலேயே இடைவரை நீண்டு தொங்கிக் கொண்டிருப்பதை அன்று அற்புதமாக மலர்சூடிப் பின்னியிருந்தாள்.

பத்மாவின் நாட்டியம் ஆரம்பமாயிற்று. எந்தச் சமயத்தில் அதை நினைத்தாலும் உள்ளத்திலே தனியான ரசங்களெல்லாம் மாறி மாறிப் பிறக்கிறது.

ஆகா! கலா விற்பன்னர்கள் நிறைந்த பெரிய சபையிலே இவளுடைய நாட்டியக் கச்சேரி நடை பெற்றிருந்தால் வந்து குவியும் புகழ் மாலேக்குக் கணக்கு வழக்குண்டா? நாட்டியக்கலேயிலே பூரணத்வம்பெற்ற கலாதேவி போல சின்னஞ்சிறு நெளிவுகளிலும் அருமையாகத் தன் திறமையைக் காட்ட எப்படித்தான் கற்றுக்கொண்டாளோ? 'ஒரே அற்புதம்' என்று எண்ணிக்கொண்டேன். ஆனல் பத்மாவின் நாட்டியத்தை பார்த்துக் கொண்டிருக்கையிலே இன்னெரு மனேகர நினைவும் உள்ளத்தில் ஊற்றெடுத்தது.

கண்ணெதிரே பத்மா ஆடிக் கொண்டிருந்தாள். ஆனல் இதய அரங்கில்? , சரஸ்வதியல்லவா அங்கு நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கிருள். பத்மாவைத்தான் கண்கள் பார்த்தனவே தவிர இடைவிடாது சரஸ்வதியின் நாட்டியத்தையே மனம் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

எங்கோ வெகு தூரத்திலே இயற்கையன்னேயின் மடிமீது தலே சாய்த்துப் படுத்துக்கொண்டு தன் அன்பனுடைய வருகையை எண்ணி எண்ணியே மனம் மகிழ்ந்து கொண்டும், கண்ணீர் விட்டுக் கொண்டுமிருக்கும் அந்தக் கிராமிய லக்ஷ்மியையே நான்

கண்டேன். அக் கட்டழகியின் குவிந்த கரங்களை எனக்கு காட்சி அளித்தது. மலர் முகமே 'வா' வெனக் கொஞ்சியது. அவள் புன்னகையே மனதில் பித்தேற்றிற்று. அந்த அழகியின் இதயத் துடிப்பே என் உள்ளத்தில் எதிரொலித்தது. சரஸ்வதியை அப்படிப் பட்டதொரு தவிப்பும் தாபமும் நிறைந்த கோலத்தில் வைத்துப் பார்ப்பதேதான் எனக்கு மிக மதுரமாயிருந்தது.

ஆனால் அந்தச் சரஸ்வதி இன்றைக்கு என்ன செய்தாள்? அவனையே சதா கற்பனை பண்ணிக் கனாக் கண்டு கொண்டிருந்த கோமள நினைவுகளை சிதற அடித்து விட்டாள். அரும்பாடு பட்டுச் செய்த அழகிய சிலையை ஒரு நொடியில் உளி கொண்டு வெட்டிய மாதிரி எல்லாம் பாழ் படுத்தி விட்டாளே!

இல்லை. சரஸ்வதி இந்தக் கலியாணத்திற்கு சம்மதித்திருக்கவே மாட்டாள். 'இத்தனை நாள் பழகியும் இன்னும் அவள் குணத்தைத் தெரிந்து கொள்ளவில்லையே,

என்று ஒரு சிறு குரல் எனக்குள் சொல்லியது.

"ஏறு" வெயில் கொஞ்சம் கொஞ்சமாக உறைக்கத் தொடங்கியது. ஆனால் என்பாட்டுக்கு ஒன்றையும் கவனியாமல் யோசனையில் மூழ்கி விட்டேன்.

சரி, யார் இந்தக் கொடூரத்திற்குக் காரணகர்த்தா? வேறு யார், என் தகப்பனார்தான். என் ஆத்திரம் அதிகரித்தது. முதலியார் தம்முடைய கௌரவத்தை மேலாகக் கவனித்துக் கொண்டாரா? அப்படியானால் அவருடைய கௌரவத்தை பிள்ளை காப்பாற்ற வேண்டியது ரொம்பவும் நியாயந்தான். அதற்காக இப்போதே உடனே திரும்பிப் போய் தெருவில் திரிகிற பிச்சைக்காரி ஒருத்தியை கட்டிக்கொண்டு வந்துவிட வேண்டியது. "எங்கோ கோவிலில் வைத்து கலியாணம் பண்ணிக் கொண்டு வந்து விட்டேன்" என்று சொல்ல வேண்டியதுதான். கோவிலில் வைத்து என்னத்திற்குக் கலியாணம் பண்வது? 'கூட்டிக்கொண்டு வந்து விட்டேன்' என்று கூசாமல் சொல்கிறேன். அந்தப் பிச்சைக் காரப் பெண்ணுக்குப் புது ஆடை கூட வாங்கிக் கொடுக்காமல் தகப்பனார் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி, "அப்பா, காதல் ஒன்றையுமே லக்ஷியம் பண்ணாது. ஆடை, அழகு, குலம், கோத்திரம், ஏன்- கௌரவம் இவை யெல்லாவற்றிற்கும் அப்பாற் பட்டதாக்கும் காதல்" என்று சொல்லப் போகிறேன்.

இதைக் கேட்டுவிட்டு ஸ்ரீமான் முதலியார் அவர்கள் ஒன்றும் தோன்றாதவராய் அப்படியே நிலைத்து நிற்கவேண்டுமாக்கும்; அக்கம், பக்கத்து கவுண்டன் காணியாளன்" என்னுங்க முதலியாரே, வெடிய வெடிய நாங்க சொன்னதே கேக்காமெ பையனை பட்டணத்துக்கு அனுப்பி படிக்க வெச்சது கடைசியிலே இப்படியா வந்து முடிஞ்சிது.........நானையும் பின்னே தண்ணி வெண்ணி கூட வளவிலே வாங்கிக் குடிக்கிறதுக் கில்லாமே பயன் பண்ணீட்டானே"? என்று சொல்லி முகத்தில் 'இடி'த்துக் காட்டவேண்டும். அப்போது தெரியும் முதலியாருக்கு எது பெரிது என்று.

முதலியார் மனமுடைவதோடு மட்டுமா அந்தக் காட்சியை நிறுத்துவது? அவள் இருக்கிறாளே, அவள்தான் சரஸ்வதி. நேராக பிச்சைக்கார மனைவியை கையோடு கை கோத்துக் கூட்டிக் கொண்டு சரஸ்வதியிடம் போய், "உன் சகோதரியை வாழ்த்த வேண்டாமா? பெண் எப்படி என்று பார்த்துச் சொல்லு, இவள் சொன்னபடி நடப்பாளா? அது போகிறது. சரஸ்வதி, உன் சகோதரியை மனமார வாழ்த்து" என்று சொல்ல வேண்டும்.

சரஸ்வதி இடி விழுந்தவள் போல் மலைத்துப்போய் அசையாது நிற்க வேண்டும்!

இன்னும் என்னவெல்லாமோ இப்படி யெல்லாம் எண்ண மிட்டேன். ஆனாலும் பாழும் மனம் கேட்கிறதா? ஒரு விதமாக ஊர் போய்ச் சேர்ந்து சலிப்புடன் உள் ஹாலில் உட்கார்ந்தேன்.

நான் உட்கார்ந்தேனோ இல்லையோ அந்தப்புர அறைக்கதவை வெகு வேகமாகத் திறந்து கொண்டு, "வந்து விட்டீர்களா" என்று கலகலென்று சிரித்தபடி கேட்டுக் கொண்டே வந்து நின்றாள் சரஸ்வதி.

ஆச்சரியத்தையும் பதைப்பையும் வெளிக்காட்டாமல், "சரஸ்வதிக்குக் கலியாணம்......" என்று மெதுவாகச் சொன்னேன்.

"என்ன, மாப்பிள்ளை இல்லா மலா?' என்று கேட்டாள்.

நான் ஒன்றும் பேசவில்லை.

"ஓ ஹோ, மேக்கால் வீட்டுச் சரஸ்வதியின் கலியாணத்தைச் சொல்கிறீர்களா?"

ஏறிட்டு அவளைப் பார்த்தேன். கழுத்தில் தாலி இல்லை. அவள் கன்னிப் பெண்!

"சரஸ்வதி என்று கேட்டதும் உன் நினைவே எனக்கு வந்து விட்டது" என்றேன்.

"அது ஒன்றே மனதை அலட்டிக் கொள்ளப் போதுமே" என்று சொல்லிச் சிரித்தாள் சரஸ்வதி.

மலர் மணம்

பூக்கடைக்கு விளம்பரம் வேண்டியதில்லை.

டி. கே. சி. என்ன, ஆர். கே. எஸ். என்ன, ராஜாஜி என்ன, இந்தப் பெயர்களைச் சும்மா பார்த்துக் கொண்டே இருக்கலாமே! அதோடு சுவாமி சுத்தானந்த பாரதியார், ஆர். ஷண்முக சுந்தரம் இன்னும் மற்ற வர்களைப் பற்றி அடேயப்பா, சொல்லிக் கொண்டே போனல் இடம் காணது!

ஆனலும் சில சமயம்-அதுவும் கலை என்று வந்து விட்டால் சொல் லத் தான் வேண்டியிருக்கிறது. இதில் விளம்பரமோ, தற்புகழ்ச்சியோ என்ன இருக்கிறது?

கம்பன் பெரிய கவிதான். ஆனல் யூனிவர்ஸிடிகளுக்கும், பண் டிதர்களுக்கும் தெரியவா செய்தது? முத்தொள்ளாயிரத்திலிருந்து அண் ணமலை ரெட்டியார் காவடிச் சிந்து வரை டி. கே. சி. எடுத்து துப்புற வாக தெளிவு படுத்தி, கவி இன்னது, பாவம் இன்னது, கவியின் இதயம் இப்படிப் பேசுகிறது என்று சொல்லத்தானே நமக்கு விளங்க ஆரம் பிக்கிறது.

அது ஒரு பக்க மிருக்கட்டும். விஷயம் கொஞ்சம் ஒட்டி வந்ததால் அதை இங்கே சொல்ல வேண்டி வந்தது. இப்போது சொல்ல வந்த சங்கதி வேறு.

பல் அன்பர்கள் 'வசந்த'த்தை பாராட்டுகிறுர்கள். "விசுவரூபம். ஆகா! விசுவரூபமேதான். ராஜாஜி, ஆம். ராஜாஜி ஒருவரால் தான் அப்படி விளக்கமுடியும்." இப்படி ஆச்சரியக் கடலில் மூழ்கி ஆனந்த மடைகிறவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? அறிவிலும் அனுபவத் திலும் முதிர்ந்த பெரியோர்கள் முதல் நம்முடைய சகோதர ஆசிரியர் கள் வரை என்றுல் பார்த்துக் கொள்ளுங்களேன். இம்மாதிரி ஆனந் தத்தை நண்பர்களோடு பங்கிட்டுக் கொள்ளாமல் இருக்க முடியுமா?

"குளிர்ந்த காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. எங்களைச் சுற்றிலும் மலைகளின் ஆழ்ந்த அமைதி. எதிரிலுள்ள கற்பூரமரச் சோலையிலிருந்து மெல்லிய மணம் காற்றில் கலந்து வீசிக் கொண்டிருப் பது ஜன்னல் வழியாகவும் வந்தது.........இயற்கை தரும் இந்த இன்பம் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டது. என்னுடைய நண்பர் கனவிலிருந்து விழித்தவர் போல்........."

ஆகா! இனிமையான ஒரு கவிதையைப் படிப்பது போலல்லவா இருக்கிறது? கலைஞன் உள்ளத்தைத் தவிர இப்பேர்ப்பட்ட சிந்தனைகள் உதிக்க முடியாதே என்று எண்ணத் தோன்றுகிற தல்லவா? ஆம், அந்தக் கலைஞர் யாரென்று தேடிப் படித்துப் பாருங்கள்.

உலகம் தோன்றிய காலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்ட கா. ஸ்ரீ. ஸ்ரீயின் சிந்தனைச் சித்திரமும் பொதிகையின் இன்பம் போன்று மனதை மகிழ்விக்கும் 'சுகி' யின் புதுக் கதையும், லக்ஷிமி வரைந்த மனித குணத்தின் ஆசாபாசமும் சுவை மிகுந்து விளங்கு வதைக் காணலாம். கதைகளின் நடையோ இனிய கானம் போன்றே இருக்கிறது.

இன்னும் இந்த இதழில் சுவாமி சுத்தானந்தர், "கதை இனித்தான் வேகத்துடன் செல்லும்" என்று சொல்லுகிறார்கள். சுவாமிகளுக்கே அமைந்த தனி நடையில் வாழ்வோடு சேர்த்து பொன்னும் மணியும் கலந்தது போல் அருமையாகக் கதையைப் பின்னிக் கொண்டு போய் நம்மை அறிவும் இன்பமும் நிறைந்த அற்புத உலகுக்கு அழைத்துச் செல்லுகிறார்.

ஊர்ப் பெயர்கள் மாறுவதைப் பற்றி இராமச்சந்திரன் செட்டி யார் அவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள். கதையும் காரணமும் படிப் பதற்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது.

பேர்ப் பெயர்கள் (!) மாறுவதிலும் ஒரு விசித்திரம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வது போல் ஒரு நாடகம் அமைந்திருக் கிறது. அலாவுத்தீன் கதை நமக்கெல்லாம் தெரியும். ஆனால் கிலாவுத் தீன் கதை தெரிய நியாயமில்லைதானே? சாதாரண அற்புத விளக்கிற்கு பதிலாக புது யுகத்துக்கு மின்சார விளக்கும், பூதமும் வரும் இந்த நாட கத்தைப் படித்தால் (அனுமதியுடன் நடித்தாலும் நடிக்கலாம்) வேண் டிய மட்டும் சிரிக்கலாம்.

வாழ்க்கைக்கும் கலைக்கும் சம்பந்தமுண்டா? கலையோடு கலந்த வாழ்வு எப்படி இருக்கும்? வாழ்வின் லட்சியம் தான் என்ன? இன்பம், இன்பம் என்று சொல்கிறார்களே அது எங்கே இருக்கிறது? நான் என்னவோ பெரிய தத்துவ விசாரணையில் இறங்கி விட்டதாக நினையா தீர்கள். இந்த இதழில் வெளியாகி யிருக்கும் நண்பர் தீபன் அவர்களு டைய கலைக்கடிதம் தேடுதற்கரிய ஒரு செல்வம். நல்ல பண்பாட்டுக்கு ஏற்ற ஒரு அருமையான விளக்கம்.

சென்ற இதழில் வெளியான எதிரொலி என்னும் சிறுகதை பல உள்ளங்களில் எதிரொலித்ததை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அந்தக் கதையை எழுதிய விஜயராகவன் இந்த இதழில் 'பூங்கொடி' என்ற மென்மையான சிறுகதையைச் சித்திரித்திருக்கிறார். கதையைச் சித்திரிக்கும் சித்திரத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்! பார்த்துக் கொண்டே இருக்க வேண்டிய வர்ணப் படம் அது.

நம்முடைய மூவர்ண முகப்புச் சித்திரத்தை அநேகம் அன்பர்கள் புகழ்ந்தபடியால் மூன்று முறை வித விதமாக அந்த 'அழகுக்கு அழகு' செய்தோம்.

இனி, மாதா மாதம் தமிழ் மணம் கமழும் சித்திரங்கள் முன் அட்டையை அலங்கரிக்கும்.

ஆசிரியர்.

வின் சென்ட் தியேட்டர்ஸ்

விளம்பரங்கள்

கோவை நகரின் மத்தியில் நவீன வசதிகள் நிறைந்த

எங்கள் மூன்று சினிமா தியேட்டர்களிலும்

இன்று முதல் நடைபெறும் படங்கள்

16—6—43

முதல்

பாலசில்



ஜார்ஜ் ப்ராம்பி

நடித்த

சங்கீதப்பிரியன்

(இங்கிலீஷ்)

12—6—43 முதல்

வெறைட்டி ஹாலில்

அனிஸ், மேதாப்,

அம்ஜாத்

சௌரங்கி (ஹிந்தி)

12—6—43 முதல்

எடிசன்ஸில்

10-வது வாரம்

குறைந்த சார்ஜ்

சிவகவி (தமிழ்)

வெறைட்டிஹாலுக்கு வரப்போகும் சில முக்கிய ஹிந்தி படங்கள்

கலியுக்-ஜவாப்-ஜமீன்தார்-ப்ரார்த்தனா-10 மணி

(Engagement pad) From 1st July '43 to June 30 th '44 will be available at THE ELECTRIC PRINTING WORKS.

199786

சென்னை-600 008

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

ஏஜண்டுகளுக்கு

வசந்தத்திற்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை. டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்:
வசந்தம் காரியாலயம்
கோயமுத்தூர்.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

அன்பர்களுக்கு:

வசந்தம் முன் பிரதிகள் கைவசமில்லை. ஸ்டாம்புகளோ, மணியார்டரோ அவைகளுக்காக தயவு செய்து அனுப்பாதீர்கள்.

— மானேஜர்

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கோவ்ட்"

N. தாசேகவுண்டர் & கோ.

ஏஜண்டுகள்: அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா, மெரிடினு, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்ற வகை கடியாரங்களுக்கும்.

மருந்து வகைகள், வைத்தியக் கருவிகள், நூதன சாமான்கள், எனமல் கண்ணாடி சாமான் தினுசுகள் முதலியவைகளுக்கும் சிறந்த இடம்.

இன்னும்,

உங்கள் தேவைகளுக்கு எங்களை விசாரியுங்கள்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore

வசந்தம் சந்தா விவரம்

ஒவருஷத்துக்கு ரூ	9	0	0
தனிப் பிரதி விலை அணு	0	12	0

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டால் பிரதி தமிழ் மாதம் முதல் தேதிகளில் 'வசந்தம்' உங்களைத் தேடி வந்து விடும். விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:

வசந்தம் காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்.

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.